

# மகாதேவ தேசாய்



மஹாதேவ தேசாய்

பதிப்பாசிரியர்: பி. ஸ்ரீ

# மஹாதேவ தேசாய்

[நினைவு மாலை]

வர்தா ஹிந்தி வெளியீட்டின் தமிழ்

மொழி பெயர்ப்பு:

ஹரிஹர சர்மா


பிரசுரம்:

மதராஸ் ப்ரிமியர் கம்பெனி

முழு விற்பனை உரிமை:

தமிழ்நாடு வெளியீடு

33, பிராட்வே, சென்னை

முதற்பதிப்பு : நவம்பர் 1946

விலை ரூ. 2/-

[பதிப்புரிமை.

Printed at Thompson & Co. Ltd (Minerva Press)
33, Broadway, Madras. (P. I. C. No. Ms. 15)
Published by Madras Premier Co.,
3, Perianna Maistri Street, Madras. (P. I. C. No. Ms. 39-a)

# முன்னுரை

சென்ற வருஷம் ஜூலை மாதத்தில் என் குஜராத்தி நண்பர் ஸ்ரீ வஜூ பாயி ஷா மகாதேவ தேசாயின் ஜீவிய சரித்திரம் எழுதி வெளியிட்டு, தமிழில் மொழி பெயர்க்கும்படி எனக்கு ஒரு பிரதி அனுப்பியிருந்தார். அப்பொழுது நான் சென்னையில் இருந்து வந்தேன். புத்தகம் நன்கு எழுதப் பட்டிருந்தாலும், அதை முழுதும் மொழிபெயர்க்காமல் சுருக்கமாய் எழுதினால் போது மெனக்கருதினேன். ஆனால் வேலை மிகுதியால் அதைச் செய்ய முடியாமற் போயிற்று. சென்னையிலிருந்து இங்கு வந்த பிறகும் தேக நிலை அநுகூலமாயில்லை. பின்னர் என் நண்பர் ஸ்ரீ **பிரபு தயாள் வித்தியார்த்தி**யுடன் இது விஷயமாகப் பேச நேர்ந்தது. அப்பொழுது சுருக்கமாய் மஹாதேவ தேசாயின் வாழ்க்கை விவரத்தையும் அவர் நண்பர்களுடைய நினைவுகளையும் வெளி யிடுவதே நலமென நிச்சயித்தோம். அவ்வாறே ஹிந்தியில் புத்தகம் வெளியிடப்பட்டது. இது அதன் தமிழ். இவை இரண் டும் ஏக காலத்தில் வெளியாகின்றன. இதைத் தமிழாக்குவதில் உதவிய ஸ்ரீ க. ம. சிவராம சர்மாவுக்கு என் நன்றி உரித்தாகும்.

சேவா கிராமம்
வர்தா,
7—11—1946.

**ஹரிஹர சர்மா.**

இப்புத்தகத்தில் கட்டுரைகள் எழுதிய பெரியார்களுடைய விவரம்:—

## கிசோரிலால் கனசியாமதாஸ் மஷ்ரூவாலா

விதர்ப மாகாணத்தைச் சேர்ந்த அகோலாவில் பிறந்தவர். சிறிது காலம் வக்கீல் தொழில் நடத்தி சபர்மதி ராஷ்டிரீய சாலையில் உபாத்தியாயரானார். காந்தீயக் கொள்கைகளைச் சரிவர அறிந்து கையாண்டவர்களில் முதன்மையானவர் என்ற பெயர் பெற்றவர். கூர்ஜர வித்யாபீடத்தில் மகாமாத்திரராக (Registrar of the Gujarat National University) இருந்தவர். காந்தீயக் கொள்கைகளை யொட்டிப் பல நூல்கள் இயற்றி இருக்கிறார். அவைகளுள் 'காந்தீய நவநீதம்' என்பது ஏற்கெனவே 'தமிழ்நாடு வெளியீடா'க வெளி வந்திருக்கிறது. தற்சமயம் சேவா, கிராமத்தில் இருந்து வருகிறார். இவர் காந்தி சேவா சங்கத்தின் தலைவராயிருந்து வந்தார். தேக நிலையின் காரணமாக அதினின்று விலகி, நூல் ஆராய்ச்சியிலும், எழுதுவதிலும் ஈடுபட்டு வருகிறார்.

## காகா காலேல்கர்

இவர் கர்னாடகத்தைச் சேர்ந்த பெல்காம் வாசி. வக்கீல் பரீக்ஷைக்குப் போகுமுன்னரே கர்னாடகத் தலைவர் ஸ்ரீ கங்காதரராவ் தேஷ்பாண்டேயும் லோகமான்ய திலகரும் நடத்தி வந்த "ராஷ்டிர மத்" என்ற தினசரிப் பத்திரிகையின் உதவி ஆசிரியரானார். பிறகு பரோடாவில் வெகு சிறப்பாக நடந்துகொண்டிருந்த கங்கநாத பாரதீய ஸர்வ வித்தியாலயத்தின் தலைமை உபாத்தியாயரானார். தில்லி தர்பார் சமயத்தில் அரசாங்கத்தின் அடக்கு முறையின் பயனாக இது மூடப்பட்டது. இவர் ஹிமாலயப்பிரயாணம் செய்த பிறகு பரோடா வித்தியாலயத்தைச் சேர்ந்த கோஷ்டியாருடன் (ஸ்ரீ ஹரிஹர சர்மா, ஸ்ரீ விட்டல் லக்ஷ்மண பட்கே) சபர்மதிக்குமுன், கோசரப்பு என்ற கிராமத்தில் சத்தியாக்ரஹ ஆச்ரமத்திற்குக் காந்தியடிகளிடம் வந்தார். குஜராத்தியிலும்

மஹாராஷ்டிரத்திலும் பல அரிய நூல்கள் இயற்றி இருக்கிறார். ஹிந்தி—ஹிந்துஸ்தானி பிரசாரத்தில் இவர் ஆற்றியுள்ள தொண்டு தமிழ் நாட்டாருக்கு நன்கு தெரியும். இப்பிரசாரத்தை யொட்டி இவர் பலமுறை தென்னாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிறார். வடமொழியில் நல்ல பயிற்சியுள்ளவர்.

## சியாராம் சரண் குப்தா

ஹிந்தி தேசீயக் கவி மைதிலீ சரண் குப்தாவின் தம்பி. இவரும் பல காவியங்களும் வசனநூல்களும் இயற்றியிருக்கிறார். புகழ்பெற்ற ஜான்ஸி நகருக்கருகிலுள்ள சிரக்கிராமத்தில் வசிக்கிறார்.

## கனசியாமதாஸ் பிர்லா

இவர் புகழ்பெற்ற கோடீசுவரர் என்பது உலகறிந்த விஷயம். ஹிந்தியில் சிறந்த எழுத்தாளர். 'பொருளாதாரம்' பற்றிய நூல்களும், காந்தி அடிகளைப் பற்றிய நூல்களும், ஜம்னாலால் பஜாஜின் சரித்திரமும் இயற்றியுள்ளார். காந்தீய இயக்கத்திற்கு மிகுந்த பொருளுதவி செய்திருக்கிறார். கோடீசுவரராயிருந்தும் எளிய வாழ்க்கை நடத்துகிறார். இவர் எழுதியுள்ள 'நானறிந்த காந்தி', 'கடல் கடந்த காந்தி' என்ற நூல்கள் தமிழில் வெளிவந்துள்ளன.

## பண்டித சுந்தர்லால்

'கர்மயோகி' என்ற பத்திரிகையின் ஆசிரியர். 1915 க்கு முன் மாணவராயிருக்கும் பொழுதே அரசியல் இயக்கத்தில் ஈடுபட்டவர். நல்ல பேச்சுத்திறமை பெற்றவர். முகம்மதிய மதத்தின் சிறப்புக்களை நன்கு ஆராய்ந்து சில நூல்கள் இயற்றியிருக்கிறார். 'இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சி' என்ற ஓர் அரிய நூல் இயற்றியிருக்கிறார். இவர் வசிப்பது அலஹாபாதில். ஹிந்தி பிரசார இயக்க சம்பந்தமாக பன்முறை சென்னைக்கு

வந்து உதவி புரிந்திருக்கிறார். இவருடைய ஹிந்துஸ்தானி நடையை காந்தியடிகள் ஹிந்தி-உருது கலந்த சிறந்த நடையென்று கூறியிருக்கிறார்கள்.

### காசிநாத திரிவேதி

மாளவ நாட்டைச் சேர்ந்தவர். பரம்பரையாக இந்தூர் சமஸ்தானத்தில் வசிப்பவர். சபர்மதி ஆச்ரமத்தில் வந்து காந்தி அடிகளைச் சேர்ந்தார். வர்தாவில் மஹிளா ஆச்ரமத்திலும் புதிய கல்விச் சங்கத்திலும் தொண்டு புரிந்து, தற்சமயம் நவஜீவன் காரியாலயத்தில் வேலை பார்த்து வருகிறார். குஜராத்தி, மஹாராஷ்டிரம், ஹிந்தி ஆகியவைகளில் தேர்ச்சி பெற்றவர். மொழி பெயர்ப்பதில் நிபுணர். இந்த மூன்று பாஷைகளிலும் பல நூல்கள் இயற்றியும் மொழிபெயர்த்துமிருக்கிறார்.

### பிரபாகர் மாச்வே

மஹாராஷ்டிரர். குவாலியர் அரசாங்கத்தைச் சேர்ந்த உஜ்ஜயினியில் பிறந்தவர். எம். ஏ. பட்டம் பெற்றவர். இப்பொழுது உஜ்ஜயினியில் மாதவ கல்லூரியில் பேராசிரியராயிருக்கிறார். ஹிந்தியில் தேர்ச்சி பெற்றவர்.

### சீதாராம் ஸேக்ஸரியா

கல்கத்தாவில் வசிக்கும் பிரபல மார்வாடி வியாபாரி. சிறந்த தேச பக்தர். ஹிந்தி பிரசார இயக்கத்தில் பற்றுள்ளவர். புகழ்பெற்ற "நோபல் பரிசு" போலவே, ஹிந்தியில் சிறந்த நூல்கள் இயற்றுபவர்களுக்கு வருஷா வருஷம் பரிசு அளிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார். இதில் 500 ரூபாய், ஒவ்வொரு வருஷத்திலும் மிகச் சிறந்த பெண் எழுத்தாளருக்கு அளிக்கப்படுகிறது.

### வியோகி ஹரி

ஹரிபிரசாத த்விவேதி என்ற பூர்வாச்ரமப் பெயர் கொண்ட இவர் வாலிபத்திலேயே துறவு பூண்டார். இவர் ரேவா ராஜ்யத்

தைச் சேர்ந்தவர். ஹிந்திப்புலவர். முதன் முதலாக ஹிந்தி கற்க பிரயாகைக்குச் சென்ற தென்னாட்டு இளைஞர்களுக்குப் பழைய ஹிந்தி இலக்கியத்தின் சிறப்பை விளக்கியவர். இவர் ஹிந்திக் கவி சூர்தாசரைப்பற்றி சிறந்த நூல் ஒன்று இயற்றியிருக்கிறார். வருஷா வருஷம் சிறந்த ஹிந்தி நூலாசிரியருக்கு அளிக்கப் பட்டுவரும் 1200 ரூபாய் மதிப்புள்ள "மங்களா பிரசாத் பரிசு" பெற்றவர். 'ஹிந்தி ஹரிஜன்' பத்திரிகை ஆசிரியராயிருந்தவர். இப்பொழுது தில்லியில் 'ஹரிஜன் நிவாஸி'ல் தொண்டு புரிந்து வருகிறார்.

## பிரபுதயாள் வித்தியார்த்தி

இளைஞர். மஹாதேவ தேசாயுடனே வசித்து அவரைப் போலவே வாழ விருப்பங்கொண்டவர். இவரைக் குறித்த அதிக விவரங்களை நாம் வெளியிடப்போகும் 'சேவாகிராமம்' என்ற புத்தகத்தில் காணலாம்.

## பியாரேலால்

பஞ்சாபைச் சேர்ந்தவர். எம். ஏ. பரீக்ஷையில் தேறி, 1920-ல் காந்தி அடிகளைச் சேர்ந்தார். மஹாதேவ தேசாயுடன் 'ஹரிஜன்' உதவி ஆசிரியராயிருந்தார். மஹாதேவ தேசாய்க்குப் பிறகு காந்தி அடிகளின் காரியதரிசியாகவும் 'ஹரிஜன்' ஆசிரியராகவும் இருக்கிறார். டாக்டர் சுசீலா நையாரின் சகோதரர். 'பூனா உபவாசம்' (Epic Fast) என்ற ஆங்கில நூல் இயற்றியவர்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| தேசாயின் தொண்டு (கி. க. மஷ்ரூவாலா) | ... | 9 |
| தேசாயின் இலக்கிய வாழ்க்கை (காகா கலேல்கர்) | ... | 15 |
| தேசாயின் கனிந்த உள்ளம் (சியாராம் சரண் குப்தா) | ... | 19 |
| தேசாயின் சில புனித நினைவுகள் (கனசியாமதாஸ் பிர்லா) | ... | 30 |
| மஹாதேவ தேசாய் (பண்டித சுந்தர்லால்) | ... | 41 |
| காந்தியடிகளின் மஹாதேவ் (காசீநாத த்ரிவேதி) | ... | 43 |
| தத்துவ ஞானி, தேசாய் (ப்ரபாகர் மாச்வே) | ... | 59 |
| காந்தியடிகளின் பழைய தோழர் (சீதாராம் சேக்சரியா) | ... | 67 |
| தேசாயின் சில நினைவுகள் (வியோகி ஹரி) | ... | 72 |
| காலஞ்சென்ற மஹாதேவ தேசாய் (பிரபு தயாள் வித்தியார்த்தி) | ... | 77 |
| அவர் இருக்கிறார்! (சரோஜினி நாயுடு) | ... | 100 |
| கடைசிக் காலம் (பியாரேலால்) | ... | 104 |

# மஹாதேவ தேசாய்

## நினைவு மாலை

## தேசாயின் தொண்டு

(ஸ்ரீ கி. க. மஷ்ரூவாலா)

1946-ம் வருஷத்திய ஜனவரி மாதத்து "விசுவ வாணி" என்ற பத்திரிகையில் ஸ்ரீ எஸ். வம்சிநாத ஐயருடைய "ஹனுமான் சரித்திரம்" என்ற ஒரு கட்டுரை வெளியாகி இருக்கிறது. அதில் வால்மீகி ராமாயணத்தை ஆதாரமாகக்கொண்டு இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது:

"ஹனுமார் பேசுவதிலிருந்து அவர் சிறந்த வித்வான் என்றும் இலக்கணப் புலவர் என்றும் தெளிவாகிறதென்று இராமர் கூறுகிறார். இவ்வளவு நேரம் பேசியும் அவருடைய பேச்சில் ஒரு குற்றமோ குறையோ காண முடியவில்லை. பேசும்பொழுது அவருடைய கை இப்படியும் அப்படியும் ஆடவில்லை. அவருடைய முகமும் மாறுபடவில்லை. அவர் ஒரே மத்யம ஸ்வரத்தில் இனிய குரலில் பேசிக்கொண்டிருந்தார். அவருடைய மொழி சிறந்ததாயும் இலக்கியமாயும் இருந்தது. அவருடைய பேச்சு ஒரு கணமேனும் தடைப் படவில்லை. எண்ணமும் சொல்லும் ஒருமிக்க மனதில் உதித்துத் தங்கு தடையின்றி எளிதில்

வெளியாயின. அவருடைய பேச்சு சுத்தமாய் இருந்தது, விஷயத்தைத் தழுவி யிருந்தது. பேசும் முறையில் ஒரு குற்றமும் இல்லை. அவருடைய வாதங்கள் கண்டிக்க முடியாதவை. அவர் சுற்றி வளைத்து வீண் பேச்சுப் பேசவில்லை, பயனற்ற ஒரு சொல்லும் சொல்ல வில்லை. இரண்டு அர்த்தத்தை யளிக்கும் சொற்களை யும் பேசவில்லை. அவருடைய சொற்கள் எடை போட்டுப் பேசியவையாய் இருந்தன. பேச்சில் ஒரு இனிமை இருந்தது. கேட்போர் அவருடைய எந்தப் பேச்சையும் எதிர்க்க முடியாது.''

இந்த வர்ணனை மஹாதேவ தேசாய் விஷயத்திலும் முற்றிலும் பொருந்தும். ஹநுமான் ஒரு சிறந்த தொண்டர் வடிவத்தில் நம் மனதில் எப்பொழுதும் குடிகொண்டிருக்கிறார். அவர் பற்பல விதங்களில் இராமருக்குத் தொண்டு புரிந்தார்; இராமரைத் தோள் மீது ஏற்றிச் சென்றார்; இராமருடைய வேவுகாரராகவும் நம்பிக்கையான தூதராகவும் இருந்தார். அரசியல் விஷயங்களில் நல்ல புத்திமதி கூறுபவராகவும் வக்கீ லாகவும் இருந்தார். ஆபத்துக்காலத்தில் அவர் பெரிய துன்பத்தையும் அலட்சியமாகக் கருதினார். அவர் இராமருடைய படைத் தலைவராகவும் மந்திரி யாகவும் இருந்தார். ஊக்கத்துடனும், சுறுசுறுப்பாயும் வேலை செய்வதில் அவர் குரங்காய் விளங்கினார். அமைதி யுடனும் பெருந்தன்மையுடனும் பணி புரிவதில், படித்து முதிர்ந்த பிராம்மணராக விளங்கினார். அவர் பிரம்மசரி யத்தைச் சிறிதும் வழுவாது அனுஷ்டித்துவந்தார்.

சிறந்த சேவக ரூபத்தில் காணப்படும் மற்றொருவர் உத்தவர். இராமபிரான் ஹநுமாரைக் குறித்து

எம் மொழிகளை உரைத்தாரோ, சற்றேறக் குறைய அம் மொழிகளையே கண்ணபிரான் உத்தவரைக் குறித்துக் கூறியுள்ளார். ஆனால் ஹனுமாருடைய சித்திரம் நம்முன் ஒரு அமானுஷ வடிவாகவும், ஒரு சமயம் தேவ வடிவமாகவும், மற்றொரு சமயம் வானர வடிவாகவும்—வருகிறது. ஆகையால் ஹனுமாருடைய சித்திரம் உத்தவருடைய சித்திரத்தைக் காட்டிலும் நுட்பமாயிருந்தாலும் அதில் ஒரு மேன்மை தோன்றுகிறது. உத்தவருடையதோ தெளிவாயிருந்த பொழுதிலும் அவ்வளவு விசித்திரமானதாக விளங்கவில்லை.

மஹாதேவ தேசாய் நம் கண்முன் விளங்கியவர். அவர் வாயு புத்திரராகிய தேவரும் அல்லர்; அஞ்சனையின் மகனான வானரமும் அல்லர். பயங்கரமான கர்ஜனையால் ராக்ஷஸர்களை நடுநடுங்கச் செய்யும் தோற்றத்தில் நாம் அவரைக் கண்டதேயில்லை. உத்தவர் கிருஷ்ணருடைய இனத்தையே சேர்ந்த ஒரு சகோதரர். அதேவிதமாக மஹாதேவ தேசாயும் நம்மைச்சேர்ந்தவர், நம் சகோதரர். உண்டி, உடை, நடை, நகை, பேச்சு யாவும் நம்முடையதும் அவருடையதும் ஒரேவிதமானவையே. இப்படியிருந்தும் மஹாதேவ தேசாயிடத்தில் இருந்த ஒரு விசேஷ குணமானது அவரை நம்மைக் காட்டிலும் மிகவும் உன்னதமானதோர் நிலையில் அமர்த்தி ஹனுமாருக்கும் உத்தவருக்கும் சமமான ஓர் வகுப்பில் சேர்த்திருக்கிறது. நாம்—நாம் என்பானேன்? நான் அந் நிலையை அடைய முடியாது.

இராமாயணங்கள் பல. ஒவ்வொரு இராமாயணத்திலும் ஹனுமார் ஒவ்வொரு விதமாகச் சித்திரிக்கப்பட்

டிருக்கிறார். ஆனால் இரண்டு விஷயங்கள் மட்டும் இவ்வனைத்திலும் காணப்படும். எல்லோரும் அவரை சேவகன் என்றே கூறியிருக்கிறார்கள். சகோதரனென்றோ, மகானென்றோ, தலைவனென்றோ, எஜமானனென்றோ ஒருவரும் கூறவில்லை. மற்றொரு விஷயம். அவருடைய உடல் அழகியதென்று ஒருவரும் சொல்லவில்லை; குரங்கு வடிவத்திலும், கொரில்லா என்ற காட்டு மனிதனைக் காட்டிலும் பயங்கரமான வடிவத்திலும் சித்திரித்திருக்கிறார்கள். அவருடைய கால்களுடையவும் புயங்களுடையவும் பருத்த தசைகளைக் கண்டு நாம் பெருமை கொள்ளலாம். ஆனால் அவருடைய முகம், மூக்கு, பற்கள் ஆகியவைகளைக் கண்டு மயங்க முடியாது.

கவிஞர்கள் உத்தவரைச் சற்றேறக்குறைய கிருஷ்ண பரமாத்மாவைப் போன்றவரே எனக் கூறியிருப்பதாக நினைக்கிறேன்.

மஹாதேவ தேசாய் அழகியவர்களின் இனத்தைச் சேர்ந்தவர் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். காண்போரின் மனதைக் கவரும் அவருடைய முகத்திற்கும், அவருடைய ஸ்வபாவத்திற்கும், தொண்டு புரியும் தன்மைக்கும் ஓர் சம்பந்தம் இருந்து வந்தது. சுமார் ஆறடி உயரம், மிகவும் பருத்தும் மிகவும் மெலிந்தும் இல்லாத நடுத்தர மேனி, சிவந்த நிறம், ஒளியுள்ள கண்கள், மூக்கு, நெற்றி ஆகியவைகள். இந்த இலட்சணங்கள் ஹனுமார் விஷயத்தில் பொருந்தா.

அவருடைய குரலில் ஓர் இனிமை உண்டு. அது கோபத்திலோ வேறு காரணத்தினாலோ கத்திப்பேசும் பொழுதும் அகலாது. அன்புடனும் அமைதியுடனும் பேசும்பொழுது நன்கு விளங்கும்.

சிறந்த புலவராகவும், கவியாகவும், பாடகராகவும், கலைஞராகவும் இருந்துகொண்டு ஒருவர் தன்னுடைய எஜமானருக்கு மட்டுமல்லாமல் நண்பர்களுக்கும், மனைவிக்கும் வேலையாட்களுக்கும்கூட தோட்டியாகவும், 'நர்ஸா' கவும், வண்ணுணுகவும் சமையற்காரணுகவும், எழுதியதைப் பார்த்துத் திருத்தி எழுதும் குமாஸ்தாவாகவும், எழுதியதில் இருக்கும் குற்றங்களைத் திருத்திக் கொடுக்கும் ஆசிரியணுகவும், அன்பருடைய மனப் போக்கை அறிந்து அம்மனதில் உதிக்கும் எண்ணங்களை எழுதி வைக்கும் மந்திரியாகவும், அவர்களுக்கு அன்னிய இடங்களிலே நடைபெற வேண்டிய வேலைகளைப் பூர்த்திசெய்து கொடுப்பதில் தூதணுகவும், அவருடைய எண்ணங்களை எல்லாவிதங்களிலும் ஆராய்ச்சி செய்தறிந்து அவற்றிற்காக வாதாடும் வக்கீலாகவும் ஒருவர் விளங்கி வந்தாரென்ருல் அவர் மஹாதேவ தேசாய் ஒருவரே. இதுமட்டுமல்ல. நெருங்கிய பந்துக்களிடையே மனஸ்தாபம் ஏற்பட்டால் அதைத் தீர்த்துவைத்து முன்னிருந்த இயற்கையன்பை மீண்டும் நிலைநாட்ட முயற்சி செய்தார். மிகவும் பரிதாபகரமான நிலையில் இருப்போருக்குத் தைரியமும் ஆதரவும் அளிக்கும் பந்துவாய் விளங்கினர். இவ்வளவிருந்தும் தான் பெருமையடைய வேண்டும் அல்லது பொருள் பெற வேண்டும் என்ற எண்ணமே இல்லாதவர். சற்றும் மயக்கம் கொள்ளாதவர். சாதாரணமாகக் கலையை வளர்ப்பவர்களிடமும், பெருஞ்செல்வாக்குள்ளவர்களிடமும் காணப்படும் குறைகளினின்று தன்னைக் காப்பாற்றிக்கொண்ட மஹா வீரர்.

ஸ்நேகம், பெண்களிடத்தில் அனுதாபம், சங்கீதத் திறமை, கலைகளில் ஆர்வம், இளகிய மனம், இரக்கம்

அழகிய புஷ்டியுள்ள உடல் ஆகியவைகளையெல்லாம் படைத்த இவர் வாழ்க்கையில் ஆளைக் கவிழ்த்துவிடக் கூடிய பல சந்தர்ப்பங்கள் வந்தன. சாதாரணமாகப் பெண்கள் தாமாக முன்னேறித் தாக்குவதில்லை. ஆனால் சிற்சில சமயங்களில் வாழ்க்கையிலே திருப்தியில்லாமை யினாலோ, வருத்தத்தினாலோ அன்னியர்கள் வசத்தில் அகப்பட்டுக் கொண்டோ அவர்கள் திறமைபெற்ற புருஷர்களைத் தாமாக முன்னேறித் தாக்குகின்றனர் போலும்! இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் மஹாதேவ தேசாயின் வாழ்க்கையிலும் இரண்டு மூன்று தடவை வந்ததுண்டு. அவர் ஹனுமாரைப்போல் நைஷ்டிகப் பிரம்மசாரி அல்ல. ஆனால் அவருடைய மனஉறுதி எவ்விதத்திலும் ஹனுமாருடையதைக் காட்டிலும் குறைந்ததில்லை. அம்மனஉறுதி தனது எஜமானிடம் மட்டுமல்லாமல் மனைவியிடத்திலும் ஓங்கி யிருந்தது. இந்த உறுதியே அவரைப் பலமுறை காப்பாற்றியது. இதுவே பல பெண்களைத் தவறான வழியினின்று விலக்கி நேர் வழியே செலுத்துவதில் அவருக் குதவி புரிந்தது. இவ்வுறுதியே அவருடைய நடத்தையையும் காப்பாற்றியது. ஹனுமாரைப் போல் நைஷ்டிக பிரம்ம சாரியாய் இருக்கமுடியவில்லை; ஆனால் அன்னிய ஸ்திரீகளின் மோஹத்தில் சற்றும் சிக்காமல் நிற்கும் பாக்கியம் அவருக்குக் கிடைத்தது. இங்கிலையை அடைவதில் அவருக்கேற்பட்ட துன்பங்களும், மனவருத் தங்களும், பரிதாபகரமான நிலைமைகளும் பல. ஆனால் இவைகளெல்லாம் அவருடைய இயற்கையான அடக்கத் தையே வெளிப்படுத்தின. இவ்விதமாகச் சேவைத் துறையிலே தூய முறைகளை நம் கண்முன் இட்டு நமக்கு ஓர் சிறந்த வழிகாட்டியாக விளங்கினார் மஹாதேவ தேசாய்.

# தேசாயின் இலக்கிய வாழ்க்கை

( காகா காலேல்கர் )

மகாதேவ தேசாயைப்பற்றி எவ்வளவோ எழுதலாம். ஆனால் அவர் காந்தி அடிகளை அடைந்த நாள் முதல் ஆகாகான் மாளிகைச் சிறையில் மாண்டு காந்தி அடிகளின் கையினால் அக்கினி சம்ஸ்காரம் பெற்றதுவரை அவர் எழுதிவைத்த அனைத்தும் என்று வெளியாகுமோ அன்றே மகாதேவ தேசாயின் காரியங்களின் விரிவும் அவருடைய பெருமையும் பல துறைகளில் அவர் பெற்றிருந்த திறமையும் உலகம் ஓரளவு உணரமுடியும். அவர் எழுதி வெளியிட்ட வியாசங்களே பல. ஆனால் வெளியாகாத வியாசங்கள் வெளியானவைகளைக் காட்டிலும் பல மடங்கு அதிகம். வெளியான வியாசங்களைத் திரட்டிப் புத்தக வடிவாக வெளியாக்கினால் அப்புத்தகத்தைப் படிக்கும் ஒவ்வொருவரும் கண்ணீர் பெருக்கி நன்றி செலுத்துவார் என்பது திண்ணம்.

ஸ்ரீரவீந்திரநாத டாகூர் காலமடைந்த பிறகு அவருடைய புத்தகங்களின் உரிமையாளர் அக்கவிஞர் படித்த புத்தகங்களின் ஜாபிதா ஒன்று வெளியிட்டார். அதே விதமாக மகாதேவ தேசாய் படித்த புத்தகங்களின் ஜாபிதா ஒன்று தயாரிக்கப்படுமாகில், அவை அளவற்றவையா யிருப்பதினாலும் பலவகைப்பட்டதா யிருப்பதாலும் புலவர்களால் போற்றப்படும் என்பது திண்ணம்.

மஹாதேவ தேசாய் ஒவ்வொரு நாளும் இரவில் தூங்குவதற்குமுன் ஏராளமாகப் படிப்பார். நாளெல்லாம் பாடுபட்டு உழைத்த பின்னர்கூடப் புதுப் புதுப் புத்தகங்கள் படிப்பதற்கு அவருடைய அறிவு தெளிவுடன் இருக்கும். படித்ததில் உபயோகமானதை யெல்லாம் உபயோகப்படுத்திக்கொள்வார்; மற்றவைகளையும் தன்னுடைய நினைவில் ஒழுங்காகப் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்வார்.

தேசத்தின் பெரும் தலைவர்களுடனும் நண்பர்களுடனும் காந்தி பக்தர்களுடனும் அவர் நடத்திய கடிதப் போக்கு வரத்து தொகுக்கப்பட்டு வெளியிடப்படுமாகில் அது நம் பாரத நாட்டின் விஸ்தாரமான சரித்திரம் தயாரிக்க உதவும்.

அவருடைய முத்துப்போன்ற அழகிய எழுத்துக்கள் அவருடைய அன்பு ததும்பும் கண்களுக்கிணையாயிருந்தன எனலாம். அழகிய எழுத்துக்காகவே அவருடைய கடிதங்களை ஓர் தேசீய பொக்கிஷமாகப் பாதுகாத்து வைத்தல் அவசியமாகும்.

இவைகளெல்லாம் அவர் இயற்றிய நூல்கள் சம்பந்தமானவை. இனி காந்தி அடிகளின் கட்டளையினால் அவர் செய்த பற்பல வேலைகளைக் காந்தி அடிகளோ பியாரேலாலோ தான் வர்ணிக்க முடியும். காந்தி அடிகளின் நம்பிக்கையான தூதராகி அவர் செய்த பற்பல சமாதான முயற்சிகளின் சரித்திரத்தை யார் எழுதமுடியும் ?

மஹாதேவ தேசாயினுடைய இல்வாழ்க்கையின் விவரங்களை அவருடைய மனைவியும் ஏகபுத்திரனும்தான்

கூறமுடியும்; அவ்வாறு கூறுவது அவருடைய கடமை யாகும். அது இந்திய முன்னேற்றத்திற்கு அவர்கள் செலுத்தவேண்டிய கடனாகும். அவருடன் ஆச்ரமத்தில் வசித்து வந்தவர்களும் தம் தம் நினைவுகளை எடுத் துரைக்கலாம்.

ஒரு நாள் நாங்கள் இருவரும் சாப்பிட்டு விட்டு உட்கார்ந்திருந்தோம். இந்தியாவில் அளிக்கப்படும் பூகோளக் கல்வியைப் பற்றிச் சம்பாஷிக்கத் தொடங் கினோம். "ஒவ்வொரு மாகாணத்தின் ஜனங்கள் அவ்விடத்திய சீதோஷ்ண நிலை, வாழ்க்கை முறையின் விசேஷங்கள், மலை—ஆறு—ஏரிகள், ஜனங்களின் பழக்க வழக்கங்கள் முதலியவைகளை யெல்லாம் நன்கு விளக்கும் நூல்கள் நமக்கு வேண்டும்" என்று நான் கூறினேன். இதைக் கேட்டு மஹாதேவ தேசாய் மிகவும் ஊக்கத் துடன், "சரி, இதை உன் கட்டளையெனக் கருதி நான் கட்டாயம் செய்கிறேன். காந்தியடிகளுடன் பன்முறை பாரத நாட்டைச் சுற்றிவந்திருக்கிறேன். எனவே நான் விஸ்தாரமாக எழுதக்கூடும். நான் எழுதிய பிறகு இருக்கும் குறைகளை நீ பூர்த்தி செய்" என்றார்.

இந்த வேலையை எந்தவிதமாகத் தொடங்க வேண் டும் என்பதை நாங்கள் பேசி முடித்துக்கொண்டோம். ஆனால் எழுதவேண்டும் என்ற நினைவு நினைவாகவே இருந்து விட்டது! அவருக்கும் எழுதச் சமயம் கிடைக்க வில்லை, எனக்கும் அவரை நச்சரித்து இந்த வேலையை வாங்க முடியவில்லை.

மஹாதேவ தேசாயினுடைய முகத்தைப் பார்த்த வுடனே அவரிடத்திலிருந்த நற்குணங்கள் புலப்படும்.

அவருடைய எழுத்துநடையும் இதேவிதமாக உட் கருத்தைப் புலப்படுத்தும் திறமை பெற்றிருந்தது.

அவரிடத்தில் காந்தி பக்தி, சுயராஜ்ய பக்தி, தேச பக்தி என்ற மூன்றும் ஒன்றியிருந்தன. அவருடன் நெருங்கிப் பழகியவர்களுக்கு இம்மூன்றிலும் வித்தியாசமே காணப்படவில்லை.

மஹாதேவ தேசாயைப்பற்றி எழுதத் தொடங்கினல் அதற்கோர் முடிவே இராது. ஆகையால், நான் ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் எடுத்துரைத்ததுடன் திருப்தியுறுகிறேன்.

---

# தேசாயின் கனிந்த உள்ளம்

## (சியாராம் சரண் குப்தா)

அந்திவேளை. இருட்டு நன்ருகப் பரவவில்லை. நான் ஸ்டேஷனைக் கடந்து பத்துப் பதினைந்து அடி சென்றதும், எதிரே ஒருவர் வந்துகொண்டிருப் பதைக் கண்டேன்.

"நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?" என்ருர் ஒருவர்.

என்னுடன் என் தம்பி சாருசீல சரண் இருந்தான். சாமானைச் சுமந்து வர ஒரு ஆளை அமர்த்தி நாங்கள் இருவரும் கால் நடையாகச் செல்வதென நிச்சயித் திருந்தோம். கூலி முன்னே சென்றுவிட்டான். அவன் தலைமீதிருந்த பெட்டியும் படுக்கையும் அவனுடைய நடையைத் துரிதப்படுத்தின போலும்! எனவே மேற்படி கேள்விக்குச் சுருக்கமாக விடை அளித்துவிட்டு நான் விரைந்து போக நினைத்தேன். அப்பொழுது ஒருவர் என்னை நோக்கிச் சொன்ஞர்: "இதோ பாருங்கள், இவர் தான் மஹாதேவ தேசாய். தங்களுக்காகவே ஸ்டே ஷனுக்கு வந்திருக்கிருர். இன்று ஆச்ரமத்துச் சமைய லறைப் பாத்திரம் சுத்தம் செய்யும் வேலை இவருக்கு ஏற்பட்டதால் இங்கு வர ஐந்து ஆறு நிமிஷம் தாமத மாகி விட்டது."

இதைக்கேட்டு நான் அப்படியே நின்றுவிட்டேன். இவர்தாஞ மஹாதேவ தேசாய்! காந்தி அடிகளின் வலது கையை யொத்த இவரையா நான் கண்டும் காணுமல்

இருந்தேன்! என்னைக்காண இவர் ஸ்டேஷனுக்கு வருவாரென்று கனவிலும் நினைக்கவில்லை. நான் வீட்டை விட்டுப் புறப்படும்பொழுது கொடுத்த சாதாரணத் தகவலில் நான் வந்து சேரும் சமயமும் நிச்சயமாகக் குறிப்பிடவில்லை; அவசியமில்லையென்று கருதினேன். வர்தா ஒரு புண்ணியஸ்தல மாயிற்றே, எப்பொழுது வேண்டுமானாலும் போகலாம் என்று நினைத்தேன். உண்மையில் சொந்த வீடு, புண்ணியஸ்தலம் ஆகிய இரண்டு இடங்களுக்குத் தானே நினைத்தபடி யெல்லாம் போகலாம்? நான் இந்த வண்டியிலே வர்தா வந்து சேராமல் வழியிலேயே எங்கேயாகிலும் இறங்கியிருக்கக் கூடும். நல்ல வேளையாக அப்படி நேரவில்லை. ஒருக்கால் அப்படி நேர்ந்திருந்தால் நான் எவ்வளவு வெட்கமடைந்திருப்பேன்!

இவ்வாறு முதன் முதலாக மஹாதேவ தேசாய் தானே வந்து கண்டது என் மனதில் அழியாது பதிந்துவிட்டது. அறுபது நாழிகையும் வேலையில் ஈடுபட்டிருந்தும் என்னைப்போன்ற சஞ்சலனுக்கும் சமயம் தருவது அவரைத் தவிர வேறு யாரால் முடியும்?

காரியத்தைக் கண்டு நாம் பயப்படக்கூடாது, காரியம் நம்மீது வெற்றிபெறக்கூடாது என்ற மர்மத்தை அவர் தன் வாழ்க்கையின் ஆதியிலேயே நன்குணர்ந்தார். இதனால்தான் அவர் வாழ்க்கையில் வெற்றி பெற்றார். ஆயுள் அவருக்கு நீண்டதாகக் கிடைக்கவில்லை; நம் தேசத்தின் இம்மன வேதனை ஒருநாளும் தீராது! ஆயுள் பிழைத்திருப்பதற்கு மட்டுமல்ல. இக் கருத்தைக்கொண்டு நோக்கில் இறந்தும் சிரஞ்ஜீவிகளுள் ஒருவராக இவரும் விளங்குவார்

என்பது திண்ணம். நூறாண்டுகள் பிழைத்திருக்கும் பிறர் என்ன சாதித்துவிடுகிறார்கள்?

இவர் எவ்வளவு வேலை செய்துவந்தார், இவர்மீது எவ்வளவு அதிக வேலையின் பொறுப்பு இருந்து வந்தது, அதை இவர் எப்படி நிர்வகித்துவந்தார் என்பதை நான் அப்பொழுதுதான் கண்டேன். ஆச்ரம வாழ்க்கை பெரும் கட்டுப்பாடுகளுக் குட்பட்டது; வாழ்க்கை என்னும் காட்டாறு அணை போடப்பட்டுச் செய்கை என்ற பூமிக்கு உரம் அளிப்பதற்காகச் செலுத்தப்பட்டது போலும். பாடுபட்டுப் போட்ட அணையின் பயனாகக் கிடைத்த நீர்த் தேக்கத்தின் ஒவ்வொரு துளியையும் வீண் செய்யாமல் பயன் படுத்தவேண்டும் என்ற கருத்தே ஆச்ரமத்தில் நிலவிவந்தது. இதனால்தான் அங்கு நாளின் அளவு விஸ்தார மடைகிறது. நாளின் இரு கோடிகளிலும் கட்டையை அடித்து முடிந்தவரையில் பகல் பெரிதாக்கப்படுகிறது.

காலையில் நடக்கும் ஆச்ரமத்தின் முதல் பிரார்த்தனையில் கலந்துகொள்ளவேண்டுமென்ற விருப்பம் எனக்கு உண்டாயிற்று. இதற்கு மஹாதேவ தேசாய், "அப்பொழுது இருட்டாக இருக்கும். தாங்கள் விழித்துக் கொள்ள முடியாமலிருக்கலாம். நான் எழுப்பி அழைத்துக்கொண்டு போகிறேன்" என்றார். எனவே அன்னியர்களை எழுப்பும் பொறுப்பும் அவர் மீது இருந்து வந்தது. அது முதல் அவருக்கு ஒன்றின் பின் ஒன்றாக இரவு பத்துமணிவரை ஏதாவதொரு வேலை இருந்துகொண்டேயிருக்கும். இதனால் அவருக்குத் தூக்கம் என்பது ஒரு சுகமல்ல, ஒரு கடமையாகவே ஆயிற்று.

பகல் வேளையில் காந்தி அடிகளின் அறையில் மஹாதேவ தேசாய் எழுதுவதையும் படிப்பதையும் பார்த்திருக்கிறேன். காந்தி அடிகள் ஒரு மெத்தையின் மீது வீற்றிருப்பார். அவருக்குப் பின்புறத்தில் சாய்ந்துகொள்ள ஒரு திண்டு இருக்கும். வலது புறமாகச் சற்று தூரத்தில் ஒரு பாயின்மீது உட்கார்ந்து மஹாதேவ தேசாய் தன் வேலையைச் செய்துவருவார். காந்தி அடிகளின் கடிதப்போக்கு வரத்து வேலை போலும். அவர் காந்தி அடிகளின் வலது கை என்பதை நிரூபிப்பதற்கே வலது புறத்தில் அமர்ந்து வந்தார் போலும்! அவரைச் சுற்றி நாலா பக்கங்களிலும் காகிதங்களும் கடிதங்களும் பத்திரிகைகளும் புத்தகங்களும் கிடக்கும். ஒரு முறை இதைப் படிப்பார், ஒருமுறை அதைப் படிப்பார். பிறகு எழுதத் தொடங்குவார். சில வேளையில் கையில் சில காகிதங்களை ஏந்தி ஒரு அறையிலிருந்து மற்றொரு அறைக்குச் செல்வார். இதேவிதமாக மணிக்கணக்காக நடக்கும். இதையெல்லாம் கண்டு எனக்கு அடங்கா ஆச்சரியம். ஒருவர் இவ்வளவு வேலையை எப்படிச் செய்யமுடிகிறது என்று வியப்படைவேன். இதனால் ஒரு நாள் நான் மஹாதேவ தேசாயின் முன்னிலையிலேயே காந்தி அடிகளுக்கு என் சகோதரர் * எழுதிய செய்யுளின் இவ்வடியை எடுத்துரைத்தேன் :

"ஸதய பந்து தும் விரோதி யோங்கே,
நிர்தய ஸ்வஜன் அதீநோங்கே"

(விரோதிகளுக்கு இரக்கமுள்ள சுற்றத்தானைப் போல் விளங்கும் நீ சொந்த ஜனங்களுக்கும் அண்டி

* தற்காலத்திய ஹிந்தி கவிகளுள் சிறந்தவராய் விளங்கும் மைதிலீ சரண் குப்தா.

யிருப்போருக்கும் தயவற்றவனாய் இருக்கிறாய்.) இதைக் கேட்டுக் காந்தி அடிகள் கலகல வென்று நகைத்தார். இதுவே அவருடைய வேலையின் களைப்பைப் போக்கும் நகை, உடலில் துன்பங்களனைத்தையும் போக்கும் நகை!

மஹாதேவ தேசாயின் எழுத்துத் திறமையையும் நான் அறிவேன். ஏனென்றால் அவருடைய இத்திறமை தான் அவர் என்னை அவர் பக்கத்திற்கிழுத்தது. காந்தி அடிகளின் சிறு சிறு விஷயங்களையும் பொறுக்கி எடுத்துப் பாதுகாத்துப் பெரும் பொக்கிஷமாக வளர்த்தார். எப்பொழுதும் வேலையையே தன் கடமையெனக் கருதி அலையும் இவருக்கு எழுத்துத் திறமையை வளர்க்கத் தருணம் எப்படிக் கிடைக்கிறது என்று நான் அறிய விரும்பினேன். ஒருமுறை காகா கலேல்கர் 'ஓய்வற்ற வேலை, அளவற்ற ஆராய்ச்சி இவ்விரண்டும் மஹாதேவ தேசாய் ஒருவரால்தான் முடியும்' என்று எனக்கெழுதியிருந்தார். அவருடைய இந்தத் திறமையை அறிய வேண்டுமென்ற அவா எனக்கு மிகவும் அதிகமாயிருந்தது.

இரவு தூங்குவதற்கு முன் அவர் என்னிடத்தில் சொன்னார்: "வாருங்கள் உங்கள் சகோதரர் எழுதிய 'யசோதரா' என்ற காவியத்தைப் படிப்போம். சிற்சில இடங்களில் அது எனக்குப் புரியவில்லை. உங்கள் உதவியைக் கொண்டு என் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளலாம். இதே விதமாகச் சமயம் வாய்த்தால் இதற்குப் பிறகு 'ஸாகேத்' என்ற காவியமும் படிக்கலாம்."

சரி, வந்தது ஆபத்து! இது வரையில் இருந்த என் பெருமை யெல்லாம் இனி குறையத்தான் போகிறது. சந்தேகங்களைத் தீர்க்க யாரால் முடியும்? சந்தேகங்கள் தலை

யெடுக்கவே விடக்கூடாது! என் படிப்பில் நான் இந்தக் கொள்கையைத்தான் கையாண்டு வந்தேன். சந்தேக மின்றி அறிந்துகொண்ட அம்சங்களையாவது பிரமாதமாக நினைவு வைத்துக்கொண்டு விடுகிறேமா? இதனுல்தான், புரியவில்லை என்ருல் நான் அதை அப்படியே விட்டு விடுவது வழக்கம். இதன் பயனுக என் அறிவும் அளவுக் குட்பட்டே இருந்தது. மஹாதேவ தேசாயுடன் உட்கார்ந்து நான் இவ்விஷயத்தை நன்கு உணர்ந்தேன். என்னுடன் கூட அவர் 'யசோதரா'வில் சுமார் பாதி படித்தார். என்னைக்காட்டிலும் காவியத்தின் நுட்பங்களை அவரே நன்ருக அறிந்திருக்கிருர் என்பதை உணர்ந்தேன். ஏதோ ஒன்றிரண்டு இடத்தில்தான் அவருக்குச் சந்தேகம் எழுந்திருக்கும். அதுவும் ஏதோ ஒரு சுத்த ஹிந்தி வழக்குச்சொல்லாய் இருக்கும். எனவே, நான் அவருடைய பரீட்சையினின்று தப்பித்துக் கொண்டேன். என்மீது தம்பி யென்ற அன்பு பாராட்டி வந்ததால்தான் அவருக்கு என் குற்றங்கள் காணப்படவில்லைபோலும் என்று நினைக்கலானேன். இது சகஜம்தான்.

ஒரு நாள் அவரிடத்தில் வைத்திருந்த புஸ்தகங்களில் ஒரு சிறு-கதைப் புத்தகமாவது நாவலாவது வேண்டுமெனக் கேட்க ஒரு சகோதரி (ஸ்ரீபிரபாவதிதேவி என்று நினைவு) வந்தார். இதற்கு அவர் விடை அளித்தார்: "இன்று நான் ஊருக்குப் போகிறேன். இவைகளை என்னுடன் எடுத்துச் செல்லவேண்டும். பலநாட்களாகக் கதைகள் படிக்க எனக்கு அவகாசமே இல்லை. இன்று ரயிலில் அவகாசம் கிடைக்கும். ஆகையால் நீ ஒன்றையும் எடுத்துச் செல்லாதே."

அவர் யாத்திரை செய்வதோ மூன்ருவது வகுப்பு. அந்தக் கூட்டத்திலும் இடியிலும்கூட அவர் படிக்க வேண்டுமென்ற யோசனையிலேயெ இருக்கிருர்! இதனுல் அவருடைய ஹிந்தியின் அளவற்ற அன்பை நன்கு அறிந்தேன். அவர் எப்பொழுதும் அதன் தொடர்பு வைத்துக்கொள்ள விரும்பினுர். இதை உத்தேசித்தே தன் அரிய நட்பை எனக்கு அளித்தார். நான் இதற்கு என்றென்றும் கடமைப்பட்டவனுயிருக்கிறேன். அவர் எழுதியிருந்த ஒரு கட்டுரையில் சென்னையில் நடந்த ஒரு நிகழ்ச்சியின் வரலாற்றைப்படித்து நான், "ஏக் பூல் கீ இச்சா" (ஒரு பூவின் அவா) என்ற பாட்டை எழுதினேன். எனக்கு நேர்முகமாக அறிமுகமில்லாமலிருந்தும் நான் அவருக்கு இந்தப் பாட்டை எழுதி அனுப்பினேன்; அதுமுதல்தான் நான் கடிதங்கள் மூலமாக அவருடைய அருகாமையிலிருந்தேன். இதனுல் எனக்கு இந்தப்பாட்டு மதிப்பற்ற பெருமையுள்ளதாக விளங்குகிறது. பொது ஜனங்களும் என்னுடைய மற்றப் பாட்டுகளைக் காட்டிலும் இதையே அதிகமாக விரும்புகிருர்கள் என்று நினைக்கிறேன்.

"பாபூ" என்ற காவியம் இயற்றுவதிலேயும் எனக்கு அவருடைய அன்பே பெரும் உதவியாயிருந்தது. இந்தக் காவியத்தை இயற்றி என் இலக்கிய வாழ்க்கையைப் புனிதமாக்கிக் கொண்டேன் என்ற பெரும் திருப்தி எனக்குண்டு. இதற்கு முன்னுரை எழுதுகையில் அவர் நோயாய் இருந்தார். அம் முன்னுரை முடிவுபெறுவதற்குள் அவருடைய நோய் மிகவும் அதிகரித்து ஆச்ரமத்திலிருந்தோர் எல்லோருக்கும் கவலையை உண்டாக்கிற்று. எழுதிவைத்ததை மறுமுறை

படிக்கவும் திறமையற்றிருந்தார். இந்த மயக்கமான நிலையிலும் அவர் எழுதிவைத்திருந்ததைப் படித்துப் பார்த்துத் தேவையான இடத்தில் திருத்தி என்னிடம் அனுப்பிவிட வேண்டுமென்று ஸ்ரீ மஷ்ரூவாலாவுக்கு அறிவித்தார்.

காந்தி அடிகளின் காரியதரிசியா யிருந்ததால் அவருக்கு எவ்வளவு வேலை இருந்துவந்தது என்பதை நேரில் காணாதவர்களும் கற்பனையால் அறியலாம். அதிலும் அரசியல் என்ற சுழலில் சிக்கிக்கொண்ட பிறகோ கேட்கவே வேண்டாம். எனவே நான் மட்டுமல்ல, என்னைக் காட்டிலும் மிகச் சிறந்த ஹிந்தி எழுத்தாளர்களின் பெயரை அவர் கேட்டதில்லை என்றால் அது ஒரு குறையாகாது. நிலை அப்படியிருந்தும் எனக்குத் தவறாமல் கடிதம் எழுதிவந்தார். இதை நினைக்கும் பொழுதெல்லாம் என் மனம் அவருடைய பெரும் அன்பு கண்டு மகிழ்கிறது. நான் என் தனிப்பட்ட விஷயத்தை இவ்வாறு விவரமாக எழுதுவதற்கு ஒரு காரணம் உண்டு. அவரிடத்தில் 'தனி'யும் ஒன்று, 'பொது" வும் ஒன்றே. ஹிந்தியிடத்தில் இருந்த அன்பையே அவர் என்மீது செலுத்திவந்தார்.

வர்தாவிலிருந்து அவர் 13-8-36ல் எழுதிய கடிதத்தில் எனக்கு இவ்வாறு எழுதியிருந்தார்: "காந்தியடிகள் விடையளித்தால் நான் ஒரு நாள் 'சிரகிராமம்' (இக்கட்டுரையின் எழுத்தாளர் இருக்குமிடம்) வந்து உங்களுடனெல்லாம் சில நாட்கள் தங்கவேண்டுமென்று கனவு கண்டுகொண்டிருக்கிறேன். இக் கனவு எப்பொழுது தான் நனவாகுமோ கடவுளுக்குத் தான் தெரியும்."

இப்பெரும் பாக்கியத்தைப் பெற நாங்கள் கொடுத்து வைக்கவில்லை. அவர் உலகத்தையேவிட்டு வெளியேறி விட்டார். இதனல் எங்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு என்று எடுத்துரைக்க முடியுமா!

ஒருமுறை சி. நாராயணனை (ஸ்ரீ தேசாயின் மகன்) ஒரு பைத்தியம் பிடித்த நரி மடக்கிக்கொண்டது. இச் செய்தியைப் பத்திரிகையில் படித்த எனக்கு, தந்தி கொடுத்தாவது பையனுடைய யோகக்ஷேமத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் உண்டாயிற்று. ஆனல் உடனே தேசத்தில் உள்ளவர்களெல்லாம் மஹாதேவ தேசாய்க்குத் தம் குடும்பத்தைப் போன்றவர்கள்தானே, அவருக்குப் பதிலளிக்கவேண்டிய ஒரு பொறுப்பை அளித்து வீண் சிரமம் கொடுப்பானேன் என்று நினைத்தேன். இதற்கடுத்த நாள், சி. நாராயணனுடைய யோகக்ஷேமத்தைக் குறித்து மஹாதேவ தேசாய் எழுதிய கடிதத்தைக் கண்டு எனக்கேற்பட்ட வியப்பிற்கோர் அளவில்லை.

ஒருநாள் பேசிக்கொண்டிருக்கையில் லண்டனில் நடந்த வட்டமேஜை மகாநாட்டு விவரங்களை எடுத்துரைத்தார். அங்கே சில நாட்கள் அவர் இரவெல்லாம் விழித்துக்கொண்டு வேலை செய்வாராம். இந்தியாவுக்குத் தபால் அனுப்பவேண்டிய நாளன்று இப்படிக் கட்டாயம் ஏற்படுமாம். நான், "தோல் எலும்பு மயமான இச் சரீரம் எவ்வளவு நாள் இவ்வளவு சிரமத்தைத்தாளும்? தன்மீது இவ்வளவு அநியாயம் தகாது" என்றேன். அவர் "இப்பொழுது ஏதோ நடக்கிறது. இனிவருங் காலத்தைப்பற்றி என்ன கவலை?" என்ருர். இதே சந்தர்ப்பத்தில் பர்னட் ஷாவைப்பற்றிப் பேச்சு நடந்தது.

"அவர் எனக்குப் பிடிக்கவில்லை. எந்த விஷயத்தைப் பிரசாரம் செய்யவேண்டுமென்று வாழ்நாள் முழுதும் எழுதிக் குவித்துவருகிறாரோ, அதற்காக அவரால் ஒரு தியாகமும் செய்யமுடியாது. ஏதோ பணம் கிடைக்கிறது, எழுதிவிடுகிறார்!" என்றார்.

எழுத்தாளராயிருந்தால் எப்படியிருக்க வேண்டும் என்பதைப்பற்றிய அவருடைய அபிப்பிராயம் இது. இதைப் பிரமாணப்படுத்துவதற்காகவென்றே அவர் தம் உயிரைச் சிறிது சிறிதாகத் தீக்குளிட்டுக் கடைசியாக ஆகாகான் மாளிகையில் பூரணாஹுதி அளித்தார் போலும்!

ஒரு இடத்தில் ஸ்வாமி விவேகானந்தர், "சுதந்திர தேவதை தேசத்தின் சிறந்த ரத்தத்தைப் பெற்றே திருப்தி அடைவாள்" என்று கூறியிருக்கிறார். இதை மஹாதேவ தேசாய் அளித்தார். மிக அருகாமையில் அச்சுதந்திர தேவதை இருக்கிறாள் என்று நாம் கேள்விப்படுகிறோம். அப்படியிருந்தும் நம் மனம் உள்ளூர நொந்துகொண்டே இருக்கிறது. அவருக்குத்தான் இவ்வளவு ஆத்திரமென்ன? அன்று முதன்முதலாக அவரைச் சந்தித்த பொழுது ஐந்து, பத்து நிமிஷம் தாமதமாகிவிடவில்லையா? இப்பொழுது அப்படிப்பட்ட ஒரு தாமதம் ஏற்பட்டு அவர் நம் நடுவே இருந்தால்,............ஆனால் இதெல்லாம் வீண்யோசனை. இந்த "இருந்தால்" என்பதற்கு விடை உண்டோ? சுதந்திர தேவதையை இந்திய நாட்டின் வாயிற்படிவரையில் அழைத்துவரும் வேலைதான் அவருடையது. அந்தத் தேவதையின் நலன்களை அனுபவிக்க அவருக்குத் தருணமில்லை. அனுபவிக்கும் பெரும்பாக்கியம் நமக்குத்தான் உண்டு. நம் மக்களுக்குத்

தான் உண்டு. இதில் நாம் எவ்வளவு வருந்தித்தான் பயன் என்ன ?

வர்தா என்ற புண்ணிய க்ஷேத்திரத்திற்கு என்னை இழுத்தவர் மஹாதேவ தேசாய்தான். இப்பொழுது ஆகாகான் மாளிகை என்ற புதிய க்ஷேத்திரத்திற்கு என்னைக் கைப்பற்றி இழுக்கக்கூடிய ஒருவர் எங்கே கிடைக்கப் போகிறார்? இந்தப் புதிய க்ஷேத்திரத்தின் மஹிமையே மஹிமை. இங்குத் தாயினுடையவும் மகனுடையவும் சமாதிகள் பக்கத்திலிருக்கின்றன. இங்கு நம் நாட்டின் ஆயிரக்கணக்கான ஆண்பெண் மக்களின் மனது ஒளிவீசும் தீபங்களைப்போல் குடிகொண்டிருக்கத் துளசி அவைகளை பாதுகாத்துவருகிறாள்; இவர் மாண்ட பொழுது அன்னை கஸ்தூரிபாய் 'மஹாதேவ்!' என்று கதறியது மூர்ச்சையடைந்து கிடக்கும் நம் நாட்டின் ஆன்மாவே கதறியதுபோலிருந்தது. இவருக்காகத் துர்க்காதேவி சிந்திய கண்ணீர் அவருடைய கண்ணீர்மட்டுமல்ல, மஹாதேவ தேசாயினுடைய உறவினர்களுடைய கண்ணீரெல்லாம் அவள் ஒருத்தியினுடைய கண்ணிலிருந்து வெளிவந்தது.

எனக்கு ஒரு நிகழ்ச்சி ஞாபகம் வருகிறது. டில்லியில் 'பிர்லா பவன்' என்ற மாளிகையில் மஹாதேவ தேசாயும் சி. நாராயணனும் 'பாட்மிண்டன்' ஆடிக்கொண்டிருந்தார்கள். நான் நாராயணனை "நீ தோல்வியடையக் கூடாது" என்றேன். அதற்கு அவன் "லவ் கேம் (Love game) எடுக்கிறேன், பார்த்துக்கொள்ளுங்கள்" என்றான். இது அவனுக்கு நினைவிருக்கிறதோ இல்லையோ! மறக்கக்கூடாது என்றுதான் நான்கடவுளை வேண்டிக் கொள்கிறேன்.

# தேசாயின் சில நினைவுகள்

## (கனசியாமதாஸ் பிர்லா)

மஹாதேவ தேசாயுடன் முதன் முதலாக எனக்கு அறிமுகம் ஏற்பட்டது எப்பொழுது என்பது இப்பொழுது எனக்கு நினைவில்லை. நெடுநாளைய நெருங்கிய நட்பின் பாரத்தின்கீழ் அது எங்கேயோ மறைந்து விட்டது. மஹாதேவ தேசாயுடன் பழகியதில் நிகழ்ந்த பல இனிய நிகழ்ச்சிகளை நான் இன்று நினைவூட்டிக்கொள்கையில் அவர் இறந்துவிட்டாரென்பதை நான் நம்பமுடியாமலிருக்கிறது. மற்றொருமுறை இனி நாம் அவரை ஒருநாளும் காணமுடியாத நிலை வந்து விட்டதே என்று நினைக்கும் பொழுதெல்லாம் கண்ணீர் வந்துவிடுகிறது. வாழ்க்கையின் இயற்கையான முடிவு தான் இறப்பு. இதேவிதமாக இறப்பின் இயற்கை முடிவே பிறப்பு என்று அறியவேண்டும். எனினும் ஒரு உறவினன், அதிலும் ஓர் உத்தமன் மாண்டானென்றால் நாம் துக்கத்திற்குட்பட்டே தீருகிறோம். இதைக் கருதியே பர்த்ருஹரி, "இவ்வுலகம் அமுதமோ விஷமோ புரியவில்லையே!" என்று சொன்னார் போலும்.

மஹாதேவ தேசாயினுடைய நினைவுகளை எழுதுவது எனக்குச் சுலபமுமாகும், மிகக் கடினமுமாகும். கணக்கற்ற நினைவுகளை எங்கு ஆரம்பித்து எங்கு முடிப்பது? அவை அனைத்தும் ஒன்று தவறாமல் இன்பத்தை யூட்டும்

நினைவுகள். மஹாதேவ தேசாய் கோபமடைந்தோ கலவரங்கொண்டோ பார்த்ததாக எனக்கு நினைவே இல்லை. அறுபது நாழிகையும் அவர் முகத்தில் புன்முறுவல் வீற்றிருக்கும். அவர் ஆவேசம் கொண்ட பக்தனுகவும் விளங்கினுர்; எவரிடத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதை நன்கு அறிந்தவராகவும் இருந்தார்; ஒவ்வொரு நிமிஷமும் ஏதாவதொரு வேலையில் ஈடுபட்டிருப்பார்; சோம்பலை அறியாதவர்; ஞானத்திற்கோர் பொக்கிஷம். பெருந்தன்மை வாய்ந்த அவர், சிரிப்பு விளையாட்டுக்களிலும் எளிதில் கலந்துகொள்ளக் கூடியவர். காந்தி அடிகளின் காரியதரிசி ஸ்தானத்தைத் திறமையுடன் அலங்கரித்துக் காந்தி அடிகளின் பணிகளிலேயே தம் உயிரை நீத்தார். மஹாதேவ தேசாய் மாண்டதால் காந்தி அடிகள் அனுதையாய் விட்டார்! —என்று ராஜாஜி கூறியது உண்மையே.

ஒரு பெரியாருக்குக் கடிதம் எழுதுகையில், "நான் காந்தி அடிகளுக்குக் காரியதரிசி, மகன், ஊழியன் என்ற மூன்றும் ஒன்ருனவன்" என்று மகாதேவ தேசாய் தன்னைக்குறித்து எழுதியிருந்தார். நான் மஹாதேவ தேசாயை இந்த மூன்று வடிவங்களிலும் கண்டிருக்கிறேன். நான் அவருடன் சொந்தச் சோதரனைப்போல் நெருங்கிப் பழகியதால் அவருடைய காரியதரிசிப் பதவி எனக்குப் பிரமாதமாகக் காணப்படவேயில்லை. ஆனுல் காரியதரிசியென்ற முறையில் அவர் என்னிடத்திலும் வர நேரிடும் என்பதை ஒரு முறை கண்டேன். அதன் பயனுக மஹாதேவ தேசாயிடத்தில் நான் வைத்திருந்த மதிப்பு பன்மடங்கு அதிகரித்தது.

பல வருஷங்களுக்கு முன் காந்திஅடிகள் டில்லிக்கு வந்து 'ஹரிஜன நிவாஸ்'த்தில் தங்கியிருந்தார். அதே சமயத்தில்தான் மஹாகவி டாகுரும், "விச்வ பாரதி"க்குப் பணம் திரட்ட தேசயாத்திரை நடத்திவந்தார். அவரும் டில்லி வந்து சேர்ந்தார். கவிஞர் ஆங்காங்குத் தம் கலை மேம்பாடுகளைக் கண்காட்சியாகக் காட்டுவார். பிறகு ஜனங்களிடத்தில் சென்று பணம் கேட்பார். இது காந்தி அடிகளுக்கு வருத்தத்தை உண்டாக்கிற்று. இவ்வளவு பெரிய குருதேவர் இந்த முதிர்ந்த பருவத்தில் ஆங்காங்குச் சென்று பணத்திற்காக—அதுவும் கேவலம் அறு பதினாயிரம் ரூபாய்க்காக—நடனங்களும் நாட்டியங்களும் நடத்துகிறார் என்பது காந்தி அடிகளுக்குப் பொறுக்க முடியவில்லை. நான் தினந்தோறும் காந்தியடிகளைக் காண்பதுண்டு. ஆனால் அவர் இது விஷயமாக என்னிடத்தில் ஒன்றுமே சொல்லவில்லை. அவருடைய மன வருத்தம் மட்டும் வளர்ந்துகொண்டே வந்தது. சகிக்க முடியாத நிலைமை வந்தவுடன் அவர் தம் வருத்தத்தையெல்லாம் மஹாதேவ தேசாய்க்கு எடுத்துரைத்தார்.

இரவு சுமார் பத்துமணி இருக்கும். நான் தூங்கவில்லை. விளக்கை அணைத்துவிட்டுத் தூங்கத் தயாராய்க் கொண்டிருந்தேன். திடீரென யாரோ வரும் கால் சத்தம் கேட்டு விழித்துக்கொண்டேன். "யாரது?" என்றேன். "நான்தான்" என்ற பதில் வந்தது. மஹாதேவ தேசாய் பேசாமல் என் அறைக்குள் வந்து என் கட்டிலுக்கு அருகில் உட்கார்ந்துகொண்டார்.

"யார், மஹாதேவ தேசாயா? ஏது, இந்த இரவு நேரத்தில்! எல்லோரும் சௌக்கியந்தானே?" என்றேன்.

“ஆஹா! எல்லோரும் சௌக்கியந்தான். ஒரு விஷயம் கேட்க வந்தேன்.” என்றார் அவர்.

நான் கட்டிலிலிருந்து எழுந்திருக்க முயற்சி செய்தேன். ஆனால் அவர், “வேண்டாம், படுத்துக்கொண்டே பேசலாம், எழுந்திருக்கவேண்டியதில்லை,” என்றார்.

நான் மறுபடியும் எழுந்திருக்க முயற்சித்தேன். ஆனால், மஹாதேவ தேசாய் வற்புறுத்தியதால் நான் படுத்துக்கொண்டே இருக்கவேண்டியதாயிற்று. “சரி, விஷயம் என்ன?” என்றேன். மஹாதேவ தேசாய், ஒரு சிறு உபந்நியாசம் செய்யத்தொடங்கினார். அதை எழுதி இங்கு விளக்கக்கூடிய திறமை எனக்கேது? காந்தி அடிகளின் மனோவேதனையை அவர் சித்திரித்துக் காட்டிய திறமையை நான் என்னென்று சொல்வேன்? காந்தி அடிகள் என் முன்னிலையிலேயே துன்பப்பட்டுக் கொண்டிருப்பதாக எனக்குப் புலப்பட்டது. மஹாதேவ தேசாயினுடைய வாக்கில் ஆவேசமிருந்தது, இனிமையிருந்தது, ஒளி யிருந்தது. குருதேவருடைய பெருமை, அப்படிப்பட்ட குருதேவர் ஒரு சிறு தொகைக்காக நாட்டியமாட நேர்ந்த துரதிருஷ்டம், காந்தி அடிகளின் மனவேதனை இவைகளை யெல்லாம் அவர் விளக்கியதைக் கேட்டு எனக்கு அழுகை வந்துவிட்டது.

“நீ போய்க் கனசியாமதாஸிடத்தில் அவருடைய ஆறு நண்பர்களைக்கொண்டு ஆளுக்குப் பத்தாயிரமாகக் குருதேவருக்கு அளித்து இந்தியாவை இப்பெரும் வெட்கத்தினின்று காப்பாற்றி குருதேவரைக் கவலையற்றுச் சாந்தி நிகேதனத்தில் இருக்குமாறு அனுப்பச் சொல் என்று காந்தி அடிகள் சொன்னார்” என்று மஹாதேவ தேசாய் தன் சொற்பொழிவை முடித்துக் கொண்டார்.

நான் சொன்னேன், "மஹாத்மாவின் மன வருத்தத்தை நான் உணருகிறேன். ஆனால், நீ இதற்காக இவ்வளவு நேரம் கழித்து இந்த நடுநடுக்கும் குளிரில் இங்கு வருவானேன்? மஹாத்மாவே முடிவு கூறியிருக்கலாமே. நான் யாரைப்போய் கேட்கப் போகிறேன்? நீ காந்திஜியிடம் சென்று என்ன வேண்டுமோ அதை என்னிடம் பெற்றுக் குருதேவரிடம் அளித்துவிடும்படிச் சொல்" என்று நான் கூறினேனே தவிர இதன் பெருமை மஹாதேவ தேசாயினுடையதே. அவருடைய அமைதியும் ஆர்வமும் பொருந்திய உபந்நியாசத்தைக் கேட்ட பின் நான் வேறு எப்படித் தீர்மானிக்க முடியும்?

ஒரு திறமை வாய்ந்த சிற்பி வெறும் மண் உருண்டையைத் தன் விரல்களின் வேலைபாட்டினாலேயே நினைத்த உருவமாகவெல்லாம் மாற்றிவிடுகிறான். இதே விதமாக மஹாதேவ தேசாய் ஜனங்களிடையே மனதை எப்படியோ தாக்கித் தான் நினைத்தபடியெல்லாம் செய்விக்கும் ஒரு திறமையைப் பெற்றிருந்தார். இந்தத் திறமை அவருடைய எழுதுகோலிலும் இருந்தது. ஆனால் அவருடைய வாக்கில் மிகவும் மேம்பட்டு விளங்கியது. திறமை வாய்ந்த ஓர் மந்திரி ஒருமுறை அடக்கமாயிருப்பான்; ஒரு முறை உணர்வற்றவனாக விளங்குவான்; ஒருமுறை பொறுமைசாலியாய் விளங்குவான்; ஒருமுறை பொறுமையற்றவனாய் விளங்குவான்; ஒருமுறை ஆவேசம் கொள்வான்; ஒருமுறை காரியத்தை முடித்துக் கொள்ளும் முறையை நாடுவான். மஹாதேவ தேசாய் அவசியம்போல் இவ்வனைத்தையும் கையாளும் திறமை வாய்ந்தவர்!

தக்கர் பாபாவின் எழுபதாவது ஆண்டு நிறைவை அவருடைய சில நண்பர்கள் கொண்டாட நினைத்தார்கள். இதற்காக அவர்கள் செய்த ஏற்பாடு முற்றிலும் சுவையற்றிருந்தது. அவருடைய எழுபதாவது வயதில் அவருக்கு எழுபது நூறு அதாவது ஏழாயிரம் ரூபாய் அளிக்க வேண்டுமென்ற ஏற்பாடு. இதைக் கேட்டவுடன் காந்தி அடிகள், "தக்கர் பாபாவின் எழுபதாவது ஆண்டில் எழுபது நூறு? எழுபது லக்ஷமல்ல, ஏழு லக்ஷமும் இல்லையா! குறைந்தது எழுபதாயிரம் சேர்த்தே தீர வேண்டும்" என்றார். ஆனால் இந்த எழுபதாயிரமும் மலைபோல் காணப்பட்டது. ஆண்டுநிறைவு நாள் நெருங்கிக்கொண்டு வந்தது. பணம் சேர்ந்தபாடில்லை. கடைசியில் காந்தி அடிகள் மஹாதேவ தேசாயைப் பம்பாய்க்கு அனுப்பினார். அவர் சென்ற உடனே பணம் பொழிய ஆரம்பித்தது. இரண்டு நாட்களில் லக்ஷத்து இருபதினாயிரம் ரூபாய் சேர்ந்துவிட்டது.

சில வருஷங்களுக்குப் பிறகு குஜராத்தில் பஞ்சம் ஏற்பட்டது. அப்போது மறுபடியும் காந்தி அடிகள் மஹாதேவ தேசாயைப் பணம் சேகரிக்கக் குஜராத்துக்கு அனுப்பினார். சுமார் மூன்று லக்ஷம் வசூலிக்க வேண்டுமென்று உத்தேசம். ஆனால் வசூலான தொகை எழு எட்டு லக்ஷம். கஞ்சத்தனத்தில் நிகரற்றவரெனக் கருதப் பட்ட பலரும் மஹாதேவ தேசாய்க்கு நல்ல தொகைகள் அளித்தார்களென்பது இதில் ஒரு விசேஷம்.

உண்மையில் மஹாதேவ தேசாய் காந்தி அடிகளினுடைய காரியதரிசி அல்ல. அவருடைய மற்றொரு உடலாகவே விளங்கிவந்தார். இவர் காந்தி அடிகளின் எண்ணங்களை நன்கு அறிந்து கரைத்துக் குடித்த

வர். இதனல் இவர் காந்தி அடிகளுக்குப் புத்திமதி கூறுபவராகவும் வழிகாட்டியாகவும்கூட ஆக நேர்ந்தது.

சில நாட்களுக்கு முன் வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர் ஒருவர், தற்கால நிலைமையைப் பற்றிக் காந்தி அடிகளின் அபிப்பிராயத்தை அறிய வந்தார். காந்தி அடிகள் சாப்பிட்டுக்கொண்டே மஹாதேவ தேசாயைக் கொண்டு ஒரு அறிக்கை எழுதுவித்தார். நான் இதை நேரில் கண்டேன். காந்தி அடிகளின் வாயினின்று வெளி வருவதற்கு முன் சொற்கள் எழுத்துமூலமாக மஹாதேவ தேசாயின் காகிதத்தில் ஏறிவிடும். இதனல் அவர் மிகவும் விரைவாக எழுதுவாரென்பது மட்டு மல்லாமல், காந்தி அடிகள் எந்தெந்தச் சொற்களை எவ்வெப்பொழுது உரைப்பார் என்று தேசாய் நன்கு உணர்ந்திருந்தார் என்பதும் விளங்குகிறது. இதனல் தான் காந்தி அடிகள் பேசிமுடிப்பதற்கு முன் மஹாதேவ தேசாய் எழுதி முடிப்பார். ஆனல் காந்தி அடிகள் உரைப்பதில் ஏதாவது தகாத சொல் வந்துவிட்டால் தேசாயின் எழுத்து தடைபட்டு நின்றுவிடும். அச் சொல் தனக்குப் பிடிக்கவில்லை என்பதை மஹாதேவ தேசாய் அறிவித்துக்கொள்வார். சிறிதுநேரம் வாக்கு வாதம் நடக்கும். பிறகு மறுபடியும் தேசாய் எழுதத் தொடங்குவார். இது உண்மையில் காணத்தக்க ஓர் காட்சி யாகும். ஆனல் இதைக்காட்டிலும் அருமை யான மற்றொரு காட்சியும் கண்டிருக்கிறேன். காந்தி அடிகள் குஜராத்தியிலோ ஹிந்தியிலோ சொற்பொழி வாற்றுவார். அதே சமயத்தில் மஹாதேவ தேசாய் காந்தி அடிகளின் உபந்நியாசத்தைப் பத்திரிகைகளுக்கு அனுப்புவதற்கு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதிக் கொண்டேவருவார். இது எல்லோராலும் முடிவதா?

காந்தி அடிகளைத் தெய்வமாய்க் கருதிவந்தாரே ஆயினும் அவருக்குத் தனிப்பட்ட அபிப்பிராயங்களும் உண்டு. காந்தி அடிகளின் அபிப்பிராயங்களை ஆக்ஷேபிக்கும் திறமை பெற்றவர் அவர். அவருடன் சண்டையிட சாமர்த்தியம் பெற்றவர். காந்தி அடிகளும் அவர் பேச்சுக்களை நன்ருகக் கேட்பார். சில வேளைகளில் அவர் காந்தி அடிகளின் அபிப்பிராயங்களைக் கடுமையாகக் கண்டிப்பார். ஆனால் அக் கண்டனத்தில் மரியாதையும் பக்தியும் ததும்பி நிற்கும்! கடைசியில் காந்தி அடிகள் ஒரு நிச்சயம் செய்துவிட்டா ரென்ருல் மஹாதேவ தேசாய் வாயைத் திறக்கமாட்டார். முழு உறுதியுடன் காந்தி அடிகளின் நோக்கங்களை ஆமோதிப்பார். வீண் சந்தேகங்கள் தலையெடுக்க விடமாட்டார்.

காந்தி அடிகளைப் போலவே நடக்கவேண்டும், அவரைப்போல் ஆடை அணியவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு எப்பொழுதுமே உதிக்கவில்லை. குட்டிக் காந்தியாக வேண்டு மென்ற விருப்பம் ஏற்படவேயில்லை. வாழ்நாள் முழுவதும் காந்தி அடிகளைப் பின்பற்றித் தன்னைக் காந்தி அடிகளின் எண்ணங்கள் மயமாக்கிக் கொண்டு அவர் வேறு, தான் வேறு என்ற பேதமில்லாமல் ஆகிவிட்டார்.

சென்ற இரண்டு மூன்று வருஷங்களில் மஹாதேவ தேசாய் காந்தி அடிகளுடன் வாக்குவாதம் செய்து அவரது உபவாசம் செய்யவேண்டு மென்ற அபிப்பிராயத்தைக் கண்டித்திருக்கிருர். பன்முறை காந்தி அடிகள் உபவாசம் செய்யவேண்டு மென்று செய்த முடிவை மாற்றியு மிருக்கிருர்.

இன்று காந்தி அடிகளுடன் வாக்குவாதம் செய்யக் கூடியவர் யார் இருக்கிறார்? காரியதரிசியாகவும் புத்திமதி கூறுபவராகவும் ஊழியனாகவும் மகனாகவும் விளங்கும் ஓர் காரியதரிசி எங்கேயாகிலும் உண்டோ?

பல வருடங்களுக்கு முன் பகவத்கீதையை மஹாதேவ தேசாய் தன் சில சொந்தக் கருத்துக்களைச் சேர்த்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துவைத்தா ரென்று பலருக்குத் தெரியாமலிருக்கலாம். அவருடைய அறிவிற்கோர் அளவில்லை. மேல்நாட்டுத் தத்துவ சாஸ்திரத்தை அவர் எவ்வளவு அறிந்தாரோ அவ்வளவே நம் நாட்டு சாஸ்திரத்தையும் அறிந்திருந்தார். ஆகையால் கீதையை மொழிபெயர்க்கத் தகுதிபெற்றவர் என்பது திண்ணம். தான் எழுதிய மொழிபெயர்ப்பை அவ்வப்பொழுது அவர் எனக்குப் படித்துக் காட்டுவார். எனக்கு அது மிகவும் பிடித்திருந்தது. அப்பொழுது அந்த மொழிபெயர்ப்பு வெளியாகவில்லை. அதை அச்சிட்டு வெளியாக்கும்படி அவரை நான் பன்முறை கேட்டுக்கொண்டேன். ஆனால் காந்தி அடிகளுக்குத் தொண்டு செய்து ஓய்வு பெற்றாலன்றோ அவர் இந்த வேலையைக் கவனிப்பார்? காந்தி அடிகளைப்பற்றி அவ்வப்பொழுது அவர் சேர்த்துவைத்த குறிப்புக்கள் அவரிடத்திலே ஏராளமா யிருந்தன. அவை காந்தி அடிகளின் பெரும் சரித்திரம் எழுதுவதற்கு மிகவும் உபயோகமா யிருக்கும். "மஹாதேவ், நீ தான் காந்தி அடிகளின் பெருஞ் சரித்திர மொன்று எழுதவேண்டும்" என்பேன். அவர் "ஆகா அப்படியே" என்பார். அந்தோ! இது வெறும் பேச்சாக முடிந்துவிட்டதே!

ஏதோ திடீரென்று மஹாதேவ் மரண மடைந்தா ரென்று நாம் நினைக்கலாகாது. கொடுங் காலன் ஐந்து

வருஷங்களுக்கு முன்பே அவரை ஒருமுறை அழைத் தான். காந்தி அடிகள் மிகவும் வற்புறுத்தியதின்மேல் அவர் ஓய்வெடுத்துக்கொண்டு யமனிடம் செல்வதி லிருந்து தப்பினர். இராஜகோட்டை சம்பந்தமான கிளர்ச்சி நடந்தபொழுது அவருக்கு மற்றொரு முறை அழைப்பு வந்தது. அப்பொழுது அவர் தில்லிக்கு வந்து என்னுடன் இரண்டுமாதகாலம் தங்கிக் குண மடைந்தார். இதற்குப் பிறகு பன்முறை காந்தி அடிகள் வற்புறுத்தியும் அவர் ஓய்வெடுத்துக்கொள்ளவில்லை. எட்டு-பத்து மாதங்களுக்கு முன்பு அவர் மறுபடியும் நோய்வாய்ப்பட்டார். எவ்வளவோ சொல்லியும் அவர் இரண்டு வாரங்களுக்கு மேல் ஓய்வெடுத்துக்கொள்ள வில்லை.

சில மாதங்களுக்கு முன்பு நடந்த மற்றொரு சம்பவம் வைகாசிமாதம். கடுமையான வெயில். காந்தி அடிகளுடன் போய்க்கொண்டிருக்கையில் அவர் மயக்கமடைந்துவிட்டார். இதைப்பற்றிக் கேள்விப்பட்ட பொழுது நான் மஹாதேவைப் பார்த்து, "மஹாதேவ், வெட்கம்! வெட்கம்! கிழப்பருவத்தில் காந்தி அடிகள் கடும் வெயிலில் நடந்து செல்கிறார். நீ மயக்க மடைந்து விடுகிறாய். இது சரி யல்ல. சில நாட்கள் என்னுட னிருந்து ஓய்வெடுத்துக் கொள்" என்றேன்.

ஆனால் காங்கிரஸ் போராட்டம் ஆரம்பிக்கப்போவதை அப்பொழுது உணர்ந்தார் அவர். காந்தி அடிகள் உபவாசம் செய்வாரோ என்ற பயம் ஒருபக்கம். ஆகையால் அவருக்கு ஓய்வு பிடிக்கவில்லை. அதற்கு அவகாசமும் கிடைக்கவில்லை. காந்தி அடிகள் உபவாசம் செய்ய நிச்சயித்துவிடுவாரோ என்ற பயம் அவருக்கு

மிகவும் அதிகம். என்னுடன் இருக்கவேண்டு மென்று வற்புறுத்தியதற்கு அவர், "நான் மூன்று மாதம் ஓய்வெடுத்தாலும் கூட காந்தி அடிகளுக் கிணை யாகமுடியுமா? வெயிலில் நடப்பது என்னால் இயன்ற தல்ல. எனக்கு நீண்ட ஆயு ளென்ப தில்லை. ஏதோ பணி செய்து கொண்டே காந்தி அடிகளின் மடியில் தலை சாய்த்து உயிரிழக்கும் பாக்கியம் பெற்றால் போதும்" என்றார்.

இதைக் கேட்டுக் கடவுள், "ததாஸ்து" என்றார் போலும்!

**யாரறிவார், நாமிழந்த மாணிக்கத்தின் மதிப்பை?**

# மஹாதேவ தேசாய்

(பண்டித சுந்தர்லால்)

நான் ஸ்ரீ மஹாதேவ தேசாயை முதன்முதலாகத் தில்லியில் ப்ரின்ஸிபல் ருத்ரா அவர்களுடைய மனையில் முப்பது வருஷங்களுக்கு முன் கண்டேன். அங்கு அவர் காந்தி அடிகளுடன் தங்கி யிருந்தார். அழகு பொருந்தியவர், வாலிபர், நற்குணம் வாய்ந்தவர். சதா சத்தியத்தை நாடுபவர். வக்கீல் பரீக்ஷை தேறியும் அவர் மனம் வக்கீல்தொழிலை நாடவில்லை. காந்தி அடிகளின் நடை உடைகளும் எண்ணங்களும் அவரைக் கவர்ந்து விட்டன. அவருடைய காந்திபக்தி நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வந்தது. எந்தவிதமான வாழ்க்கை அவருக்கு நலமெனத் தென்பட்டதோ அதையே அவர் பின்பற்றினர். எந்த வாழ்க்கையின் நோக்கத்தை அவர் கடமை யெனக் கருதினரோ அதைக் கடைசிவரையில் விடவில்லை. கஞ்சன் பணத்தைப் பாதுகாப்பது போலவே அவர் கடமையைப் பாதுகாத்து வந்தார்.

மனிதன் மற்றெல்லாவிதமான விருப்பங்களையும் வெல்லலாம். தான் பெருமை யடையவேண்டும், கௌரவம் பெறவேண்டும் என்ற விருப்பத்தை வெல்ல முடியாதென்பார்கள். ஆங்கிலத்தில் இதை மனிதனின் கடைசிக் குறை என்பார்கள். ஆனல் மஹாதேவ தேசாய் இந்தக் குறையையும் முற்றிலும் களைந்து விட்டார். அவர் வெகு சுலபமாக இதைக் களைந்ததைக் கண்டு இது உண்மையில் அவ்வளவு கடினமானதா என்று நினைக்க வேண்டியிருக்கிறது. இந்த முப்பது

வருஷகாலமாக எங்களிருவருடைய அன்பு வளர்ந்து கொண்டே வந்தது. ஆச்ரமத்திலிருந்தபொழுது ஒருவரோடொருவர் நெருங்கியிருக்கவும், நெருங்கிப் பழகி அறியவும் தருணம் வாய்த்தது. தான் உபாசிக்கும் தெய்வத்திலே மூழ்கிவிடுவது பக்தனின் சிறப்பு என்பார்கள். முகம்மதியர்களில் 'சூபீ' எனப்படுவோர் இதை 'பஞ பில்லா' என்பார்கள். மஹாதேவ தேசாய் காந்தி அடிகளையே தெய்வமாகக் கருதி வந்தார். அவர் காந்தி அடிகளுக்குள்ளே எப்படி மூழ்கி யிருந்தார் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். மனிதன் தெய்வத்தை மனித வடிவத்திலேயே காண்கிறான். இது ஒரு புதுமையல்ல, எல்லாத் தேசங்களிலும் எல்லா மதங்களிலும் பக்தர்கள் இவ்வாறு கண்டிருக்கிறார்கள். கபீர்தாசர், "குரு, கடவுள் இருவரையும் ஒன்றாக நேரில் கண்டால், முதலில் குருவை வணங்குவேன், பிறகே கடவுளை வணங்குவேன்" என்கிறார். ஒரு முகம்மதியக்கவி, "மானிடவடிவத்திலேயே கடவுள் இருந்தான், நான் உணரவில்லை. சந்திரன் மேகங்களுக் கிடையே மறைந்திருந்தான், நான் உணரவில்லை" என்கிறார்.

காந்தி அடிகளுக்கும் மஹாதேவ தேசாய்க்குமிடையே தர்க்கம் நடக்கும். தர்க்கம் சண்டையாய் விளங்கும். ஆனால், சண்டை அன்பு நிறைந்ததாயிருக்கும். உண்மையில் காந்தி அடிகளின் நன்மைக்காகவே மஹாதேவ தேசாய் தன்னை அழித்துக்கொண்டார். மற்றெல்லா விருப்பங்களையும் வென்று, தற்புகழ்ச்சி என்ற விருப்பத்தைமட்டும் வெல்லமுடியாமலிருக்கும் பல தேசத் தொண்டர்களுக்கு மஹாதேவ தேசாயின் வாழ்க்கை வழிகாட்டியாகும். என்போன்ற பலருக்கு அவருடைய நினைவு சகிக்கமுடியாத துக்கத்தை அளிக்கிறது.

# காந்தியடிகளின் மஹாதேவ்

(காசீநாத த்ரிவேதி)

சுமார் இருபத்தொரு வருஷங்களுக்குமுன் நான் இந்தூர் நகரில் கிரிஸ்டியன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். 1925-ம் ஆண்டு வெயிற்கால விடு முறையில் நான் 'கண்டுவா' என்ற ஊரிலிருந்து வெளி யாகும் "கர்மவீர்" என்ற பத்திரிகைக் காரியாலயத்தில் சுமார் ஒரு மாதகாலம் தங்கநேர்ந்தது. "ஹிதைஷி" என்ற மாதப் பத்திரிகை அச்சிடவேண்டியிருந்தது. அதை "கர்மவீர்" அச்சுச்சாலையில் அச்சிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அச்சுச்சாலையின் சொந்த வேலையே மிகவும் அதிகமாயிருந்ததால் எங்களுடைய வேலை மிகவும் தாமதமாக நடந்துவந்தது. அங்கிருந் தவர்களெல்லாம் தேசீயத்தில் ஈடுபட்டவர்கள். இவ் விதமாக முதன் முதலாக நான் தேசீயத்தில் ஈடுபடலா னேன். அப்பொழுது மாகன்லால் சதுர்வேதி அவர்களும ‌காலம் சென்ற அகர்கர் அவர்களும் "கர்மவீர்" பத்திரிகை யின் ஆசிரியராயிருந்தார்கள். மத்ய மாகாணத்திலும், மத்திய இந்தியாவிலுமே சிறப்புடன் விளங்கிய இவ்விரு ஆசிரியச் சிங்கங்களுடன் கூடியிருக்கும் பெரும்பாக்கியம் எதிர்பாராமலே எனக்குக் கிடைத்தது. அங்குத் தங்கி யிருந்தபொழுது ஓய்வு நேரங்களில் நான் "கர்மவீர்" காரியாலயத்துப் புத்தகாலயத்திலிருந்து தேசீயப் புத்த கங்களை எடுத்துப் படிப்பது வழக்கம். இவைகளிலே கல்கத்தாவிலிருந்து 'ஹிந்தி புஸ்தக் ஏஜன்ஸி'யாரால்

வெளியிடப்பட்ட 'யங் இந்தியா'வின் மூன்று பாகங்கள் முக்கியமானவை. இம்மூன்றையும் நான் நன்கு படித்தேன். இவ்விதமாக முதல் முதலாக நான் காந்தி அடிகளின் அபிப்பிராயங்களை அறியலானேன். இதனால் என் மனமே கலங்கியது. இந்த மூன்று சிறந்த நூல்களையும் படித்ததின் பயனாக என் எண்ணங்களும் நோக்கங்களுமே மாறிவிட்டன. எனக்குக் காந்தி அடிகளின் வழி பிடித்தது. அதைப் பின்பற்ற வேண்டுமென்று நிச்சயித்துக் கொண்டேன்.

'யங் இந்தியா' படித்ததின் பயனாக நான் கதரின் உபயோகத்தை நன்குணர்ந்து அதில் பெரும் நம்பிக்கை கொண்டேன். விரைவிலேயே கதர் அணியவேண்டுமென்றும், நூல் நூற்கவேண்டுமென்றும் நிச்சயித்தேன். ஆனால் அந்நாட்களில் நினைத்ததை விரைவிலேயே நடத்தையில் காட்டக்கூடிய நிலையில் நானில்லை. ஏதோ ஒருவிதமாக மில் துணிகளை ஒழித்துக் கதர் அணிய ஆரம்பித்தேன். கல்கத்தாவிலிருக்கும் 'காதி ப்ரதிஷ்டானி'லிருந்து சர்க்கா வரவழைத்து நூல் நூற்கக் கற்றேன். இத்துடன் எனக்கோர் விருப்பமேற்பட்டது. 'யங் இந்தியா' படித்தல்லவா நான் நலம் பெற்றேன். அதன் ஹிந்தி மொழிபெயர்ப்பாகிய 'ஹிந்தி நவஜீவனை'க் கட்டாயம் படிக்க வேண்டுமென்று நினைத்தேன். அக்காலத்தில் நான் பத்திரிகைக்குச் சந்தா கட்டிச் சந்தாதாரனாகக் கூடிய நிலையிலில்லை. ஆனால் ஆவலோ அதிகம். ஆகையால் காந்தி அடிகளுக்குச் சபர்மதி விலாசத்திற்கு ஒரு கடிதம் எழுதினேன். இக் கடிதம் புகழச்சிகளும், அணிகளும் நிரம்பியதாயிருந்தது. இக்கடிதத்தில் எனக்கு இலவசமாக 'ஹிந்தி நவஜீவன்'

ஒரு பிரதி அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு கேட்டிருந்தேன். இதற்கு என்ன விடை கிடைக்குமோ என்று வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு முறை, கட்டாயம் வரும் என்று நினைப்பேன். மற்றொரு முறை எனக்கெங்கே கிடைக்கப் போகிறது என்று நினைப்பேன். என் மனம் இப்படி ஊசலாடிக் கொண்டிருக்கையில் ஒரு நாள் மஹாதேவ தேசாய் எழுதிய கார்டு ஒன்று கிடைத்தது. எழுத்துக்கள் முத்துக்கோர்த்தாற் போல் இருந்தன. நான் எழுதியிருந்த வீண் ஸ்துதி தகாது என்று அன்புடன் அறிவித்திருந்தார். இவ்விதமாக முதன் முதலாக நான் மஹாதேவ தேசாயின் அக்ஷர உடலைச் * சந்தித்தேன். அதுமுதல் 'ஹிந்தி நவஜீவனை' நான் தவறுமல் படித்து வருகிறேன்.

காந்தி அடிகளின் உயர் நோக்கத்தில் எனக்கு ஊக்கம் அதிகரித்துக் கொண்டே வந்தது. அவரை அணுகவும் அவருடன் கூடியிருக்கவும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமா, என் வாழ்க்கையைப் புனிதமாக்கிக் கொள்ள ஒரு தருணம் வாய்க்குமா என்று ஏங்கினேன்.

1929-ம் ஆண்டில் அதிருஷ்டவசமாக எனக்கு இப்பெரும் பாக்கியம் வாய்த்தது. ஸ்ரீ ஹரிபாவூ உபாத்தியாயர் அவர்களின் வற்புறுத்தலின் பயனாக நான் 'ஹிந்தி நவஜீவனி'ன் உதவி ஆசிரியர் வேலையை ஏற்றுக்கொள்ள நேர்ந்தது. அப்பொழுது நான் ஆஜ்மீரிலிருந்து வெளியாகிய 'தியாக பூமி' என்ற பத்திரிகையில் வேலை பார்த்துவந்தேன். அதை விட்டு விட்டு

* அக்ஷர் என்பதற்கு 'எழுத்து' என்பது அர்த்தம். எனவே இவ்விடத்தில் எழுத்தாகிய உடல் என்று கருத்து. அக்ஷரம் என்பதற்கு 'அழிவற்ற' என்ற மற்றொரு அர்த்தமும் உண்டு. எனவே 'அழிவற்ற உடல்' என்றும் கொள்ளலாம்.

1929, ஜனவரி, 1-ந் தேதி சபர்மதி ஆச்ரமம் போய்ச் சேர்ந்தேன். அங்கே காந்தி அடிகளைக்கண்டு களித்தேன்.

அந்நாட்களில் மஹாதேவ தேசாய், நிழலைப்போல எப்பொழுதும் காந்தி அடிகளுடன் கூடவேயிருந்து அவரிட்ட வேலையைச் செய்து கொண்டிருப்பார். அவரைப்போல் எப்பொழுதும் வேலையிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்த மற்றொருவர் காணப்படவில்லை. காந்தி அடிகளுக்கு மந்திரியாயிருந்து பலவிதத் தொண்டுகளைச் செய்துகொண்டிருப்பார். இதைக் கண்டு ஒவ்வொரு வரும் அவரை மதிக்கத் தொடங்கினர். விடியற்காலம் முதல் நடுநிசி வரையில் சதா வேலையிலேயே ஆழ்ந்திருக் கும் அவரைக் கண்டு பண்டைக் காலத்துக் கர்மயோகி களின் நினைவு வரும். மஹாதேவ தேசாய் உண்மையில் கர்மயோகியே என்பதில் சற்றும் சந்தேகமில்லை. பெரிய வேலையோ சிறிய வேலையோ, காந்தி அடிகள் வேலை யென்றால் அவைகளனைத்தையும் திறமையுடன் நிறை வேற்றுவார். அவருடைய வேலைத்திறமையையும் ஏகாக்ர புத்தியையும் கண்டு பெரிய பெரிய தலைவர்கள் அவரைப் பாராட்டுவார்கள். காந்தி அடிகள் இவரை எத்தனையோ பரீக்ஷைகளுக்குட்படுத்தி யிருப்பார். ஒவ்வொன்றிலும் இவர் பெருமையுடன் தேறி வந்தார். இவருடைய அமைதியும் அன்பும் நிறைந்த விவகாரத்தை ஆச்ர மத்திலிருந்த ஒவ்வொருவரும் புகழ்வார்கள்.

பல நூற்றாண்டுகளாக அடிமையாய் வாழும் இந் நாட்டின் அடிமைத்தனத்தைப்போக்க காந்தி அடிகள் தயாரித்த திட்டம், தேசத்தின் மிகப் பெரியோர்களுக்கு பெரும் பரீக்ஷையாயிருந்தது. தேசீயத் தொண்டையே விரதமாகக் கொண்ட தொண்டர்களுக்குக் காந்தி அடிகள்

இதிலும் கடுமையான விரதங்களும் நியமங்களும் ஏற்படுத்தினர். காந்தி அடிகள் தானும் இந்நியமங்களையும் விரதங்களையும் பரிபாலித்துவருவார். ஆச்ரமத்தில் தன்னுடன் வாழ்ந்துவந்த சகாக்களுக்கும் இவ்விரதங்களுக்கேற்ற வாழ்க்கை நடத்தவேண்டுமென்ற ஊக்கம் அளித்துவந்தார். ஆச்ரமம் ஓர் ஆராய்ச்சிசாலையாய் விட்டது. விஞ்ஞான சாஸ்திரி பற்பல பிரயோகங்கள் செய்து ஆராய்ச்சி செய்வதுபோலக் காந்தி அடிகள் செய்துவந்தார். ஆச்ரம வாழ்க்கையில் அஹிம்சை, சத்தியம் என்ற இரண்டு விரதங்களுடன் கள்ளாமை, நாவடக்கம், வெளவாமை முதலிய பல விரதங்களும் சேர்ந்தவை. இந்நியமங்கள் ஆச்ரமத்தில் வசிப்போரைப் பலவிதங்களிலும் பாதித்தன. சொந்த வாழ்க்கையிலோ குடும்ப வாழ்க்கையிலோ இந்நியமங்கள் பங்கமடையாவண்ணம் காப்பது சிரமமாகிவிட்டது. காந்தியோ மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தார். தன்னுடன் வசித்துவரும் ஆச்ரம வாசிகளும் அதேவிதமாக முன்னேறவேண்டுமென விரும்பினர். இது சாத்தியமாயில்லை. பலருக்கு இது பெருங் கஷ்டமாய் விட்டது. மஹாதேவ தேசாய்க்கும் ஆரம்பத்தில் இது கடினமாகக் காணப்பட்டிருக்கும் என்று கருதுகிறேன். ஆனால், அவரோ காந்தி அடிகளிடத்தில் அளவற்ற நம்பிக்கையும் பக்தியும் கொண்டவர். காந்தி அடிகளின் உயர் நோக்கங்களே உலகத்திற்கு நன்மையளிக்கும் என்று உணர்ந்தவர். எனவே, ஒருமுறை காந்தி அடிகளைப் பின்பற்றி வைத்தகாலை அவர் பின்வைக்கவேயில்லை. காந்தி அடிகளின் வாழ்க்கைக் கடுமையைக் கண்டு பலர் ஒரே நாளில் பயந்துவிடுவார்கள். ஆனல் அவருடன் இரு

பத்தைந்து வருட காலம் தங்கி அவருடைய ஒவ்வொரு பரீக்ஷையிலும் சிறப்புடன் தேறிவந்தார். இதனுல் தான் இவர் இந்திய நாட்டிலே மட்டுமல்லாமல் உலகம் முழுவதிலும் புகழ்பெற்றுவருகிருர்.

இங்கு 1930-ம் ஆண்டில் நடந்த ஓர் நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. லாகூர் காங்கிரஸில் பூர்ண சுதந்திரத் தீர்மானம் நிறைவேறிவிட்டது. சுதந்திரப்போருக்கு நாட்டைத் தயாரிக்கவும் வழிகாட்டியா யிருப்பதற்கும் உள்ள பொறுப்பு காந்தி அடிகளுக்கு அளிக்கப்பட்டது. லாகூரிலிருந்து திரும்பிய உடனே காந்தி அடிகள் சபர்மதி ஆச்ரமத்தைச் சுதந்திரப்போர் வீரர்களின் கேந்திரமாக்கிவிட வேண்டுமென்று நினைத்தார். படையில் வீரர்களிடத்தில் காட்டப்படும் கடுமை-கண்டிப்பெல்லாம் ஆச்ரமவாசிகளிடம் காட்டப்பட்டது. இச்சமயத்தில் புதியதாய் ஏற்பட்ட விதிகளில் மூன்று முக்கியமானவை:

1. ஆச்ரவாசி ஒவ்வொருவனும் காலையிலும் மாலையிலும் நடைபெறும் பஜனையில் கலந்துகொள்ள குறிப்பிட்ட நேரத்திற்குமுன் வந்துசேர வேண்டும்.

2. ஒவ்வொரு ஆச்ரமவாசியும் காலைச் சிற்றுண்டி, மத்தியான போஜனம், மாலைப் போஜனம் இம்மூன்றுக்கும் மணியடித்த உடனே வந்துசேரவேண்டும்.

3. ஆச்ரமத்திலிருப்பவர்கள் ஒவ்வொருவரும் தவருமல் நூல் நூற்க வேண்டும்.

இதில் தவறி நடந்துகொள்ளுகிறவர்களிடத்தில் காந்தி அடிகள் மிகக் கடுமையாக நடந்துகொள்வார். சிரத்தையற்ருே காலத்தைக் கவனியாமலோ இருப்போருக்குத் தண்டனையுண்டு. தக்க காரணமின்றி ஒரு மாதத்தில் மூன்று முறைக்குமேல் ஒரு நிமிஷம், அல்ல ஒரு

விஞடியும் தாமதமாய் வருகிறவர்கள் ஆச்ரமத்தை விட்டுத் தங்கள் தங்கள் வீட்டிற்குச் செல்லவேண்டியதுதான். இந்த விஷயத்தில் யாரிடத்திலும் எவ்விதமான பட்சபாதமும் கிடையாது. வேண்டுமென்றே மீறி நடப்போருக்கு அங்கே இடமே கிடையாது. பல நாட்களாக காந்தி அடிகளுடன் இருந்தும் இப்பொழுது இந்தப் புது விதிகளை நிறைவேற்ற முடியாத பலர் இருந்தார்கள். காந்தி அடிகள் சுதந்திரப் போராட்டத்தின் திட்டத்தை வகுத்துக்கொண்டிருந்தார். அவர் சித்திரை வைகாசி மாதத்து சூரியனைப்போல் விளங்கினர். அவருடைய சத்திய வெப்பத்தை அவருடன் மிக நெருங்கிப் பழகிய பல வீரர்களும் சகிக்க முடியாமல் வருந்தினர். அனைவரும் வருத்தமடைந்து யோசனை செய்யத்தொடங்கினர். இப்பெரும் வெப்பத்தில் இனி நாம் வசிக்க முடியாது. இது நம்மால் இயன்றதல்ல என்று நினைக்கலானர்கள். பலர் ஆச்ரமத்தையும் காந்தி அடிகளையும் விட்டுப் போவதென நிச்சயித்தும் காந்தி அடிகளிடம் இப்படிப்பட்ட கடும் நிபந்தனைகளுக் குட்பட்டு இருப்பது எம்மாலியன்றதன்று என்று சொன்னர்கள். அவருடைய பழைய சகாக்களெல்லாம் போய்விட காந்தி ஒருவர்மட்டும் தனியே நின்றுவிடுவாரோ என்ற சந்தேகமும் ஏற்பட்ட காலம். ஆச்ரம வாழ்க்கையில் அது ஓர் அதிசயத் தருணமாயிருந்தது. ஆனல் காந்தி அடிகளின் கவலை ஆச்ரமத்தைக் குறித்துமட்டு மல்லவே! இந்திய நாடனைத்தின் கவலையே அவருக்குப் பெருங் கவலையாக இருந்தது. ஒவ்வொருவராக வெளியேற முயல்வதைக் கண்ட காந்தி அடிகள் ஒரு முடிவு செய்தார். ஒவ்வொரு விஷயத்திலும் பிரத்தியேகமாக

ஆலோசித்து முடிவுசெய்யும் பொறுப்பைத் தாமே ஏற்றுக்கொண்டார். ஆச்ரமச் சட்டங்களை மீறினாலும் யார் ஆச்ரமத்தில் தங்கலாம், யார் தங்கக்கூடாது என்று தாம் கூறுவதே முடிவு என்றார். காந்தி அடிகளின் இந்தத் தீர்மானத்தால், ஓரளவு அமைதி ஏற்பட்டது. கலவரம் பெற்ற பலர் அமைதியுற்றார்கள். ஆச்ரம வாழ்க்கை மறுபடியும் படைத்தள வாழ்க்கையைப் போல் இருந்துவந்தது.

மஹாதேவ தேசாயும் இப் பெரும் புயலில் சிக்கிக் கொண்டவர்களில் ஒருவர். காந்தி அடிகள் விரும்பியதோ ஒரு உறுதி பெற்ற வீரரை, நான் அப்படிப்பட்ட வீரனைத் தகுதி உள்ளவன் அல்லன் என்று அவர் நினைத்தார். நன்கு ஆலோசித்த பிறகு ஒருநாள் அவர் காந்தி அடிகளிடம் சென்றார். வணக்கத்துடன் தன் அபிப்பிராயத்தைச் சொல்லி விடை பெற விரும்பினார். இதைக் குறித்து ஸ்ரீ பியாரேலால் இவ்வாறு எழுதியிருக்கிறார்:

“ ஆச்ரமத்தின் கடும் நிபந்தனைகளைக் கண்டு பயந்து மஹாதேவ தேசாய் ராஜினாமாச் செய்துவிட்டார். (இந் நிபந்தனைகள் பிறகு நீக்கிவிடப்பட்டன என்று நான் நினைக்கிறேன்). இந்த ராஜினாமாக் கடிதத்தை காந்தி அடிகள், ‘இக் கடிதத்தின் தர்க்கம் சரிவர இல்லை. ஆகையால் இது மஹாதேவின் உண்மை மன நிலையைக் குறிப்பதாகாது’ என்று சொல்லிக் கிழித்துவிட்டார். இந்தக் கலகம் முடிவுபெற்ற அழகே ஓரழகு. சற்று நேரத்திற் கெல்லாம் பக்தராகிய காரியதரிசி குருவுக்கு அஸ்தமிக்கும் சூரியனின் அருமைகளை எடுத்துரைத்துக் கொண்டிருந்தார்!

காந்தி அடிகள் தன்னிடத்திலும் தன்னைச் சேர்ந்தவர்களிடத்திலும் எவ்வளவு கடுமையாக நடந்துகொள்கிறாரோ அவ்வளவு இரக்கத்துடனும் தயவுடனும் அந்நியரிடத்தில் நடந்துகொள்வார். இது அவருடைய ஒரு விசேஷ குணம். அவருடைய இந்த இயற்கையான குணத்தினால் அவருடைய நண்பர்களுக்குச் சில சமயங்களில் மிகக் கஷ்டமான நிலைமை ஏற்பட்டுவிடும். அனுபவித்தவர்கள்தான் அந்நிலையை உணர முடியும். மற்றவர்கள் அறியவே முடியாது.

இருபத்தைந்து வருஷ காலம் காந்தியாகிய தீயில் காய்ந்து மஹாதேவ தேசாய் பத்தரை மாற்றுத் தங்கமாக விளங்கினார். அவர் காந்திமயமாகிவிட்டார். காந்தி இல்லாமல் தான் தனியே எப்படிப் பிழைத்திருப்பேன் என்று கதறுவார். காந்தியடிகளிடத்தில் அவர் பாராட்டிய அன்பு சிவனிடத்தில் உமை பாராட்டிய அன்பைப் போலிருந்தது, அல்லது ஒரு பதிவிரதை தன் கணவனிடத்தில் செலுத்தும் அன்பைப்போலிருந்தது என்று சொல்ல மனந் துணியவில்லை. இதனால் தான் போலும் காந்தி அடிகள் மஹாதேவ தேசாயை மகன், காரியதரிசி, சகா என்று கருதியது மட்டுமல்லாமல் தங்களிருவருக்குமிடையே இருந்த உறவு சிறந்த ஹிந்து தம்பதிகளுக்கிடையே இருக்கும் உறவைக் காட்டிலும் தூயதெனக் கருதினார். இருவரும் ஆத்மாவின் சம்பந்தத்தால் கட்டப்பட்டிருந்தார்கள். இதனாலே தான் ஒருவர் பிரிவை மற்றவர் சகிக்க முடியாதிருந்தார் போலும்.

1940-ம் ஆண்டில் 'இந்தியாவை விட்டுப் போ' என்ற கிளர்ச்சியை காந்தி அடிகள் துவக்கியபொழுது, சேவா

கிராமத்தில் இதைப்பற்றிய பேச்சுக்கள் நடந்தன. அப்பொழுது காந்தி அடிகள் சத்தியாக்ரஹத்தின் உத்தம ஆயுதமான "மரண பரியந்த உபவாசம்" என்பதைப் பற்றிப் பேசித் தம் தோழர்களுடைய அபிப்பிராயங்களைக் கேட்பார். 'இந்தியாவை விட்டுப் போ' கிளர்ச்சி சம்பந்தமாக ஒருக்கால் காந்தி அடிகள் கைது செய்யப்பட்டால் அவர் தேசத்தின் ஒரு பிரதிநிதி. சேனைத்தலைவன் என்ற முறையில் சிறைசென்ற உடனே அன்னாகாரத்தை விட்டு சர்க்கார் பணியும்வரை தம் விரதத்தில் உறுதி கொண்டிருப்பாரென்று சாதாரண ஜனங்கள் கருதத் தொடங்கினார்கள். இதனால் ஏற்படக்கூடிய பெருந் துன்பத்தை மஹாதேவ தேசாய் உணர்ந்தார். இதை எதிர்த்தே தீர வேண்டுமென்று தீர்மானம் செய்தார். யார் எது சொல்லியும் காந்தியடிகளிடத்தில் பலிக்கவில்லை. ஆனால் மஹாதேவ தேசாயின் சொற்கள் பயன் பெற்றன என்று சொல்கிறார்கள். சேவாகிராமத்திலிருந்து பம்பாய்க்குப் புறப்படுவதற்கு முன் அவர் காந்தி அடிகளிடம் சிறை சென்றபின் மரணம்வரை உபவாசம் ஆரம்பிப்பதில்லை என்ற வாக்குறுதி பெற்றாராம்.

இவ்வளவு இருந்தும் மஹாதேவ தேசாயின் தேகம் நிலைகொள்ளவில்லை. துன்ப மேகங்கள் தேசத்தைச் சூழ்ந்தன. எப்பொழுது என்ன நேரிடுமோ என்று எல்லோரும் பயந்திருந்தார்கள். வெடிமருந்து வர்த்தியில் தீ வைத்தாய்விட்டது. எந்த நேரத்தில் வெடிக்குமோ தெரியாமலிருந்தது. இந்நிலையில் அவர் காந்தி அடிகளுக்காகக் கவலைகொண்டது இயற்கை தானே. அவர் லட்சுமணரைப்போல் இரவும் பகலும் கண்விழித்து காந்தி அடிகளைக் காத்துவந்தார். அவர்

அறுபது நாழிகையும் இதே எண்ணத்தில் ஆழ்ந்திருந்தார் என்றுலும் ஆச்சரியமில்லை.

கடைசியாக அந்தப் பரீக்ஷை வேளையும் வந்தது. துன்பவேளையாகிய அந்த 1942-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 9-ம் தேதி உதயமாயிற்று. காந்தியடிகள் உள்பட ஆயிரக்கணக்கான தேசபக்தர்கள் பிடிக்கப்பட்டுச் சிறைக்கு அனுப்பப்பட்டனர். காந்தி அடிகளுடன் மஹாதேவ தேசாயும் பிடிக்கப்பட்டு ஆகாகான் மாளிகைக்கு அனுப்பப்பட்டார். அங்கு ஆறு நாட்கள் அவர் எப்படிக் கடத்தினுரோ அவருக்குத்தான் தெரியும்; அல்லது அவர்களுடைய தோழர்களுக்குத்தான் தெரியும். ஆனுல் அங்கேயும் காந்தி அடிகள் உபவாசம் இருந்துவிடுவாரோ என்ற பயமே அவரைத் துன்புறுத்தியிருக்க வேண்டுமென்பதில் சந்தேகமில்லை. தேசத்தின் நன்மைக்காக எப்படியாவது உயிர் வாழ்ந்திருக்க காந்தி அடிகள் நிச்சயிக்கவேண்டுமென்ற முயற்சியில் அவர் மனப்பூர்வமாய் ஈடுபட்டார். இந்தப் பெருங்கவலையில் அவருக்கு மரணமே மேல் என்று தோன்றிற்று. காந்தி அடிகள் உயிர் வாழ்ந்திருப்பதற்காகவே அவர் உயிர் இழக்க விரும்பினுரென்றுல் ஆச்சரியமில்லை. ஆகஸ்டு மாதத்துப் பதினைந்தாம் தேதி விடிந்தது. மஹாதேவ தேசாயின் தூய ஆன்மாவைத் தன்னிடம் அழைத்துவர யமன் தூதர்களை அனுப்பிவிட்டான். ஆனுல் இந்த விஷயம் ஒருவருக்கும் தெரியாது. பகவானுக்காக பக்தன் பலியாகும் நேரம் நெருங்கிவிட்டதென்பதை ஒருவரும் உணரவில்லை. அனைவரும் தம் தம் வேலையில் ஈடுபட்டிருந்தனர். யமதூதர்கள் வந்து சேர்ந்தார்கள். ஒரு நொடியில் அவர்கள் அழகும், ஆரோக்கியமும், பலமும்

நன்னடத்தையும் பொருந்திய மஹாதேவ தேசாயை வீழ்த்தி விட்டனர். யாரிடத்திலும் எதையும் சொல்லவோ கேட்கவோ ஒரு கண நேரமும் அளிக்கவில்லை. வெகு விரைவில் ஆகாகான் மாளிகையின் பூமி பலிபூமியாக மாறிவிட்டது. காந்தி அடிகள் மஹாதேவைக் கண் கொட்டாமல் பார்த்தார், வேண்டிக்கொண்டார். இவருடைய உடலில் ஏதாவதொரு மூலையில் உயிரிருக்காதா, நான் தொடுவதினால் உணர்ச்சிபெற்று எழுந்து உட்காரமாட்டாரா என்ற எண்ணத்துடன் போலும், இவருடைய உயிரற்ற உடலை அசைத்து அசைத்துத் தடவிக் கொடுத்தார். ஆனால் பலிக்கவில்லை. எமராஜனுக்கு காந்தி அடிகள் தலை வணங்க வேண்டியதாயிற்று.

காந்தி அடிகள் நிலையை உணர்ந்தார். இப்பொழுது மஹாதேவ் தந்தையானார், காந்திஜி மகனானார். எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது. எவருடைய தோளின்மீது ஏறிச் செல்ல விரும்பினாரோ, அவரையே தோள் கொடுத்துத் தூக்கவேண்டியதாயிற்று. மரணபரியந்தம் உபவாசம் என்ற பேச்சே மறைந்தது. மரணமே அவரை இப்பெரும் முயற்சியினின்று விலக்கி வைத்ததுபோலும். பிடிபடுவதற்குமுன் பம்பாயில் காந்தி அடிகள் தாம் 125 ஆண்டுகள் பிழைத்திருக்கப் போவதாகச் சொன்னார். அப்பொழுது மஹாதேவ தேசாயினுடைய ஆயுளைக் குறைத்து தன் ஆயுளுடன் கடவுள் சேர்க்கப் போகிறார் என்பதை அவர் உணரவில்லை. கடவுள் திருவுள்ளத்தை உணர்ந்தவர் உண்டோ? மஹாதேவ தேசாய் மரணத்தை ஏற்று மஹாத்மாவை மரண மற்றவராக்கினார். காந்தி அடிகள் இனித் தன் வாழ்நாட்களுடன் கூட

மஹாதேவின் மீதி வாழ்நாட்களையும் தாம் வாழவேண்டு மென நிச்சயித்தார். அரைகுறையாயிருந்த அவருடைய வேலைகளைத் தாம் பூர்த்திசெய்ய வேண்டுமென நிச்சயித்தார்.

எழுபத்துமூன்று வயது நிரம்பிய கிழ காந்தி அடிகள் ஐம்பது வயதுள்ள மஹாதேவ தேசாயின் உடலை தேய்த்து அலம்பினர், துடைத்தார், அலங்கரித்தார், கட்டைமீது வைத்தார். ஆகாகான் மாளிகையைப் புனித க்ஷேத்திரமாக்கஅரசாங்கத்தார் அனுமதி அளித்தார்கள். சுதந்திரப்போரின் ஓர் இணையற்ற வீரன் பலியாகி இவ்விடத்தை ஆயிர மடங்கு புனிதமாக்கினன். காந்தி அடிகள் தம் கையால் சிதையில் தீ வைத்தார். ஐந்து பூதங்கள் மயமான இவ்வுடல் ஐந்து பூதங்களில் மறைந்து விட்டது. அன்னை கஸ்தூரிபாய் கதறியதுமிகவும் பரிதாப மாயிருந்தது. "மஹாதேவா! என் மஹாதேவா! எங்கே போய்விட்டாய்? ஏன் போய் விட்டாய்? நானிருக்கையிலே நீ எப்படிப் போகலாம்? உன் பாபுவை விட்டுப் பிரிய உனக்குத் திடீரென எப்படித் துணிவு ஏற்பட்டது? நீ வேதியன் மகன் அன்று! உன் பலி வீண் போகுமா? மஹாதேவா, என்ன செய்து விட்டாய் நீ! எங்களுக்கு முன்னல் நீ எப்படிப் போகலாம்?" என்று பலவித மாகக் கதறினர். இதைக் கேட்டுக் கல்லும் கரையும். ஆனல் அந்நியநாட்டு அரசாங்கத்தாரின் மனம் கரையவில்லை. கடைசியில் மாளிகை என்ற பெயர் பெற்ற இந்தச் சிறையில் அன்னை கஸ்தூரிபாயும் இறந்தார். தாயும் மகனும் ஒருவரையொருவர் தேற்றிக் கொண்டு முடிவற்ற சமாதியில் ஆழ்ந்திருக்கிறார்கள்

போலும்! இவ்விருவரும் இக்காலத்திய சீதை-ஹனுமார் என்று புகழ்பெற்று விளங்குகிறார்கள்.

காந்தி அடிகள் மஹாதேவ தேசாயின் சாம்பலைத் திரட்டி அதில் கொஞ்சம் தனக்கென ஒரு டப்பியில் அடைத்துத் தன் அருகிலேயே வைத்துக்கொண்டார். சிவனுடைய திருநீற்றைப்போலவும் குலமங்கையின் குங்குமத்தைப் போலவும் அதைத்தினந்தோறும் நெற்றியில் அணிந்துவந்தார். பக்தன் பகவானாகிவிட்டான், பகவான் பக்தனாக மாறினார். மஹாதேவ தேசாயின் புண்ணியத்தின் பலன் இதைக்காட்டிலும் எப்படிச் சிறக்க முடியும்?

காந்தி அடிகள் தம் சொந்த நடத்தையிலேயே இந்தியவாழ்வு முறை எப்படி இருக்க வேண்டும் என்று நடத்திக்காட்டியிருக்கிறார். இராமபிரான், கண்ணபிரான், புத்தர், மகாவீரர் முதலிய அவதார புருஷர்களின் விசேஷ குணங்கள் அனைத்தும் இவரிடத்தில் ஒன்று கூடி விளங்குகின்றன. நாளதுவரை மனிதனுடைய சரித்திரத்திலே எங்கும் காணப்பெறாத சிறந்த குணங்களுடன் ஒரு உத்தம மானிடராக விளங்குகிறார்.

இராமபிரான் ஹனுமாரின் கீர்த்தியை அழிவற்றதாக்கினார். கண்ணபிரான் உத்தவருக்கும் அக்ரூரருக்கும் அழிவற்ற பெருமையை அளித்தார். புத்தர் ஆனந்தருக்கு இறவா வரம் அளித்தார். இதே முறையைத் தழுவி காந்தி அடிகள் மஹாதேவ தேசாயைச் சிரஞ்சீவியாக்கினார். மஹாதேவ தேசாயினுடைய வாழ்க்கைக்கு இதைக் காட்டிலும் சிறந்ததோர் பலன் கிடைக்கக் கூடுமா? இந்தியாவில் என்றும் காணாத மகானாகவும்,

அரசியல் வாதியாகவும் விளங்கும் இணையற்ற உத்தம புருஷனுடைய சீடனாகவும் தோழனாகவும் அமைய மகாதேவ தேசாய் எத்தனை பிறப்புகளில் எத்தனை புண்ணியங்கள் செய்தாரோ! வாழ்க்கையில் கிடைத்த நல்ல தருணங்களைச் சரிவர உபயோகித்தார், தாமும் பயன் பெற்றார், கோடிக்கணக்கான மக்களுக்குப் பயன் பெறும் முறையைக் கற்பித்தார். மனிதனுக்கு இதைக் காட்டிலும் சிறப்புண்டோ?

மஹாதேவ தேசாயினுடைய மரணத்தைக் கேட்டவுடனே என்னை மிகவும் அதிகமாகத் துன்புறுத்தியது ஓர் எண்ணம். அதாவது காந்தி அடிகள் அவ்வப் போது செய்துவரும் சிறந்த செயல்களின் நுட்பங்களை உலகிற்கு இனி யார் எடுத்துரைக்கப் போகிறார்கள்? காந்தி அடிகள் வாழ்க்கையின் காவியத்தை இனி யார் எழுதக்கூடும்? காந்தி அடிகளின் விவரங்களை எழுத்து மூலமாக எடுத்துரைக்க வால்மீகி போலவும் வியாசர் போலவும் விளங்கிய மஹாதேவ தேசாயைப் போல் வேறு யார் விளங்குவார்? மஹாதேவ தேசாயினுடைய மரணத்தால் இத் தேசத்திற்கே ஓர் பெரு நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. இந்த நினைவு வரும்பொழுது இன்றும் என் மனம் கலங்குகிறது. தேசத்தின் துரதிருஷ்டத்திற்காகக் கண்ணீர் விடவேண்டி யிருக்கிறது.

மஹாதேவ தேசாய், காந்தி அடிகளின் சொல்லமுதை உலகத்திலுள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு வழங்கிவந்தார். அவர் சிறந்த எழுத்தாளர், கவி, மொழி பெயர்ப்பாளர், சிந்தனைசீலர், தத்துவ சாஸ்திரி. அவர் புகழ் என்ற உடலை அணிந்து நம் நடுவே வீற்

றிருக்கிறார். உண்மை உடல் இல்லையே என்று நினைக்க மனம் வருந்துகிறது அவர் மாண்டு நான்கு வருஷங்களாகியும் அவருக்குச் சமானமாக வேறொருவர் காணப்படவில்லை. ஆனால் உலகில் யாருக்குச் சமானம் யார் ஆகமுடியும்? ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு சிறப்பு காணப்படுகிறது. ஒருவரில்லை யென்றால் அக்குறை தீராக் குறையே. மஹாதேவ தேசாயின் சிறப்போ தனி. அவருக்குச் சமமாவது சுலபமல்ல.

தன்னையே பூராவும் சமர்ப்பித்து விடுவது, பலம், புத்தி, கல்வி, தைரியம், வீரம், பொறுமை, அடக்கம், நட்பு, தொண்டு புரிதல், ஒரே சிந்தனை, சிரத்தை, பக்தி, தவம், பற்றில்லாமை என்ற குணங்களெல்லாம் ஒன்று கூடி உருவெடுத்தனவோ என்று கூறும்படி விளங்கிய மஹாதேவ தேசாய் வாலிபர்களுக்கு ஓர் உதாரணமாக விளங்குகிறார். அவரைப் பெற்ற தாய்நாடு பயனடைந்தது. அவரை இழந்து இன்று பரிதவிக்கிறது!

இப்படிப்பட்ட மகனைப் பெறக்கூடிய ஓர் தாயைக் குறித்து நாம் கவலை கொள்வது வீண். அடிமை நாடே இவ்வளவு சிறப்புப் பெற்றதென்றால் சுதந்திர நாட்டைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? சுதந்திர இந்தியாவில் இப்படிப்பட்ட மகான்கள் ஒவ்வொரு வீட்டிலும் உதிக்கக்கூடும். அவ்வாறு நேர்ந்தால் காந்தி அடிகள் கனவுகாணும் கிராம ராஜ்யம் நிலைபெறும். அப்பொழுது கோடிக்கணக்கான நம் நாட்டு மக்கள் தேவர்களைப் போல் புனிதமான சாத்வீக வாழ்க்கை நடத்துவார்கள்.

இது விரைவிலேயே நடக்குமாக! இதைக்கண்டு மேலுலகத்தில் வீற்றிருக்கும் மஹாதேவ தேசாயின் ஆன்மா மகிழ்ச்சியடைவதாக!

# தத்துவ ஞானி, தேசாய்

## (ப்ரபாகர் மாச்வே)

**1940**-ம் ஆண்டில் நான் காந்தி அடிகளின் கட்டளைப்படி சேவாகிராமம் ஆச்ரமத்தில் இரண்டு மூன்று மாதங்கள் தங்கினேன். அப்பொழுதுதான் நான் மஹாதேவ தேசாயை நன்கு அறிந்தேன். நான் தத்துவசாஸ்திர மாணவன் என்று அறிந்த மஹாதேவ தேசாய் தாம் ஆங்கிலத்தில் எழுதிய 'அனாஸக்தி யோக'த்தின் உரையின் முன்னுரையை என்னிடம் படிக்கக் கொடுத்தார். அது பகவத் கீதையைக் குறித்த ஆங்கில நூல். சுமார் 175 அல்லது சற்று அதிகப்பக்கங்கள் கொண்டது. இந்த முன்னுரையைப் படித்ததில் மஹாதேவ தேசாயின் தத்துவ சாஸ்திர அறிவு நன்கு புலப்பட்டது. கீதை இயற்றப்பட்ட காலத்தைக் குறித்தும், கீதையில் அடங்கியுள்ள நம் நாட்டின் பல தத்துவ சாஸ்திரங்களின் நுட்பங்களையும் தேசாய் மிகவும் திறமையுடன் எழுதியிருந்தார். அவர் கையில் பேனா, பார்த்திபன் கையில் காண்டீவத்தைப் போன்றது எனலாம். அவருடைய புத்தி மிகவும் கூரியது. தற்காலத்திய கண்ணன் இப்பார்த்திபன் "உடல் சோர்வடைகிறது, புத்தி மயங்குகிறது" என்ற பல சமயங்களில் ஊக்கமளித்திருக்கிறார். அதன் பயனாகவே மஹாதேவ தேசாய் "ஸ்தித பிரக்ஞ"னின் யோகத்தில் திறமை பெற்றார். அந்த முன்னுரையைப் படித்த நான் சில சிறு சொற்களை மட்டும்

ஆங்கிலத்தில் எப்படி எழுதலாம் என்று எடுத்துரைத்தேன். அதாவது 'புத்தி' 'யோகம்' 'மனம்' முதலிய பதங்களை இராதாகிருஷ்ணன், ரானடே முதலியவர்கள் ஆங்கிலத்தில் எவ்வாறு கூறியிருக்கிறார்கள் என்பதைக் காட்டி என் அபிப்பிராயத்தை விளக்கினேன். நான் சிறுவனாயிருந்தபோதிலும் என் சொல்லை அவர் ஏற்றார். அவர் சிறு விஷயங்களிலும் தவறு செய்யமாட்டார். இந்தத் தத்துவ சாஸ்திர ஆராய்ச்சியின் பயனாகவும் மோக்ஷ சாஸ்திரத்தின் பயனாகவும்தான் மஹாதேவ தேசாய்க்கு வங்கக் கவிதையிலும் முக்கியமாக ரவிந்திரரிடத்திலும் அன்பு ஏற்பட்டது. லின்லித்கோவைச் சந்தித்து விட்டு காந்தி அடிகள் சிம்லாவிலிருந்து வந்து கொண்டிருந்தார்கள். வழியில் திடீரென நின்று மஹாதேவிடம் "லுகாயே ஜாய்" என்பதன் பொருள் என்ன, மஹாதேவ்...?" என்று கேட்டார். இந்தச் சொற்றொடர் ரவீந்திரநாதருடைய பிரஸித்தமான 'ஜீவன் ஜகன' என்ற கவிதையில் வருவது. ஆச்ரமத்தில் இப் பாட்டைப்பாடுவதையும் மஹாதேவ தேசாய் கண்களை மூடிக்கொண்டே நிஷ்டையில் ஆழ்ந்து விடுவதையும் கண்டிருக்கிறேன். கீதத்தைக்கேட்டபடியே ஸ்வரம் பாடத் தொடங்கிய உடனே நிலத்திலுள்ள மணலையே எடுத்து துளித் துளியாக தாளத்திற்காகப் போடுவார். அந்நிய நாட்டிலிருந்து புதிதாக வந்திருப்பவர்களைத் தன் அருகாமையில் அமர்த்தி அவர்களுக்குப் பிரார்த்தனையின் நுட்பங்களை எடுத்துரைப்பார்.

இந்தத் தத்துவ சாஸ்திரப்பயிற்சியின் பயனாகவே மஹாதேவ தேசாயிடத்தில் ஹாஸ்யமும் குடிகொண்டிருந்தது. நான் ஆச்ரமத்தில் இருந்தபொழுது (மே,

ஜூன் மாதங்களுக் கிடையே) அங்கு லீலாவதி என்ற ஒரு பெண் இருந்துவந்தாள். அவள் 'மெட்ரிக்' பரீக்ஷையில் எழுதி பரீக்ஷை முடிவு வெளியாகுமென அச்சமயம் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். அந்நாட் களில் கனு காந்திக்கு 'டெலிபோன்' பாதுகாப்பு வேலை. ஆகையால் வெளியிலிருந்து வரக்கூடிய செய்திகளெல் லாம் முதலில் அவரிடம் தான் வரும். மஹாதேவ தேசாய் கனு காந்தியை சரிப்படுத்திக் கொண்டு லீலா வதியிடம் சென்று அவள் பரீக்ஷையில் தேரவில்லை என்று சொல்லி அவளை அழவைத்தார். இது விளை யாட்டுக்காகத்தான். இரண்டு மூன்று மணி நேரங் களில் பத்திரிகைகள் வந்தன. அதில் அவள் தேர்ச்சி பெற்றுள் என்று கண்டிருந்தது. இந்த விளையாட்டு காந்தி அடிகளுக்கு எட்டியபொழுது அவர் நன்ருகச் சிரித்தார். இப்படிப்பட்ட வேடிக்கை நிகழ்ச்சிகள் பல. இதனுல்தான் அவர் எப்பொழுதும் மலர்ந்த முகமா யிருந்தார். ஒரு நாள் சாயங்காலம் காற்றுவாங்க எல் லோரும் சென்றுகொண்டிருந்தோம். அப்பொழுது ஸ்ரீ பனசாலி சாப்பாட்டு விஷயமாகச் செய்துவந்த ஆராய்ச்சிகளைக் குறித்துச் சொல்லி மஹாதேவ தேசாய் காந்தி அடிகளிடத்தில் "இப்பொழுதெல்லாம் 'பனசாலி' தனிப் பால் மட்டும் இருபது சேர் குடித்து வருகிருரே தெரியுமோ?" என்ருர். அப்பொழுது ஆச்ரமத்தில் வசித்து வந்த ஒரு மங்கையை நினைத்து காந்தி அடிகள் வேடிக்கையாகச் சொன்னுர்: "அவன் பரம்பரை ஆண்டி; அவள் குடிக்கட்டுமே! தேனீர் குடிப்பதைக் காட்டிலும் பால் குடிப்பது நல்லதுதானே!" என்ருர். இதைக் கேட்ட மஹாதேவ தேசாய் இதை இன்னும் நன்கு

விளக்கி "இல்லை பாபூ, அம்மணி ஒரே ஒரு கோப்பை தேத்தண்ணீர்தான் அருந்துகிறாள்" என்றார். காந்தி அடிகள் சிரித்துக்கொண்டே சொன்னார், "கோப்பையில் சிறிது பெரிது என்றில்லையா? ஆப்பிரிக்காவில் ஒரு இஞ்ஜின் டிரைவர் இருந்தான். அவன் வாளிபோன்ற பெருங் கோப்பையில் இஞ்ஜினிலிருந்து வெந்நீர் எடுப்பான். அதில் தேயிலையைக் கலந்து பால் கலவாமலே குடித்து விடுவான்" என்றார். இதைக் கேட்ட மஹாதேவ தேசாய் சிரித்தார். யாரைக் குறித்துப் பேச்சு நடந்ததோ அவரும் விநோதத்தில் கலந்துகொண்டார். இவ்வித மாக மஹாதேவ தேசாய் விளையாட்டாக மற்றவர்களுடைய குறைகளை எடுத்துரைப்பார். ஆனால் ஒருவனுடைய மனமும் நோவாது.

"ஹஸீதே யதீப்" என்ற மாது 'இந்தியாவின் உட்புறம்' (Inside India) என்ற ஒரு நூல் இயற்றி இருக்கிறார். அதில் 'ரகுவர தும்கோ மேரீ லாஜ்' (இராமா என் மானம் உன் கையில்) என்ற தலைப்புக்கொண்ட நான்காம் அத்தியாயத்தில் மஹாதேவ தேசாயைப்பற்றி எழுதியிருக்கிறார். அவர் காந்தி அடிகளிடம் பேசிக் கொண்டிருக்கும்பொழுது மஹாதேவ தேசாய் குறிப்புக்கள் எழுதிக்கொண்டிருப்பார். அவர் கூறுகிறார், "அவர் எப்பொழுதும் எழுதிக்கொண்டேயிருப்பார். நான் காந்தி அடிகளிடம் என்ன பேசினேன் என்பதை பிறகு கூறுகிறேன் அவருடைய காரியதரிசியாகிய தேசாய் எல்லோருடைய கவனத்தையும் கவருகிறார். அவர் மிகவும் அடக்கங் கொண்டவர். தன்னை மிகவும் துச்சமென்று கருதுகிறவர். காந்தி அடிகளுடைய கிளர்ச்சிகளைத் தவிர மஹாதேவ தேசாய் வேறு விஷயங்

களை அறியார். இவர் உயரமானவர், மெலிந்த மேனி யுடையவர், முப்பது முப்பத்தைந்து வயதுடை யவர். அவர் முகம் அழகு பொருந்தியது, உதடு மெலிந்தது, கண்களில் ஓர்வகை ஒளிவீசும். இந்த ஆழ்ந்த ரஹஸ்யமயமான ஒளியைப் பெற்றும் அவர் அமைதியுடன் தன் வேலையைக் கவனித்துவருவார். அமைதி இல்லாவிடில் இவ்வளவு அதிக வேலை அவரால் செய்யவே முடியாது. அவர் சுறுசுறுப்பானவர், ஆவேசம் கொண்டவர், மனதை அடக்கக்கூடியவர். காந்திஜியிடத் தில் அவருக்கு இருக்கும் பக்தி தெய்வபக்தியை ஒத்தது. அவர் பதினாறு வருஷகாலமாக அவருடனேயே வாழ்ந்து அவரிடத்திலேயே ஆழ்ந்திருக்கிறார். பால்யமுதல் வறுமையிலே வளர்ந்த இந்த வாலிபர் இப்பொழுது துறவியின் உயர்ந்த நிலையை அடைந்திருக்கிறார். இவர் ‘ஹரிஜன்’ பத்திரிகையின் ஆசிரியர். இத்துடன் காந்தி அடிகளின் காரியதரிசியாகவும் வேலைசெய்து வருகிறார். அவர் இடத்தைச் சுத்தம்செய்கிறார். பாத்தி ரங்களையும் சுத்தம் செய்கிறார். ஐரோப்பா, கீழ்நாடுகள், அமெரிக்கா ஆகிய எல்லா இடங்களினின்றும் காந்தி அடிகளைக் குறித்த கேள்விகள் வந்து குவியும். அவைக ளுக்கெல்லாம் கலக்கமடையாமல் விடை கூறுவது சாதாரணமாக இயன்றதல்ல. இதற்குத் தன்னைக் கட்டுப் பாட்டில் வைத்துக்கொள்வது மிகவும் அவசியமாகும்”

இதற்குப் பிறகு ‘யதீப்’ என்ற மாது இதே புத்த கத்தில் மஹாதேவ தேசாய் காந்தி அடிகளுக்குத் தலை யணைகளையும் திண்டுகளையும் எப்படி அடுக்கிவைப்பார், அன்னிய நாட்டு யாத்ரிகளுக்கு ஆச்ரமத்தி லிருப் பவர்களை எப்படி அறிமுகப்படுத்துகிறார் என்பதை

எல்லாம் விளக்கியிருக்கிறார். 'அப்துல்கபார்கனை'க் குறித்து மஹாதேவ தேசாய் எழுதிய நூலிலிருந்து சிலபகுதிகளையும் எடுத்து விளக்கியிருக்கிறார்.

அன்னிய நாட்டு யாத்திரிகளுக்குப் பிரார்த்தனையின் அர்த்தத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொல்வது மஹாதேவ தேசாயின் ஒரு முக்கியமான வேலையாகும். லூயி பிஷர் ஆச்ரமத்திலிருந்த பொழுது ஒரு நாள் பிரார்த்தனை நேரத்தில் 'பச்சு' என்ற ஒரு சிறுவன் காந்தி அடிகளின் தடியைக் கையிலேந்தி இங்குமங்கும் அலைந்து கொண்டிருந்தான். இதுவும் பிரார்த்தனையின் ஓர் அங்கமென்று நினைத்தார் பிஷர். அவர் மஹாதேவ தேசாயிடம் சென்று இதன் கருத்து என்ன என்று கேட்டதற்கு அவர் இது வெறும் விளையாட்டு என்றார். இருவரும் சிரித்தார்கள்.

சேவா கிராமத்திற்கு வரும் பல அன்னிய நாட்டுப் பத்திரிகை நிருபர்கள் மஹாதேவ தேசாயின் சாதாரண நடை உடைகளைக் கண்டு ஆச்சரியமடைவார்கள். காந்தி அடிகளுடைய காரியதரிசி என்றால் ஆடம்பரமாயிருப்பார் என்று அவர்கள் நினைப்பார்கள். ஒருமுறை நான் ஒரு நிருபரிடம் இவர்தான் மஹாதேவ தேசாய் என்று கூறியபொழுது அவர் நம்பவில்லை. இவர்தானா அவர் என்று மறுபடியும் கேட்டார்.

மஹாதேவ தேசாய் யோசனையிலாழ்ந்திருக்கும் பொழுது மிகவும் கம்பீரமாயிருப்பார். அவருடைய தனித் தன்மையும் நிஷ்டையும் நன்கு விளங்கும்.

மஹாதேவ தேசாயினுடைய வீட்டில் அன்னிய நாட்டில் வெளியாகும் புதுப் புதுப் புத்தகங்களும், பத்தி

ரிகைகளும் பிரிட்டிஷ் பேரகராதி (Encyclopædia Brittanica) யும் இருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். மஹாதேவ தேசாய் 'ஹரிஜனி'ல் வெளியாகவேண்டிய கட்டுரையை காந்தி அடிகளுக்குப் படித்துக்காட்டுவதைப் பலதடவை பார்த்திருக்கிறேன். மத்தியான வெயில் நேரத்தில் காந்தி அடிகள் கேட்டுக்கொண்டே கண் அயர்ந்து விடுவார். மஹாதேவ தேசாய் படிப்பதை நிறுத்திவிட்டு விசிறியைமட்டும் வீசிக்கொண்டிருப்பார். காந்தி அடிகளுக்குப் பணி செய்வதில் மஹாதேவ தேசாய் மெய்ம்மறந்து லயித்திருந்தார்.

ஓர் முறை மஹாதேவ தேசாய் 'குவாலியர்' அரசாங்கத்திலுள்ள சர்வஜன சபையின் தலைமை வகிக்க 'முரார்' என்ற ஊருக்குச் சென்றார். சமஸ்தானங்களுக்குப் போவது அவருக்கு விருப்பமில்லை. காந்தி அடிகளின் கட்டளையாகையாலே போகவேண்டியிருந்தது. போக நிச்சயித்த உடனே அவர் என்னிடமும் வேறு பலரிடமும் குவாலியர் சமஸ்தானத்தின் எல்லா விவரங்களையும் அறிந்துகொண்டார். இவ்விதமாக அவர் ஓர் வேலையை ஏற்றுக்கொண்டால் அதில் முழு மனதையும் செலுத்துவார். நுட்பமான விஷயங்களையும் ஆராய்ச்சி செய்து அறியும் இந்தப் பழக்கம் வாலிபர்களிடத்திலே இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

அவருடைய உடல் ஆகாகான் மாளிகையை விட்டு வெளியேறவில்லை. ஆனால் அவர் ஆன்மாவின் மணம் இன்றும் வீசிக்கொண்டிருக்கிறது. முன்னொரு முறை காந்தி அடிகள் நோய்வாய்ப்பட்டு 'ஜுஹு'வில் இருந்தபொழுது அவருடைய கண்களில் ஓர்

ஒளி மங்கியிருந்தது. சேவாகிராமத்தில் மஹாதேவ தேசாய் வாழ்ந்து வந்த குடிசை இப்பொழுது அவரில்லாமல் வெறிச்சென்றிருப்பதைக் காணும் பொழுதெல்லாம் எனக்கு காந்தி அடிகளின் அந்தக் கண்களின் நினைவு வருகின்றது. மஹாதேவ தேசாயை இழந்த காந்தி அடிகள், 'ஹரிஜன்', சேவாகிராமம் ஆகிய எல்லோருடைய குறையும் ஒருநாளும் தீராத குறையாகி விட்டது!

---

# காந்தியடிகளின் பழைய தோழர்

## (சீதாராம் சேக்சரியா)

**கா**ந்தியடிகள் இந்தியாவுக்கு வந்த பிறகு அவருடன் மற்ற அனைவரைக் காட்டிலும் அதிகமாகப் பழகி அவருடனேயே இருந்து வந்தவர் மஹாதேவ தேசாய் தான் என்று நினைக்கிறேன். இதைப் பற்றிய விநோத நிகழ்ச்சியொன்று நினைவுக்கு வருகிறது. அது 1937-ம் ஆண்டில் நிகழ்ந்தது. காந்தியடிகள் உடல் நலமில்லா திருந்தார். அதாவது ரத்தக் கொதிப்பு அதிகமாய் இருந்துவந்தது. சேவாகிராமத்துக் குளிர் அவரால் தாங்கமுடியவில்லை; எனவே டாக்டர் ஜீவராஜ் மேத்தா அவரை எப்படியோ நிர்ப்பந்தப்படுத்தி பம்பாய்க்கருகே இருக்கும் ஜுஹுவுக்கு அழைத்துச் சென்றார். காந்தியடிகள் அங்குச் சென்று திரு. ராமேசுவர பிர்லாவின் மாளிகையில் தங்கினர். அதற்கு அடுத்தது ஜம்னுலால் பஜாஜினுடைய பங்களா. அதில் நாங்கள் எல்லோரும் தங்கியிருந்தோம்.

ஒரு நாள் 'பெரின் கேப்டன்' (தாதா பாயி நௌரோஜி யின் பேர்த்தி) காந்தியடிகளிடம் வந்து "ஒரு வேடிக்கை காட்ட விரும்புகிறேன். உத்தரவா?" என்றார். காந்தி யடிகள் "ஆகா! காட்டேன்" என்றார். பெரின் பஹின், "'போலா நாத்' என்ற ஒருமாடு வந்திருக்கிறது. அது தங்களைக்காண விரும்புகிறது" என்றாள். காந்தியடிகள் "வரட்டுமே!" என்றார்.

அவர் இருக்குமிடங்களிலெல்லாம் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடுவது வழக்கம். அச்சமயத்திலும் இக்கூட்டம் கூடிற்று. மாட்டை எப்பொழுது கூட்டிக்கொண்டு வரலாம் என்று பெரின் பஹின் கேட்டதற்குக் காந்தியடிகள், காரிய கமிட்டிக்கூட்டம் முடிந்தவுடன் நாலு மணிக்கு என்றார். பெரின் பஹன் "அப்படியானல் அது எல்லோரையும் காணக்கூடும்'' என்றார்.

போலா நாத் வரப்போகிற செய்தி எங்கள் ஜாகைக்கும் எட்டியது. அதற்கு காந்தியடிகள் பேட்டியளிக்கும் நேரம் 4 மணி என்று ஏற்பாடு! ஆனல் அது இரண்டு மணிக்கே வந்துவிட்டது. நானும் அதைப் பார்க்கச் சென்றேன். மிகவும் அழகியது. குள்ளம், வெள்ளை நிறம், சிறிய கொம்புகள், ஒளிவீசும் கண்கள். சோழி மாலை யணிந்திருந்தது; சிறு மணிகளும் தொங்கிக்கொண்டிருந்தன. வெகு சிறப்புடன் லாரியில் ஏறி வந்தது.

காந்தியடிகளுடன் காரியக்கமிட்டி அங்கத்தினர்கள் அனைவரும் வந்திருந்தார்கள். முதன் முதலாக சரத் பாபு போலா நாதை ஒரு கேள்வி கேட்டார்; "போலா நாத்! காங்கிரசின் தலைவர் யார்?'' என்றார். போலா நாத் பண்டித ஜவாஹர்லாலிடம் சென்று அவரைத் தன் கொம்பால் தொட்டது. எல்லோரும் சிரித்தார்கள். பலரும் பல கேள்விகள் கேட்டார்கள். அவைகளுக்கெல்லாம் அது சரியான விடை அளித்து வந்தது. ஆனல் அதை எல்லாம் இங்கு எழுதிக் கால ஹரணம் செய்வது சரியல்ல. காந்தியடிகள் கேட்டார்: "இங்கு இருப்பவர்களில் என்னுடைய மிகப் பழைய தோழர் யார்? சொல் பார்ப்போம்''

போலாநாத் மௌலானு அவர்களிடம் சென்றது. காந்தி யடிகள் "போலாநாத்! இந்தத் தடவை நீ தவறிவிட் டாய். என் பழைய தோழன் மகாதேவ தேசாயாகும்" என்ருர்.

உண்மையில் காந்தி அடிகளுக்கு மிகவும் பழைய தோழர் மஹாதேவ தேசாய்தான். காந்தி அடிகளிடத் தில் எவ்வளவோ ஜனங்கள் வந்திருக்கிருர்கள். ஆனல் அவர்களில் தேசாய் அவர்களுடைய ஸ்தானமே தனி. காந்தி அடிகள் தன் எந்த வேலேயையும் மஹாதேவ தேசாயை செய்யச் சொல்லத் தயங்கமாட்டார். மஹாத்மா இட்டவேலேயைச் செய்வது எளிதல்ல. அவர்களுடைய மனப்பான்மை,. எண்ணம், வேலேமுறை ஆகியவைகளே நன்கு அறிந்தாலொழிய ஒருவராலும் காந்தி அடிகளேத் திருப்தி செய்ய முடியாது. மஹாதேவ தேசாய் பல வரு ஷங்கள் அவருடனேயே பழகியதால் இத்துறையில் தேர்ச்சிபெற்று இணேயற்றவராய் விளங்கினுர். இப்படி யிருந்தும் பன்முறை அவரும் காந்தி அடிகளின் கடும் சொற்களேக்கேட்க நேர்ந்தது. காந்தி அடிகளின் எழுத்து, பேச்சு, படிப்பு முதலிய ஒவ்வொரு விஷயத்திலும் கட்டுப் பாடு காணப்படும். அவருடைய காரியதரிசியும் அதே விதமாக இருக்கவேண்டும். அவர் காந்தி அடிகளுடைய எழுத்து-படிப்பு வேலேயை மட்டும் கவனித்தால் போதாது. உண்மையில் காந்தி அடிகளிடத்தில் எழுத் து-படிப்பு வேலேயும் அவ்வளவு முக்கியமானதல்ல. தன்னுடையவும் தன் தோழர்களுடையவுமான முன் னேற்றமே அவருக்கு முக்கியமான வேலே. அவருக்குக் காரியதரிசியாக அமைந்து மூட்டை தூக்கும் வேலே முதல் பெரும் ஆலோசனே கூறும் வேலேகள் வரை

செய்துவந்தார். காந்தி அடிகள் தாம் எழுதியதில் ஒரு முற்றுப் புள்ளியும் அரைப்புள்ளியும் தவறக்கூடாது என்ற உறுதி கொண்டவர். அவர் தம்முடைய முக்கியமான எழுத்து வேலைகளையெல்லாம் மஹாதேவ தேசாய்க்கே கொடுத்துவந்தார்.

மஹாதேவ தேசாயின் எழுத்து நடையையும் மொழியையும் கண்டு பலசமயங்களில் பலருக்கு இதை எழுதியவர் காந்தி அடிகளோ என்ற சந்தேகம் உண்டாகும். காந்தி அடிகள் உபந்நியாசம் செய்வதை மஹாதேவ தேசாய் உடனுக்குடனே குறித்துக்கொள்வார். அக்குறிப்புகளைப் படிக்கும்பொழுது காந்தி அடிகளே பேசிக்கொண்டிருப்பதுபோல் தோன்றும். மஹாதேவ தேசாயை ஒருமுறை அறிந்தவர் அவரைப் பிறகு எப்படி மறக்க முடியும்? 'நவஜீவன்', 'யங் இந்தியா' ஆகிய பத்திரிகைகளைப் படித்துவந்த ஆயிரக்கணக்கான நேயர்களுக்கு இப்பொழுது அவர் இல்லாத குறை பெருங்குறையாகக் காணப்படும். என் குறையை நான் சொல்லி முடியாது. 1942ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 8ம் தேதியன்று இரவு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றினர். அவருடைய சொற்பொழிவு அபார மகிமைகொண்ட பொறுப்புகள்நிறைந்தது. மக்களை எழுப்பக்கூடியது. இதைச் சரிவர வெளியிடுவதும் மிகவும் முக்கியமான கடமையாகும். மஹாதேவ தேசாயைக் காட்டிலும் சிறப்பாக இப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளக் கூடியவர் வேறொருவர் உண்டோ?—என்று நினைத்தேன். மஹாதேவ தேசாய் உட்கார்ந்து குறிப்புகள் எழுதிக்கொண்டிருந்தார். அவர் இருந்த இடம் காந்தி அடிகளுக்குப் பின்புறமாக இருந்ததால் அவருக்குச் சற்று அசௌகரியமாயி

ருந்தது. ஆகையால் அவர் மேடையிலிருந்து இறங்கி காந்தி அடிகளுக்கு எதிராக என் அருகாமையில் மேஜையின் மீது உட்கார்ந்து எழுதத் தொடங்கினர். நான் மஹாத்மாவின் உபந்யாசத்தை வெகு கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்தேன். 'ஹரிஜனி'ல் மஹாதேவ தேசாய் எழுதிய குறிப்புகள் வெளியாகு மென்று நினைத்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது காந்தி அடிகளின் உத்தேசங்களைக் குறித்து நன்கு ஆலோசித்துக்கொள்ளலாமென்றிருந்தேன். ஆனல் நேர்ந்தது மற்ருென்று. மறுநாள் முடிவதற்குள்ளேயே அவர்கள் அனைவரும் கைதுசெய்யப்பட்டார்கள்.

ஆகஸ்டு மாதம் 16ம்தேதி கல்கத்தா ப்ரசிடென்சி ஜெயிலில் மஹாதேவ தேசாய் இவ்வுலகைத் துறந்து விண்ணுலகை அடைந்த செய்தி கேட்டேன். அதை நான் நம்ப முடியவில்லை. ஆனல் நம்பித்தான் ஆகவேண்டியிருந்தது! மஹாதேவ தேசாயைப் பற்றிய ஏதாவது ஒரு பேச்சு நடந்தால் அநேக நிகழ்ச்சிகள் நினைவுவருகின்றன. நான் குறைந்தது 15 வருஷகாலம் அவருடன் பழகினேன். அவருடைய உயர்ந்தமேனி, அகன்ற நெற்றி, சிவப்பு நிறம், தலை சிறந்த அறிவு, அன்புநிறைந்த தன்மை ஆகியவைகளை யார் தான் மறக்கமுடியும்?

# தேசாயின் சில நினைவுகள்

(வியோகி ஹரி)

**நா**ன் மஹாதேவ தேசாயுடன் நெருங்கிப் பழகியவனல்ல. ஆனால் சென்ற பத்து வருஷகாலமாக அவ்வப்பொழுது அவரைக் காணவும் அவருடைய நல்லுறவைப் பெறவும் நேர்ந்ததை என் வாழ்க்கைப் புத்தகத்தின் சிறப்பான பகுதியென்று கருதுகிறேன். அப்புத்தகத்திலிருந்து சில இனிய நினைவுகளை இங்கு எடுத்துரைக்கிறேன்.

1940-ம் வருஷம் குளிர்காலத்தில் அரசியல் விஷயமாக மஹாதேவ தேசாய் பம்பாயிலிருந்து டில்லி வந்தார். பிர்லா மாளிகையில் தங்கினார். ஆனால் எங்கள் ஹரிஜன நிவாசத்தை அவர் மறப்பாரோ? இதை அவர் ஒரு புண்ணிய க்ஷேத்திரமென்று சொல்வார். வந்தவுடனே அவர் தக்கர் பாபாவுக்கு ஒரு முக்கியமான செய்தியை அறிவித்தார். பிறகு தொழிற்சாலையைக் குறித்து அன்புடன் விசாரித்தார். இப்படிப் பேசிக்கொண்டிருக்கையிலேயே அவருடைய பார்வை பிரார்த்தனை மண்டபத்தின்மீது சென்றது. அந்தப் பிரார்த்தனை மண்டபம் அப்பொழுதுதான் கட்டி முடிவுபெற்றது. "ஓஹோ! இது முடிந்துவிட்டதா? இதன் அஸ்திவாரக் கல்லைத் தானே மஹாத்மா நாட்டியது? எனக்கு நிற்க நேரமில்லை. ஆனாலும் பிரார்த்தனை மண்டபத்தை நான் எப்படிப்

பார்க்காமலிருக்கமுடியும்?" என்ருர். நான் அவரைக் கூட்டிக்கொண்டு சென்றேன். மண்டபத்தைப் பார்த்து அவர் மகிழ்ந்தார். படங்களைப் பார்த்துக்கொண்டு வருகையிலே சைதன்ய மஹாப்ரபுவின் படத்தைப் பார்த்து நின்ருர். அவர் கண்களிலிருந்து அன்புக் கண்ணீர் வடிந்தது. அப்படத்தில் அன்பின் அவதார மாகிய சைதன்ய தேவர் ஒரு ஹரிபக்தனை மார்புடன் அணைத்து ஆலிங்கனம் செய்துகொள்வதாகக் காட்டப் பட்டிருந்தது. பக்தன் குஷ்டரோகி. அவன் கோரு கிருன்: "பிரபுவே! என்னை ஏன் தொடுகிறீர்கள்?" இதற்கு மஹாப்ரபு சைதன்யர், "உன்னைப் போன்ற ஒருவனைத் தொட்டு நான் என்னையே புனிதமாக்கிக் கொள்கிறேன்" என்று விடையளிக்கிருர். இந்த அருமைப் படத்தைப் பார்த்த மஹாதேவ தேசாய்க்கு சேவாகிராமத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி நினைவு வந்தது. அக்காலத்தில் ஆச்ரமத்தில் கொடிய குஷ்டரோகத் தால் பீடிக்கப்பட்ட ஸ்ரீ பரசுரே சாஸ்திரிக்குக் காந்தி அடிகள் தம் கையால் பணி செய்துவந்தார். மஹா தேவ தேசாய் கண்ணீர் வடித்த வண்ணமாயிருந்தார். அவரால் அடக்கவே முடியவில்லை. இரண்டு மூன்று முறை கைகளைக் கூப்பி, சைதன்ய மஹாப்ரபுவுக்கு நமஸ் காரம் செய்துவிட்டு "இப்படிப்பட்ட சிறந்த நிகழ்ச்சி களை நான் சேவாகிராமத்தில் என் கண்முன் நடக்கக் காண என்ன தவம் செய்தேனே தெரியவில்லை!" என்ருர். மஹாதேவ தேசாயினுடைய படிகம் போன்ற தூய உள்ளத்தில் விளங்கும் பக்தி வெள்ளத்தை அன்று தான் நான் முதன் முதலாக அருகிலிருந்து கண்டேன்.

**1941** மார்ச்சு மாதத்தில் ஹரிஜன ஸேவா சங்கத்தின் வருஷாந்தரக் கூட்டம் நடந்துகொண்டிருந்தது. ஸ்ரீ தக்கர் பாபாவின் வேண்டுகோளுக்கிணங்கி காந்தியடிகள் தன் சார்பில் மஹாதேவ தேசாயை அக்கூட்டத்தில் கலந்துக்கொள்ள அனுப்பினுர். சங்கத்தின் புதிய காரியக் கமிட்டி அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. நான் சங்கத் தலைவரிடம், "இவ்வாண்டு நாம் மஹாதேவ தேசாயையும் ஒரு அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்தல் நலம்" என்றேன். காந்தியடிகள் நம் சங்கத்துடன் தடையற்ற தொடர்பு வைத்துக் கொள்வதற்கு மஹாதேவ தேசாயை அவ்வாறு தேர்ந்தெடுத்தல் அவசியம் என்றேன். நாங்கள் இந்த அபிப்பிராயத்தை தக்கர் பாபாவுக்கு அறிவித்தோம், அவர் "இரக்கங் கொள்ளுங்கள். ஐயோ பாவம்! மஹாதேவ தேசாயை இப்படிப் பாடாய்ப் படுத்தாதீர்கள். அவர் மீது காந்தியடிகள் சுமத்தி இருக்கும் வேலையின் சுமையே மிக அதிகம். நாம் அதற்குமேல் சுமத்த முயற்சி செய்வது தகாது. நான் அப்படிச் செய்ய மாட்டேன்" என்ருர். எப்படியோ சொல்லி நான் தக்கர் பாபாவைச் சரிப்படுத்திக்கொண்டேன். மஹாதேவ தேசாயிடம் சென்று இந்த அபிப்பிராயத்தை அறிவித்தேன். என் தோள்மீது கையை வைத்து அவர் சொன்னுர்: "அப்படியா! எனக்குத் தூதன் வேலை கொடுக்கப் போகிறீர்களா? சங்கத்துடன் காந்தியடிகள் ஆரம்பத்திலிருந்தே இணைபிரியாத தொடர்பு வைத்துக்கொண்டுதான் இருக்கிருர்கள்; பாபா வடிவத்தில் காந்தியடிகளே இங்கு வீற்றிருக்கிருர். ஏதோ என்னைச் சிறப்பிக்க வேண்டுமென நீங்கள் விரும்புகிறீர்கள் போலும்! உங்கள்

போன்ற நண்பர்களின் கட்டளையை மீறி நான் ஏன் வீண் பழிக்கு ஆளாக வேண்டும்? சரி, உங்கள் இஷ்டம் போல் செய்யுங்கள்" என்றார். விஷயம் முடிந்துவிட்டது. தக்கர் பாபா எங்களை மிகவும் பாராட்டினார்.

அதே வருஷம் அக்டோபர் மாதத்தில் ஹரிஜன் தொழிற்சாலையின் பட்டமளிப்புக் கொண்டாட்டத்திற்கு நாங்கள் மஹாதேவ தேசாயை அழைத்திருந்தோம். பட்டம் பெற்ற மாணவர்களுக்கு அவர் கூறிய அன்பு மொழிகள் இன்றும் என் காதில் கேட்டுக்கொண்டிருக்கின்றன. ரய்தாஸ், சோகாமேளர் முதலிய ஹரிஜன பக்தர்களை அவர் புகழ்ந்து பேசியபோது நான் அவருடைய மனத்தூய்மையை மற்றொரு முறை நன்கு காண முடிந்தது. அவர் பகவானின் உயர்ந்த பக்தர் என்று கண்டேன். அவருடைய அந்தப் பக்திதான் அவரைக் காந்தியிடம் இழுத்துச் சென்றது. அதனாலேதான் அவர் அரசியலில் ஈடுபட்டிருந்த போதிலும், பண்டைக் காலத்து பக்தர்களின் விசேஷ குணங்கள் அவரிடம் குடிகொண்டிருந்தன. ஒரு மாணவனுக்குத் தச்சுச் சாமான்களை இனமாக அளித்துவிட்டு அவர் கூறினார்: "நான் மாணவனாயிருக்கும் போது எனக்கு ஒரு பென்ஸில் பரிசு கிடைத்தது. அதை எவ்வளவு பக்தியுடன் வைத்துக் காப்பாற்றினேன்! அந்தப் பென்சில் என் ஆசிரியர்கள் என் மீது கொண்ட அன்பிற்கு ஓர் அடையாளமே ஆகும் என்று கருதினேன். இந்த ஆயுதங்களைக் கொண்டு நீ உன் தொழிலை நடத்திக்கொள். நீயும் இதை எப்பொழுதும் பாது காத்துக்கொள்" என்றார்.

கடைசி முறையாக நான் அவரை 1942-ம் வருஷம் ஜூன் அல்லது ஜூலையில் சந்தித்தேன். அவரை அழைக்கப் புது டில்லியிலிருந்து ஸ்டேஷனுக்குச் சென்றிருந்தேன். பம்பாயிலிருந்து வந்தார். வண்டியிலிருந்து இறங்கியதும் ஜேபிலிருந்து ரூ. 360க்கு ஒரு செக்கை எடுத்து, "வெறும் கையுடன் காணக்கூடாதல்லவா?" என்று சொல்லிக்கொண்டே என்னிடம் கொடுத்தார்.

பம்பாயிலிருக்கும் ஓர் நண்பர் ஹரிஜன மாணவர்களுக்கு உதவியாகக் கொடுத்த தொகை அது. அதை மஹாதேவ தேசாய் கொண்டுவந்திருந்தார். "நான் உங்களை அழைக்க ஸ்டேஷனுக்கு வரப்போகிறேன் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டேன். அதற்கு அவர், "இது எனக்கென்ன தெரியும்? இந்த செக்கைக் கேளுங்கள். இது என் பெட்டிக்குள் தங்கினுல் தானே! இப்பொழுது கொஞ்ச நேரம் என் ஜேபிக்குள் தங்கியிருந்ததே அதிசயமாகும். பம்பாயில் இன்னும் ஒருவர் இருக்கிருர். அவரைக் கொண்டு இன்னும் இரண்டு மூன்று மாணவர்களுக்கு உதவியளிக்க ஏற்பாடு செய்கிறேன்," என்ருர்.

# காலஞ்சென்ற மஹாதேவ தேசாய்

## (பிரபு தயாள் வித்தியார்த்தி)

மகாத்மா காந்தியடிகள் மஹாதேவ தேசாயைக் குறித்து இவ்வாறு கூறியிருக்கிறார்: "அவசியமான பொழுது மஹாதேவ தேசாய் தன்னை முற்றிலும் மறந்து சூன்யமாய் விடும் திறமையைப் பெற்றிருந்தார். இது தான் அவருடைய வாழ்க்கையின் சிறந்த அம்சம் என்பது என் அபிப்பிராயம்."

மஹாதேவ தேசாயைக் குறித்த நினைவுகள் பல. அவைகளில் எதை எழுதுவது, எதை விடுவது? 1935-ம் ஆண்டுமுதல் நான் மஹாதேவ தேசாயுடன் நெருங்கியிருக்க நேர்ந்தது. நான் கடைசி முறையாக அவரை 1942-ம் வருஷம் ஆகஸ்டுமீ 9-ம் தேதி பம்பாயில் குவாலியர் டாங்க் மைதானத்தில் கண்டேன். காந்தியடிகளுடைய உபந்நியாசத்தை அவர் வெகு விரைவாகக் குறித்துக்கொண்டிருந்தார். இதுதான் கடைசிக் காட்சி என்று அப்பொழுது அறியாமற் போனேன்! அவர் காந்திஜியுடன் ஐக்கியமாயிருந்தபடியால் அவர் ஒரு மஹான் என்பதும் பேராசிரியர், எழுத்தாளர், பெரிய சிந்தனைசீலர் என்பதும் அவரே ஒரு ஸ்தாபனம் என்பதும் வெளியாகாமற் போயிற்று. இன்று அவர் மறைந்த பின் அவர் எப்படியெல்லாம் இருந்தார் என்று நன்கு புலப்படுகிறது. பண்டித ஜவாஹர்லால் நேரு அவரைக் குறித்துக் கூறியது மிகவும் பொருத்த

மாகும். "நம்மில் பலர் அவரே ஒரு ஸ்தாபனம் எனக் கருதி வந்தோம். அதிகம் பேசாதவரும், தகுதியுள்ளவரும், திறமை பெற்றவரும், உழைப்பாளியும், ஆணவமற்றவருமான அந்த உண்மை ஊழியரை நாம் அறிய அறிய அவரை அதிகமாகக் கௌரவிக்கவும் அதிகமாகப் பாராட்டவும் தொடங்கினோம். அவர் மறைந்தவுடன் ஒரு பெரும் அகழி நம்மைச் சூழ்ந்து கொள்வதுபோல் இருந்தது, வாழ்வே சூன்யமானது போலும் தோன்றியது. இது ஒரு தீராக் குறையாகும். நம் வாழ்க்கையிலும், வேலையிலும், நமது ஒரு அங்கத்தைப் போலவே எப்பொழுதும் கூட இருந்த ஒரு தோழர் நம்மைவிட்டுப் பிரிந்தார்! அவருடைய இடத்தைப் பூர்த்தி செய்வோரைக் காணோம்."

ஸ்ரீ ராஜகோபாலாசாரியார் கூறுகிறார்: "மஹாதேவ தேசாய் இல்லாத துக்கம் தீராத துக்கம். அவர் இல்லாதகுறை தீராத குறை. இன்று நம் வாழ்க்கையிலே காந்தியடிகள் இன்றியமையாதவர். மஹாதேவ தேசாய் மாண்டது அவருடைய உடலின் ஒரு முக்கியமான அங்கமே பட்டது போலாயிற்று. மஹாதேவ தேசாய் இல்லையேயென்று நம் மனம் வருந்தாத நாளே இல்லை. வேறெவரும் எய்த முடியாத நிலையை எய்தியிருந்த சிலரில் அவர் ஒருவர். நாம் சாதாரணமாகப் பிறருடைய வேலைகளுள் ஆழ்ந்து அவரை மறந்து மரணத்தாலேற்பட்ட துக்கத்தை மறந்துவிடுகிறோம். ஆனால் மஹாதேவ தேசாய் காந்தியடிகளின் உண்மைப் பணியின் மூலமாக தேசத்திற்கே பணிசெய்து சிறப்பெய்தியதால், அவர் இடத்தை வேறு யாரும் ஏற்கவியலாது."

காலம் சென்ற மஹாதேவ தேசாய் மிகவும் பெருமை வாய்ந்தவர் என்பதில் சந்தேகமில்லை. நாட்டுக்கு அவர் மிகவும் இன்றியமையாதவர். தேசப்பணியிலே அவர் தன் மதிப்பையும் மறந்து ஈடுபட்டார். தம் வித்வத்தைப் பற்றி அவர் நினைக்கவேயில்லை. இடைவிடாது தேச சேவையிலேயே ஆழ்ந்திருந்தார். காந்தியடிகளுக்குப் பணி என்பதற்குச் சரியானபிரதிபதம் தேசத்தொண்டே யல்லவா?

காந்தீய நூல்கள் இயற்றுவதில் மிகவும் கீர்த்தி பெற்றவர் மஹாதேவ தேசாய். காந்தியடிகளைக்குறித்து அநேக நூல்கள் இயற்றியுள்ளார். காந்தியடிகளைப் பற்றிய சிறு விஷயங்களையும் அவர் குறித்துவைத்துக் கொள்வார். இரவும் பகலும் ஏதாவது எழுதிக்கொண்டே யிருப்பார். ஒவ்வொரு நிமிஷத்தையும் பயன்படுத்திக் கொள்வார். அவர் ஒருபொழுதும் சோம்பலுக்கு அடிமை யானவரல்ல, புதுப் புதுப் புத்தகங்கள் வரவழைத்துப் படிப்பார். ஒவ்வொரு புத்தகத்தையும் கவனித்துப் படிப்பார். அஹிம்ஸையைக் குறித்து ஏதாவது காணப் பட்டால் உடனே அதைக் குறித்துக்கொள்வார். பெரியோர்களுடைய வாழ்க்கைச் சரித்திரத்தைப் படிப் பார். மார்க்ஸ் என்பவரின் நூல்களையும் படிப்பார். அவருடைய புத்தகாலயத்தில் எல்லாவகைப் புத்தகமும் காணப்படும். சில நாட்கள்வரை அவைகளைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை எனக்களித்திருந்தார். அங்கு ஹிந்தி, குஜராத்தி, ஆங்கிலப்புத்தகங்கள், கிராம சம்பந்த மானவை, ஆரோக்கிய சம்பந்தமானவை, சிறு பிள்ளை கள் சம்பந்தமானவை ஆகிய பலவகைப் புத்தகங்க ளிருப்பதைக் கண்டேன். மாதப்பத்திரிகைகளையும் அவர்

கவனமாய்ப் படிப்பார். படித்ததின் சாரத்தையெல்லாம் எடுத்துத்தன் கட்டுரைகள் மூலமாக அன்னியர்களுக் களிப்பார்.

காந்தியடிகளைப்பற்றிச் சொல்லவோ எழுதவோ தகுதி பெற்றவர் அவர் ஒருவரே எனக் கருதப்பட்டார். காந்தீயத்தைக் குறித்து அவர் எழுதியவைகளையெல்லாம் ஒன்று சேர்த்தால் அது ஒரு மிகப் பெரிய புத்தகமாகும். ஆகாகான் மாளிகையிலே அடைபட்டிருந்த சில நாட் களுக்குள்ளேயே அவர், "காந்தியடிகள் கடவுளென நம்புவது எதை?" என்ற ஒரு குறிப்பு எழுதி வைத் திருந்தார். அதில் ஒரு பகுதியை இங்கு கொடுக்கிறோம்:

"காந்தி அடிகள் கடவுளுக்குக் கணக்கற்ற பெயர்கள் என்கிறார். உலகத்தில் எத்தனை ஜீவன்கள் இருக்கின்ற னவோ அத்தனை பெயர்கள் கடவுளுக்கு உண்டென்று நாம் நம்புகிறோம். நானும் இதைச் சரியெனக் கருது கிறேன். இதனால்தான் நாம் கடவுளை பெயரற்றவர் என் றும் சொல்லுகிறோம்; கடவுளுக்குப்பல உருவங்கள் இருப் பதால்தான் நாம் அவரை உருவமற்றவர் என்கிறோம். அவர் பல முகங்களைக்கொண்டு பேசுவதால்தான் நாம் அவரைப் பேசாதவர் என்றும் சொல்லுகிறோம். இதே விதமாக நாம் கடவுளைக் குறித்துப் பற்பல விதமாகப் பேசுகிறோம். நான் முகம்மதிய மதத்தை ஆராய்ச்சி செய்தபொழுது அதிலும் கடவுளுக்குப் பல பெயர்கள் உண்டென்பதை அறிந்தேன்.

"கடவுள் அன்பு வடிவானவர் என்று சொல்பவர் களுடன் சேர்ந்து நானும் அப்படியே சொல்கிறேன். ஆனால், என்னுடைய உள்ளத்தில் கடவுள் அன்பு

வடிவமாயினும் முக்கியமாக அவர் சத்திய வடிவம் என்று கருதுகிறேன். மனிதன் தன் நாக்கைக்கொண்டு கடவுளைக் குறையின்றி விளக்கக் கூடுமாகில் கடவுள் ஸத்தியஸ்வரூபன்தான் என்பேன். நான்மட்டில் கடவுள் ஸத்தியஸ்வரூபன், கடவுள்தான் ஸத்தியம் என்ற முடிவுக்கு வந்துள்ளேன். இரண்டு வருஷங்களுக்குமுன் நான் இதைக் காட்டிலும் சற்று முன்னேறியிருந்தேன். அப்பொழுது நான் சத்தியம்தான் கடவுள் என்றேன். சத்தியம்தான் கடவுள் என்பதற்கும், கடவுள்தான் சத்தியம் என்பதற்கும் இடையேயுள்ள நுட்ப பேதத்தை நீங்கள் அறிவீர்கள். ஐம்பதுவருஷமாக நான் ஸத்தியத்தைத் தேடி இடைவிடாது அதன் அகண்ட ரூபத்தை நாடிய தன் பயனுக ஸத்தியம்தான் கடவுள் என்ற முடிவை எய்தியிருக்கிறேன். அன்பின் மூலமாகத்தான் நாம் ஸத்தியத்துக்கருகே செல்ல முடியும் என்பதை அறிந்தேன்.''

இப்பகுதியிலிருந்து மஹாதேவ தேசாய் காந்தியடிகளின் வாக்குகளை எவ்வளவு கவனமாகக் குறித்து வைத்துக்கொண்டு வந்தார் என்பது விளங்கும். உண்மையில் மஹாதேவ தேசாய் காந்தியடிகளை உலகத்திற் கெடுத்தளிக்கும் ஓர் பொக்கிஷமாய் விளங்கினுர். அவர் காந்தியடிகளைக் குறித்த ஒரு பெரிய புத்தகம் எழுதிக் கொண்டிருந்தார். காந்தியடிகளின் ஒவ்வொரு செயலிலும் அவர் ஈடுபட்டவர். காந்தியடிகள் எவ்வளவு இயக்கங்களைத் தொடங்கினுரோ அவ்வளவையும் தம் எழுத்துத் திறமையால் விவரித்துப் பொதுஜனங்களுக்கு எடுத்து விளக்கினுர். காந்தியடிகள் புதுப் புது ஸ்தாபனங்களைத் தொடங்கிய காரணங்களை அவர் வெகு அழகாக எடுத்துரைப்பார்.

காந்தீயம் நன்கு பரவ வேண்டும், காந்தியடிகளின் நோக்கங்களைப் பொதுஜனங்கள் நன்கு உணரவேண்டும் என்ற நோக்கம்கொண்டு மஹாதேவ தேசாய் எழுதி வந்தார் என்பதை அவருடைய எழுத்திலிருந்து தெரிந்து கொள்ளுகிறோம். அவர் கடைசிவரையில் காந்தீயத்துள் ஆழ்ந்திருந்தார். பல பாஷைகள் அறிந்தவர். ஆங்கிலத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றவர். அவர் எழுதிய ஆங்கிலக் கட்டுரைகளைப் படித்தால் எவ்வளவு அழகிய நடையில் ஆங்கிலம் எழுதக்கூடியவர் என்பது விளங்கும். குஜராத்தி அவருடைய தாய் மொழி. அம்மொழியை வளர்த்துச் சிறப்பித்தவர்களில் அவரும் ஒருவர். கடைசிக் காலத்தில் அவர் தம் தாய் மொழியில் பல நூல்கள் இயற்றினர். பண்டித ஜவாஹர்லால் நேருவினுடைய "என்கதை"யை மஹாதேவ தேசாய் ஆங்கிலத்திலிருந்து தாமே மொழிபெயர்த்தார். பண்டித நேரு எழுதியிருந்த ஆங்கில நூலைப் படித்து அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்து உடனே தாம் அதை மொழிபெயர்த்து விடுவதாகச் சொன்னர். தாமே மொழிபெயர்ப்பு வேலையைச் செய்துவந்தார். மலைபோல் குவிந்து கிடக்கும் காந்தியடிகளின் வேலை ஒரு புறம், 'என் கதை' போன்ற பெரிய ஆங்கிலப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பு மற்ருெரு புறம்; மஹாதேவ தேசாய் சற்றும் களைப்படையவில்லை. இரண்டு வேலைகளின் பாரத்தையும் தம் தோள்மீதே வகித்தார்.

காந்தியடிகளுடைய வேலையில் ஒரு குறையும் ஏற்படவில்லை. அவரைக் காணவந்தவர்களுக்கும் காந்தியடிகள் சம்பந்தமான விஷயங்களை அறிவதில் யாதொரு தடையும் ஏற்படவில்லை. பகலெல்லாம் காந்தியடிகளின் வேலையைக் கவனிப்பார். வந்த கடிதங்களுக்குப் பதில்

எழுதுவார். 'ஹரிஜனு'க்குக் கட்டுரை தயார் செய்வார். இரவில் ஆங்கிலப் புத்தகத்தை மொழி பெயர்ப்பதில் ஆழ்ந்துவிடுவார். புத்தகம் முழுவதையும் வெகு விரைவாக மொழிபெயர்த்துவிட்டார். ஒவ்வொரு நாள் இரவு இரண்டுமணிவரை எழுதிக்கொண்டிருப்பார். விடிந்தவுடனே 'ப்ரூப்' (Proof) திருத்த ஆரம்பித்து விடுவார். களைப்பு என்பதே இல்லாமல் வேலை செய்வார். வேறொருவருடைய உதவியின்றியே தன்னந்தனியே அவர் அதை முடித்தார். ஆங்கிலப் புத்தகத்தில் இருந்த சுவை மொழிபெயர்ப்பில் எவ்விதத்திலும் குறையக் கூடாது என்ற நோக்கத்துடன் எழுதிவந்தார். இம் மொழிபெயர்ப்புச் செய்தகாலம் கடும் வெயிற்காலம். அவருடைய உடலெல்லாம் வியர்வை கொட்டும். அவர் மாடிவெளியில் தரைமீது படுத்துக்கொண்டே எழுத்து வேலை செய்துவருவார்.

மஹாதேவ தேசாய் ஒரு நாளும் மேஜை நாற்காலி போட்டு எழுத்து வேலை செய்ததில்லை. தரை மீதோ பாய் மீதோ உட்கார்ந்துதான் அவர் எழுத்து வேலை யெல்லாம் நடக்கும். வாழ்க்கையை எளிதாக்கவேண்டு மென்ற நோக்கத்தைக் கைக்கொண்டார். சில சமயங் களில் வேலை அதிகமாகிவிட்டால் காணவருவோரிடம் கடிந்து பேசுவார். ஆனால் இதற்கு வருந்தி அவர்களி டம் சென்று மன்னிப்பும் கேட்டுக்கொள்வார். அவர் தங்குவது வர்தா நகரில் மகன்வாடி என்ற இடம். ஐந்து மைல் தூரத்தில் ஸேவா கிராமத்திலிருக்கும் காந்தியடிகளைக் காண, கடிதங்கள் முதலியவைகளை ஒரு பையில் போட்டுக்கொண்டு கால் நடையாகச் செல்வார். கடும் வெயிலாயிருக்கும். தலையில் ஒன்றுமணியாமல்

பையைக் கையிலேந்தி வயல்கள் வழியாகச் சேவாகிராமத்திற்குப் போவார். மழையாயிருக்கும்; 'ஓவர் கோட்'டை அணிந்து ஜலம் சொட்டச்சொட்ட மகன் வாடிக்குத் திரும்புவார். வந்த பிறகு சிறிது உணவு அருந்தித் தன் வேலையில் ஆழ்ந்துவிடுவார். மஹாதேவ தேசாய் ஒரு சிறந்த காரியதரிசியாக மட்டுமல்லாமல் ஓர் உயர்ந்த எழுத்தாளராயும் தலைவராயும் விளங்கினார். 'மௌலானா ஆஸாத்' 'கான் அப்துல் கபார்கான்' (எல்லைக் காந்தி), 'பர்டோலி சத்தியாக்ரஹம்' 'காந்தியடிகளின் சரித்திரம்' ஆகியவைகளை ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார். புஸ்தகங்கள் புது முறையிலே அமையவேண்டுமென்று முயற்சி செய்வார்.

வங்காளத்தில் மரண பரியந்தம் சிறைத் தண்டனை பெற்ற அரசியல் கைதிகளை விடுவிக்க மஹாதேவ தேசாய் செய்த முயற்சி பெருமுயற்சியாகும். அவர் இது விஷயமாக ஸர் நாஸிமுதீனைக் கலந்தார். கலந்து இந்த அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டிய அவசியத்தைத் திறமையுடன் எடுத்துரைத்தார். கைதிகளுடைய மனப்போக்கைக் காந்தியடிகளுக்கு நன்கு விளக்கினார். மிகவும் பெரிய வேலைகளையும் அவர் எளிதில் செய்யக்கூடியவர்; பயந்துவிடுவது அல்லது சோர்ந்துவிடுவது என்பதே அறியாதவர். 1936-லோ 1937-லோ நான் ஒரு நாள் அவரை, "அண்ணா, வங்காள ஆயுள் தண்டனை அரசியல் கைதிகள் எப்பொழுது விடுதலை பெறுவார்கள்?" என்று கேட்டேன். அவர் சொன்னார்: "காந்தியடிகளும் நானும் இந்த முயற்சியில்தான் ஈடுபட்டிருக்கிறோம். நான் வங்காளத்திற்குச் சென்று பிரதம மந்திரியைக் கண்டு பேசினேன். ஏதோ நலன் உண்டாகும் என்று

நம்புகிறேன். காந்தியடிகளுக்கும் இவ்வரசியல் நைதிகளைப்பற்றிய கவலை அதிகம். அவரும் தன்னாலியன்ற முயற்சிகள் செய்துவருகிறார். பொறுமையுடன் வேலை செய்வது நம் கடமை. வெற்றி கிடைப்பது கடவுள் செயல்.'' மஹா தேவ தேசாய் வேலை செய்தே நோயடைவார். சில வேளையில் மூர்ச்சையாய்விடுவார். அந் நிலையிலும் எழுத்து-படிப்புமட்டும் நிற்காது. ஒருமுறை அவர் நோயுற்றபொழுது காந்தியடிகள், "இவருக்கு இளைப்பாறத் தருணம் அளிப்பதற்காகவே இந்த நோய் வந்திருக்கிறது,'' என்றார். மஹாதேவ தேசாய் ஒரு வேலையும் செய்யாமல் ஓய்வெடுத்துக்கொள்வார் என்று காந்தியடிகள் நினைத்தார். ஆனால் மஹாதேவ் படித்துக்கொண்டோ 'ஹரிஜனு'க்காக ஏதாவது எழுதிக்கொண்டோ இருப்பார். தான் ஒன்றும் எழுதாவிட்டால் 'ஹரிஜனு'க்கு எழுதவேண்டிய வேலை காந்தியடிகளுக்கு ஏற்படும். இதனால் அவருக்கு சிரமம்உண்டாகும் என்பதே அவருடைய கவலை.

காந்தியடிகளுக்கு முடிந்தவரை வேலை குறைய வேண்டுமென்பதே அவருடைய கருத்து. அவரைக் குறித்து காந்தியடிகளும், "மஹாதேவ் என்னுள் ஆழ்ந்துவிட்டான். நான் வேறு அவன் வேறு என்ற எண்ணமே அவனுக்கில்லை என்று திண்ணமாகக் கூறுவேன்,'' என்றார்.

மஹாதேவ தேசாய் மிகவும் இரக்க முள்ளவர். இதில் யாதொரு அபிப்பிராய பேதமும் இராது. நான் பல முறை அருகிலிருந்து கண்டிருக்கிறேன். அன்னியர்களுடைய குறைகளை அமைதியுடன் கேட்பார். அக் குறைகளைத் தீர்க்க முயற்சி செய்வார். காந்தியடிகளுக்

கும் அறிவிப்பார். ஆச்ரமத்தில் இருந்த ஆண் பெண் சிறியோர், பெரியோர் ஆகிய அனைவரும் அவரை மிகவும் நேசித்து வந்தனர், தம்மைச் சேர்ந்தவர், இவரிடத்தில் தம் குறைகளைத் தாராளமாகத் தெரிவித்துக்கொள்ள லாம் என்ற முழு நம்பிக்கை கொண்டிருந்தனர்.

"மஹாதேவ் என்னுடைய துணிகளை யெல்லாம் வெளுப்பான். அக்காலத்தில் நான் மிகவும் பெரிய கதர் தலைப்பாகை அணிந்துகொள்வேன். பருமனான கதர் வேஷ்டியும் சட்டையும் அணிவேன். இவைகளை யெல்லாம் வெளுப்பான். அப்பொழுது அவன் செய்து வந்த வேலைக்குமுன இப்பொழுது நீங்களெல்லோரும் செய்யும் வேலை குழந்தைகள் விளையாட்டை யொக்கும். இது போதாதென அவன் எனக்காகச் சமைப்பான்; என்னைக் காண வருபவர்களைக் கண்டு பேசுவான்; கடிதப் போக்கு வரத்து நடத்துவான்; 'யங் இந்தியா' வுக்குக் கட்டுரை எழுதுவான்," என்றுகாந்தியடிகள் சுசிலா நையாரிடம் ஒருமுறை சொன்னார்.

மஹாதேவ தேசாயினுடைய கடைசிக் காலத்தைக் குறித்துச் சுசிலா நையார் இவ்வாறு எழுதுகிறார்: "1942-ம்வருஷம் அகஸ்டு மீ 15உ அவர் மற்ற தினங் களைக் காட்டிலும் சீக்கிரமாக எழுந்தார். காந்தியடி களுக்கு ஆரஞ்சுப் பழம் பிழிந்து தயார் செய்துவைத்தார். மற்றக் கூட்டத்தாருக்கு தேநீரும், டோஸ்டும் (நெருப்பில் வாட்டிய ரொட்டியும்) தயார்செய்து வைத்தார். டோஸ்ட் மிகவும் நன்றுயிருந்தது. எல்லோரும் மஹாதேவ தேசா யைப் புகழ்ந்தார்கள். தம் விளையாட்டு ஸ்வபாவத்திற் கிணங்க மஹாதேவ தேசாய்,"அப்படியானல் நான் எங்கே போனுலும் சமையல்வேலை கட்டாயம் கிடைத்து விடும்!"

என்றார். அதற்கு ஸ்ரீமதி சரோஜினி நாயுடு' 'மஹாத்மாவின் குடும்பத்திலே நீ பார்க்காத வேலை எது? சமையல் வேலை, சிற்றாள் வேலை, காரியதரிசி வேலை, யாவும் பார்க்கிறாய்!,' என்றார்.

மஹாதேவ தேசாய் குஜராத்திலுள்ள சூரத் ஜில்லாவில் பிறந்தவர். ஸரஸ் என்ற ஒரு சிறிய கிராமத்தில் 1892-ம் வருஷம் ஜனவரிமீ ஒரு எளிய குடும்பத்தில் பிறந்த அவர் எவ்வளவு உன்னத நிலையடைந்தார் என்பது எல்லோரும் அறிந்ததே. இவருடைய தகப்பனார் ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் வேலை செய்துவந்தார்; சாதாரண நிலையிலிருந்தார் எனலாம். தகப்பனார் மதப் பற்றுள்ளவர், விஷயங்களை அறிய வேண்டுமென்ற ஊக்கம் கொண்டவர். மஹாதேவ தேசாய்க்கு மதப் பற்றும் புத்தி நுட்பமும், பரம்பரைச் சொத்தாய்க் கிடைத்ததெனக் கூறலாம். பின் வாழ்க்கையில் அவ்வப்பொழுது அவருக்கு வாய்த்த பல நல்ல தருணங்களால் அவைகள் முன்னேற்றமடைந்தன. மாணவராயிருந்தபொழுது இவர் மிகவும் புத்திசாலியாய் விளங்கினார். சூரத் ஜில்லாவிலே பல கிராமப் பள்ளிகளிலே இவர் கல்வி பயின்றார். பிறகு சூரத் ஜில்லா ஹைஸ்கூலில் படித்துவிட்டு பம்பாயில் எல்பின்ஸ்டன் காலேஜில் வந்துசேர்ந்தார். காலேஜிலும் இவர் மிகவும் புத்திசாலியாகக் கருதப்பட்டார். இவருக்குப் பலமுறை பல ஸ்காலர்ஷிப்களும் கிடைத்தன. படிப்பு முடிந்தவுடன் மஹாதேவ தேசாய்க்கும் சர்க்கார் உத்தியோகம் பார்க்க வேண்டுமென்ற விருப்பம் உண்டாயிற்று. அச்சமயம் லோகமான்ய பாலகங்காதர திலகருடைய கிளர்ச்சி வெகு மும்முரமாக நடந்து வந்தது. தேசத்தில் புத்துயி

காணப்பட்டது. மஹாதேவ தேசாய் அரசியல் முயற்சிகளை மிகவும் நுட்பமாகக் கவனித்துக்கொண்டுவந்தார். உலகில் எங்கு என்ன நடக்கிறது என்பதைக் கவனித்துக்கொள்வார். காலேஜில் படித்துக்கொண்டிருக்கும் நாட்களிலேயே சுவாமி விவேகானந்தருடையவும், சுவாமி ராமதீர்த்தரினுடையவும் நூல்களைப் படித்தார். வாழ்க்கையில் அவருக்கு ஓர் ஒளி காணப்பட்டது. நீதி, தர்மம், நன்னடத்தை முதலிய பழக்கங்கள் அவருக்கு குடும்பப் பழக்கமாய்க் கிடைத்தன. இந்நூல்களின் ஆராய்ச்சி அப்பழக்கங்களை வளர்த்தது. வங்க மாகாணத்தைத் துண்டாடியதின் பயனாக உதித்த சுதேசி முதலிய கிளர்ச்சிகளை மஹாதேவ தேசாய் ஊக்கத்துடன் கவனித்தார். அரசாங்கத்தின் அடக்குமுறையும், லோக மான்ய திலகருக்குக் கிடைத்த தீவாந்திர சிட்சையும் அவருடைய மனதைக் கலக்கின. அவருக்குப் பதினெட்டு வயதாயிருக்கும்பொழுது காங்கிரஸைப் பார்க்க அலஹாபாத் சென்றார். காங்கிரஸ் வேலைகளில் அவர் மிக ஊக்கம்கொண்டிருந்தார். மஹாதேவ தேசாய் எல். எல். பி. தேறிவிட்டார். பிறகு என்ன செய்வதென்ற யோசனை உண்டாயிற்று. மாணவராயிருக்கும் பொழுதே தம் வாழ்க்கை மிகவும் உன்னத நோக்கத்தைப் பெறக்கூடியதா யிருக்கவேண்டுமென விரும்பினார். அவ்வுயர் நோக்கத்தையடைய வழி யென்ன வென யோசிக்கலானார். தக்க தருணம் எப்பொழுது கிடைக்கும் என்று பார்த்துக்கொண்டிருந்தார். சர்க்கார் உத்தியோகமும் வக்கீல் தொழிலும் சிறந்தவைகளாகக் கருதப்பட்ட காலம் அது. மஹாதேவ தேசாய் இவ்விரண்டு தொழில்களுக்கும் தகுதிபெற்றவர். ஆங்கிலம், குஜ

ராத்தி ஆகிய இரண்டு மொழிகளிலும் நல்ல திறமை பெற்றவர். முதலில் அவர் 'ஓரியண்டல் ட்ரான்ஸ்லேடர் ஆபீ'ஸில் வேலை செய்தார். கோர்ட்டுகளில் வக்கீல் வேலையும் பார்த்துவந்தார். பணம் சம்பாதிப்பதற்கு இவ்விரண்டும் நல்ல வேலைகளே. பிறகு "கோவாப்பரேட்டிவ்" இலாகாவில் இன்ஸ்பெக்டராக அமர்ந்தார். இங்கும் நன்கு பணம் சம்பாதிக்கத் தருணம் வாய்த்தது. ஆனால், மஹாதேவ தேசாய்க்கு இந்த வேலைகளிலெல்லாம் மனம் செல்லவில்லை. தகப்பனாருக்கும் வேலை முடிந்தது. குடும்பப் பொறுப்பெல்லாம் இவரே ஏற்கவேண்டிய சமயம் வந்தது. சம்பாதிக்கும் வழியைத் தேடவேண்டியதாயிற்று. ஆனால், எந்த உத்தியோகத்திலும் பொய் ஆடம்பரத்தையும் முகஸ்துதியையும் கண்டு சுதந்திர விருப்பம் கொண்ட மஹாதேவ தேசாயின் மனது அமைதிபெறவில்லை. இவருடைய அஞ்சாநெஞ்சுக்கும் அவ்வேலைக்கும் பொருந்தவில்லை. இவருடைய தூய மனம் இந்தக் கெட்ட பழக்கங்களில் ஈடுபடவில்லை. ஆகையால், வக்கீல் தொழிலிலும் சர்க்கார் உத்தியோகங்களிலும் இவர் அதிக நாள் நிலைக்கவில்லை. இவர் சென்ற இடங்களில் வாழ்க்கை முறைக்கு மாறான முறையைக் கண்டால் ராஜிநாமாச் செய்து விட்டு வெளியேறிவிடுவார். இவ்வாறு உயர் நோக்கங்களை எய்தும் முயற்சியில் ஈடுபட்டார். 1916-ல் இவருக்கும் காந்தியடிகளுக்கும் பரிச்சயம் ஏற்பட்டது. 1917-ஹு மேமீ 7-உ இவர் காந்தியடிகளுடைய ஆச்ரமத்தில் சேர்ந்துகொண்டார். அது முதல் 1942 வரையில் இவர் காந்தியடிகளுடன் இடைவிடாது நிழலைப்போல் இருந்துவந்தார்.

இது ஒரு நீண்ட சரித்திரம். தேசியப் போர்களிலே இவர் முக்கியமாகக் கலந்துகொண்டார். காந்தியடிகளின் வழியைப் பின்பற்றினர். 1921-ல் முதன்முறை சிறை சென்றார். ரூ. 100 அபராதமும் விதிக்கப்பட்டது. சிறைக் கஷ்டங்களை அனுபவித்தார். சிறைகளில் நடைபெறும் மிருகத்தனமான நடவடிக்கைகள் இவருடைய மனதை மிகவும் துன்புறுத்தின. 1923-ல் தண்டனைக் காலம் முடிந்தவுடன் வெளிவந்தார். அதற்குப் பிறகு இவர் பலமுறை சிறை சென்றார். காந்தியடிகள் இல்லாத வேளையில் மிகவும் பொறுப்பு வாய்ந்த பல வேலைகளை ஏற்றுக்கொண்டார்.

'யங் இந்தியா', 'நவஜீவன்' முதலிய வாரப் பத்திரிகைகளை நடத்தி நல்ல பெயரெடுத்தார். பண்டித மோதிலால் நேருவுடன் சேர்ந்து உழைத்தார். "இன்டிபெண்டெண்ட்" என்ற ஆங்கிலப் பத்திரிகையை நடத்தினர். அரசாங்கத்தார் அதைப் பறிமுதல் செய்ய இவர் அதைக் கையால் எழுதி வெளியிடத் தொடங்கினர். பல மாதங்கள் இவர் 'லக்னோ' சிறையில் பண்டித நேருவுடன் இருந்தார்.

தேசத்தின் சிறந்த தலைவர்களுடன் இவருக்கு நல்ல பழக்கமுண்டு. அவர்களுடன் நெருங்கிப் பழகியவர். சர்தார் வல்லபாய் படேல், தேச ரத்ன ராஜேந்திர பிரசாத், பண்டித ஜவாஹர்லால் நேரு, ராஜாஜி முதலிய சிறந்த தேச பக்தர்களும் அவ்வப்பொழுது இவரை யோசனை கேட்பார்கள்.

சர்தார் படேல் இவருக்குச் சொந்த சகோதரரைப் போல் ஆகிவிட்டார். இவர் எழுதிய கட்டுரைகளை மக்கள் மிகவும் ஆவலுடன் படித்தார்கள்.

"1917-ம் வருஷம், மகாதேவ தேசாய் காந்தி அடிகளுடன் சேர்ந்த பிறகு ஒரு நாள் கடும் வெயிலில் இருவரும் எங்கேயோ போய்க்கொண்டிருந்தார்கள். ஓரிடத்தில் காந்தியடிகள் களைத்துப் படுத்து அயர்ந்து விட்டார். மகாதேவ தேசாய் இவருக்கு விசிறி வீசிக் கொண்டிருந்தார். அவரும் களைத்திருந்தபடியால் தூங்கி விட்டார்.

"கண் விழித்துப்பார்க்கவே, காந்தியடிகள் விசிறி வீசிக் கொண்டிருந்தார். வெப்பம் மிகவும் அதிகமாய் இருந்ததால் மகாதேவ தேசாய் தூங்கியதும் விசிறி வீசுவது நிற்கவே காந்தியடிகள் விழித்துக்கொண்டார். உடனே அவர் விசிறியை எடுத்து அன்புகொண்ட தாயைப் போல் வீச ஆரம்பித்தார். உண்மையில் காந்தியடிகள் மகாதேவ தேசாய்க்குத் தகப்பனுகவே இருந்து வந்தார்" என்று ஓரிடத்தில் சுசீலா நையார் எழுதியிருக்கிருர்.

மகாதேவ தேசாயின் மரணத்தால் தான் அடைந்த வருத்தத்தைக் காந்தியடிகள் சுசிலா நையாரிடம் இவ்வாறு தெரிவித்துக்கொண்டார்: "மகாதேவ் எனக்கு பாஸ்வல் (Boswell) ஆகவேண்டும் என்று விரும்பினுன். ஆனுல் அவனே முதலில் மாண்டுவிட்டான். இதைக் காட்டிலும் அவனுக்கு வேறு என்ன நன்மை கிடைக்கும்? அவன் போய் விட்டுச் சரித்திரம் எழுதும் பொறுப்பை எனக்களித்துவிட்டான்! இதுதான் தெய்வத்தின் லீலை!"

வேருெரு சந்தர்ப்பத்தில் காந்தியடிகள், "சிறியோர் தாய்தந்தையர்களுக்கு முன்பாக இறக்க விரும்புவதைக் காட்டிலும் இரக்கமில்லாமை வேருென்றுண்டோ?

இது அவர்களுடைய சுயநலமாகும்" என்றார். பிறகு தத்துவத்தை விளக்கி இவ்வாறு கூறினார்: "மரணம் தக்க சமயத்தில்தான் வரும். சமயத்திற்கு முன்பாக ஒரு காலமும் வராது என உறுதியுடன் கூறுவேன். நான் அன்னியர்களை இதை நம்பச் செய்யத் திறமையற்றிருக் கலாம். ஆனால், இவ்வுலகில் தன் கடமையைப் பூர்த்தி செய்வதற்குமுன் ஆணாயினும் சரி பெண்ணாயினும் சரி சாவதே கிடையாது. மகாதேவ் ஐம்பது வருஷகாலத் தில் நூறு வருஷத்திய வேலையைப் பூர்த்திசெய்தான்; எனவே இளைப்பாறப் போயிருக்கிறான். அதற்கு அவனுக்கு உரிமை உண்டு." மகாதேவ தேசாய் தனது அற்ப ஆயுளில் மிகவும் அதிகமாகப் பாடுபட்டார். அவருடைய உடலோ பேனாவோ ஒரு பொழுதும் இளைப்பாற வில்லை. அவருடைய பேனாவில் மை உலர்ந் ததே இல்லை. 1942-ம் ஆண்டில் அவர் உடல் பல முறை நோய்வாய்ப்பட்டு நலம் பெற்றது. தேசீயப் போர் தீவிரமாக ஆக அவருக்கு வேலையும் அதிக ரித்தது. ஓய்வெடுக்க அவகாசமே இல்லாமற் போயிற்று. ஆகஸ்டுப் புரட்சி ஏற்படாவிடில் அவர் மாண்டிருக்க மாட்டாரோ என்றும் தோன்றுகிறது. இந்த ஆகஸ்டுப் புரட்சிக்காக அவர் சிறையிலிருந்தே தம் உயிரைப் பலி யளிப்பது புனிதமெனக் கருதினார். காந்தியடிகள் மரணம் வரை உபவாசம் செய்துவிடுவாரோ என்ற கவலையும் அவரை அச்சுறுத்தியது. அவருடைய மனம் இன்னும் பல விஷயங்களால் புண்பட்டது. தேசத்தில் எங்கும் பரவியிருந்த அடக்குமுறை அவரை மிகவும் அதிகமாக வருத்தியது. இக்காரணங் களால்தான் 1942-ஆு ஆகஸ்டுமீ 15-ம் தேதி காலையில் அவர் நம் எல்லோரையும் விட்டுப் பிரிந்து போய்

விட்டார். அச்சமயம் ஆகாகான் மாளிகையில் காணப் பட்ட வருத்தக் காட்சியை சுசீலா நையார் இவ்வாறு எழுதி யிருக்கிறார்:

"ஆகாகான் சிறையில் காந்தியடிகள் தினந்தோறும் காலை சுமார் 7½ மணிக்குத் தோட்டத்தில் உலாவச் செல்வார். பதினைந்தாம் தேதி எங்கள் யாவருடனும் மஹாதேவ தேசாயும் உலாவ வந்தார். வீடு திரும்பிய பின் நான் காந்தியடிகளுடைய உடலை 'மாலிஷ்' செய்யச் சென்றேன். சிறைச்சாலைகளின் பெரிய உத்தி யோகஸ்தராகிய ஐ. ஜி. பி. வந்திருந்தார். அவரைக் காண மஹாதேவ தேசாய், அன்னை கஸ்தூரிபாய், மீராபாய் ஆகிய மூவரும் ஸ்ரீமதி சரோஜினி நாயுடுவின் அறைக்குச் சென்றார்கள். அவர்களின் சிரிப்பும் எங்களுக்குக் கேட்டது. திடீரென அமைதி நிலவிற்று. யாரோ என்னைக் கூப்பிட்டார்கள். நான் ஐ. ஜி. பி. யைக் காணவேண்டுமென்று கூப்பிடுகிறார்கள் என்று நினைத்தேன். நான் புறப்பட்டுக் கொண்டிருக்கையிலேயே அன்னை கஸ்தூரிபாய் பரபரப் புடன் ஓடிவந்து 'சுசீலா! ஓடி வா, மஹாதேவ் மயக்க மாய் விழுந்திருக்கிறான்!' என்றார். நான் ஓடினேன். அவர் ஒரு படுக்கைமீது படுத்திருந்தார். உடல் சல வைக் கல்லைப்போல் வெளுத்துக் கிடந்தது. அங்கங்க ளனைத்தும் சுருங்கியிருந்தன. அவர் நின்றுகொண்டு பேசுகையிலேயே, அவர் உடம்பு ஏதோ செய்கிறதென் றும், தலைசுற்றுகிறதென்றும் சொன்னாராம். உடனே அவரைப் படுக்கவைத்து என்னைக் கூப்பிட்டார்களாம். நான் ஒரு நிமிஷத்திலே அங்கே போய்ச் சேர்ந்தேன். நாடியைப் பார்த்தேன். அது இருக்கும் இடமே காண

வில்லை. இதயம் அடிக்கிறதா என்று பார்த்தேன். அதுவும் நின்றிருந்தது. உடனே, “காந்தியடிகளைக் கூப்பிடுங்கள்,” என்று சொல்லி, இதயத்துக்குத் தென்பு கொடுக்கக்கூடிய மருந்து கொண்டுவரச் சொன்னேன். ஐ. ஜி. பி. தம்மால் இயன்றதையெல்லாம் கொண்டுவந்து என்னிடம் கொடுத்தார். நான் இரண்டு இன்ஜெக்ஷன்கள் கொடுத்தேன். ஆனால் பயனொன்றும் காணப்பட வில்லை. இதற்குள் காந்தியடிகள் வந்துவிட்டார். அவர் படுக்கைக் கருகில் நின்றுகொண்டு, ‘மஹாதேவ், மஹாதேவ்,’ என்று கூப்பிட்டார். மஹாதேவ் பதிலே அளிக்கவில்லை. காந்தியடிகள் வருத்தத்துடன், ‘அவன் ஒருமுறையாகிலும் கண்ணைத் திறந்து என்னைப் பார்த்தால், போகமாட்டான்’ என்றார். ஆனால் மஹாதேவ் தேசாய் கண்ணைத் திறக்கவேயில்லை. நான் வைத்தியக் கல்வி பெற்றிருந்தும் வைத்தியத்தால் ஆகாத ஓர் நலம் காந்தியடிகளால் ஆகுமோ என்ற ஆசைகொண்டிருந்தேன். ஆனால், விந்தைகளும் அதிசயங்களும் எந்தக் காலத்தில் நிகழ்ந்தனவோ. இக் காலத்தில் இல்லையென்பது மட்டும் திண்ணம். அங்கங்கள் சுருங்கி இருந்ததும் முனகிக் கொண்டிருந்ததும் நின்றன. ஆட்டம் எல்லாம் ஓய்ந்துவிட்டது. சிவில் சர்ஜன் வந்து தலையை அசைத்துக்கொண்டு போய் விட்டார். அன்னை கஸ்தூரிபாய் அழுகைக் குரலில் மஹாதேவ் எப்படி இருக்கிறான் என்றார். நான் என்ன பதில் சொல்வேன்? போய்விட்டார் என்றேன். ஓ வென்றழுதார், கதறினார். காந்தி அடிகள் வந்து அவரைத் தேற்றினார். காந்தியடிகளுக்கும் உண்டான வருத்தத்திற்கு ஓர் அளவு இல்லை. ஆனால் அவர் தைரியம் கொண்டிருக்க வேண்டியிருந்தது. ‘நாம் எல்லோரும்

பிரார்த்தனை செய்து பிணத்தைக் குளிப்பாட்டலாம் என்றார். நாங்கள் எல்லோரும் உட்கார்ந்து கீதை பதினெட்டாம் அத்தியாயத்தைப் பாராயணம்செய்தோம். 'வைஷ்ணவ ஜனதோ' என்ற பாட்டைப் பாடினோம். ராமநாமம் ஜபித்தோம். காலையில் மஹாதேவ் தேசாய் முகக்ஷவரம் செய்துகொண்ட அறை காலி செய்யப்பட்டது. சவத்தைக் காந்தி அடிகள் குளிக்குமிடத்திற்கு எடுத்துச் சென்றோம். நான் உதவி செய்ய அவர் அதைக் குளிப்பாட்டினார். இந்த வேலைகள் எல்லாம் செய்யும் பொழுது காந்தி அடிகளுடைய கைகள் நடுங்குவதைக் கண்டேன். நான் அளவற்ற துக்கம் அடைந்தேன். அவர் நாலு பக்கங்களிலும் சுற்றிப் பார்த்துவிட்டு, "மஹாதேவ் கைதி நிலைமையில் மாண்டதால் அவனுக்குக் கைதிக்குத் தகுந்த கிரியைகளைச் செய்ய வேண்டும்" என்றார். நாங்கள் பிணத்தை சிறை ஆடைகளால் போர்த்தி வெளியே எடுத்துச் சென்றோம்.

"சூபரின்டெண்டெண்டு ஏராளமாகப் பூக்கள் வரவழைத்தார். மீராபாய் அவைகளைக் கொண்டு சவத்தின் நான்கு பக்கங்களிலும் நன்கு அலங்கரித்தார். அவர் கொஞ்சம் சந்தனம் அரைத்துக் கொடுத்தார். காந்தி அடிகள் அதை மஹாதேவ தேசாய் நெற்றியில் இட்டுவிட்டு பக்கத்திலேயே உட்கார்ந்து விட்டார். தஹனக்கிரியை முடியும் வரையில் காந்தி அடிகளும் நானும் மாறிமாறி கீதை பாராயணம் செய்துகொண்டிருந்தோம். காந்தி அடிகள் உட்கார்ந்திருந்த பக்கத்தில் மஹாதேவ தேசாயின் கண் பாதி திறந்திருந்தது. இது அவருக்கு காந்தி அடிகளிடத்து இருந்த பக்திக்கும் அளவற்ற அன்புக்கும் அறிகுறியாயிருந்தது. மாண்ட

பிறகும் அவர் தம் குருவைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார் போலும்!''

இனி, கடைசிக் கிரியையின் விவரங்களைச் சற்று கேளுங்கள். போலீஸ் உத்தியோகஸ்தர்கள் போலீஸ் காரர்களையும், பிராம்மணர்களையும் ஒரு லாரியில் அழைத்துக்கொண்டு வந்தார்கள். அவர்கள் சவத்தை வெளியே எடுத்துச் சென்று தாங்களே தஹனம் செய்ய விரும்பினார்கள். ஆனால் காந்தி அடிகளுக்கு அது இஷ்டமில்லை. அவர், "எந்தத் தகப்பன், தன் மகனின் சவத்தை அறியாதவர்களிடத்தில் கொடுக்க இணங்குவான்? மஹாதேவை நான் என் மக்களைக் காட்டிலும் அதிகமாக நேசித்து வந்தேன். தஹனக்கிரியை செய்ய விரும்புகிறேன். ஆனால் அரசாங்கத்தார் வெளியே கொண்டுபோக முடியாதென்றால் சவத்தை நண்பர்களிடம் கொடுத்துவிடுகிறேன்; ஜெயில் அதிகாரிகளிடம் ஒருக்காலும் கொடுக்கமாட்டேன்'' என்றார். கொலைகாரர்களைத் தூக்கிட்ட பின்பு சவத்தை பந்துக்களுக்கோ, நண்பர்களுக்கொ கொடுத்துப் பகிரங்கமாகக் கிரியைகளை நடத்தவிடும் இந்த அரசாங்கம் அஹிம்சை விரதம் பூண்ட மஹாதேவ தேசாய் போன்றவரின் சவத்தை அவ்வாறு செய்யத் துணியவில்லை. அந்தச் சவம் நண்பர்களுக்கோ உறவினர்களுக்கோ கொடுக்கப்படுவது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அச்சமயம் அங்கு பரவியிருந்த வியாகுலத்திற்கு ஓர் அளவில்லை. நாங்களெல்லோரும் பயந்துகொண்டிருந்தோம். காந்தியடிகள் என்ன செய்வார்? சற்று நேரம் யோசித்துக் கொண்டிருந்தார். கடைசியில் அவர், "நான் என் மகனின் மரணத்தை ஒரு அரசியல் பிரசினையாக்கவில்லை.

நான் இந்தச் சவத்தை வெளியே எடுத்துச்சென்று தஹனக்கிரியை நடத்துவதை அரசாங்கத்தார் தடுப்பார்களாயின் அல்லது சவத்தை நண்பர்களிடம் கொடுப்பதையும் அவர்கள் எதிர்ப்பார்களாயின் நான் அதை இங்கேயே செய்துவிடுகிறேன்,'' என்றார். இது அவருக்குத் தோன்றிய ஒரு புது யோசனையாகும். நாளது வரை சவத்தை வீட்டிலேயே தகனம் செய்வது என்பதை ஒருவரும் கேட்டதில்லை. ஐ. ஜி. பி. மாடிக்குச் சென்று இதைக் குறித்து பம்பாய் அரசாங்கத்தாரிடம் டெலிபோனில் பேசினார். பம்பாய் அரசாங்கத்தார் இந்திய அரசாங்கத்தாரின் அபிப்பிராயத்தை அறிய விரும்பினார்கள். கடைசியாக அவர் கீழே வந்தார். அந்தக் கட்டடத்திற்குள்ளேயே தகனக்கிரியை நடத்த அரசாங்கத்தார் ஒப்புக்கொண்டனர். நாங்கள் யாவரும் நிம்மதியடைந்தோம். ஸ்ரீமதி நாயுடு இடம் தேர்ந்தெடுக்கக் கீழே சென்றார்.

"ஐ. ஜி. பி. காந்தியடிகளை, 'மஹாதேவ தேசாயின் குடும்பத்தினருக்கு இந்தச் செய்தியை அறிவிக்கவிரும்புகிறீர்களா ?' என்று கேட்டார்.

"'ஒரு விதமான மாறுதலுமில்லாமல் அனுப்பப்படுமானால் நான் ஒரு தந்தி கொடுக்க விரும்புகிறேன்' என்று காந்தி அடிகள் பதில் கூறினார். அவர் தந்தியை என்னை எழுதச் சொன்னார். 'நான் வருத்தத்துடன்...' என்று ஆரம்பித்தார். அதை உடனே நிறுத்தினார். 'இப்படிப்பட்ட உத்தமமான மரணத்திற்கு நான் வருந்துவானேன் ? வேண்டாம், வேண்டாம். வருத்தத்துடன் என்பதை அடித்துவிடு. மஹாதேவ், திடீரென மாண்டான் என்று மட்டும் எழுது என்றார்.

இதை எழுதித் தயவு செய்து எக்ஸ்பிரஸ் தந்தியாக கொடுங்கள் என்று ஐ. ஜி. பி. யிடம் கொடுத்தோம். பல வாரங்கள் சென்று இது தபால் மூலமாக மஹாதேவ தேசாயினுடைய குடும்பத்திற்குப்போய்ச் சேர்ந்ததெனப் பிறகு எங்களுக்குத் தெரியவந்தது.

"காந்தியடிகள் தடியை ஊன்றிக்கொண்டு மஹாதேவ தேசாய்க்கு அக்கினிக்கிரியை நடத்திய காட்சி உருக்கமாயிருந்தது. கடைசியில் அக்கினிக்கிரியைக்கு வேண்டிய ஏற்பாடுகளனைத்தும் முடிந்தன. ஒரு கையில் தடியும் மற்றொரு கையில் நெருப்புச் சட்டியும் ஏந்தி காந்தி அடிகள் சவத்திற்குப்பின் சென்றார். பிராம்மணர்கள் மந்திரம் படித்தார்கள். சடங்குகளெல்லாம் முற்றுப் பெற்றன. சவம் சிதைமீது வைக்கப்பட்டது. காந்தி அடிகள் சிதையில் தீ வைத்தார். விரைவிலேயே தீ கொழுந்துவிட்டெரிந்தது. அன்னை கஸ்தூரிபாய் மெய்ம் மறந்து சற்றுதூரத்தில் உட்கார்ந்து சிதையைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார். "மஹாதேவ், என் குழந்தாய்! நீ எங்கிருந்தாலும் சுகமாயிரு. மஹாதேவ், நீ மட்டும் ஏன் போய் விட்டாய்? நான் இங்கேயே இருந்துவிட்டேனே!" என்று இரண்டு கைகளையும் கூப்பி அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தார். அவ்விடத்தில் அந்த முகாம் சூபரிண்டெண்டெண்டும் எரவாடா சூபரிண்டெண்டெண்டும் ஐ. ஜி. பி. யும் உட்கார்ந்து எல்லோருக்கும் அன்பார்ந்த மஹாதேவ தேசாயினுடைய சவம் சாம்பலாவதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கடைசியில் நாங்களெல்லோரும் எங்களுடைய ஜாகைக்குத் திரும்பினோம். மாலை ஐந்துமணி ஆகிவிட்டது. காலை எட்டு ஒன்பது

மணிக்குள் அவர் மரணமடைந்தார். 'செய் அல்லது இற என்ற மந்திரத்தை மஹாதேவ தேசாய் நன்கு பரிபாலித்தான். இந்தத் தியாகத்தால் இந்தியா விரைவில் விடுதலைபெறும்' என்று காந்தி அடிகள் கூறினர்.''

# அவர் இருக்கிறார்!

## (சரோஜினி நாயுடு)

இன்று மஹாதேவ தேசாய் மரணமடைந்து நான்கு வருஷங்களாகின்றன. நான் அவரை நினைக்கும்பொழுதெல்லாம் என் மனம் எப்படியோ ஆகிவிடுகிறது. ஒரு புறம் இன்பகரமான நினைவுகள் குவிகின்றன. மற்றொரு பக்கம் அடக்க முடியாத வருத்தம் உண்டாகிறது. அவருடைய நட்புப்பெற்றவர்களெல்லாம் புண்ணியசாலிகள்—அவருடன் உறவாடுவதே ஒரு இன்பம்.

மஹாத்மா காந்தியின் இனிய அழைப்பைப் பெற்றபொழுது மஹாதேவ தேசாய்க்கு வயது இருபத்தைந்து. அப்பொழுதுதான் அவர் உலக வாழ்க்கையை ஆரம்பித்தார். அவர் என்னென்ன எண்ணங்கள் கொண்டிருந்தாரோ, எத்துறையிலும் வெற்றிபெறுவதற்கு வேண்டிய திறமை கொண்டிருந்தார். திறமை கொண்ட தன் அருமை வாலிபத்துடன் காந்தியை அண்டியபொழுது நான் அவரைக் கண்டேன். அவர் தன்னுடைய கல்வி, எழுத்துத்திறமை எல்லாவற்றையும் காந்தியடிகளுக்குச் சமர்ப்பித்தார். அது முதல் இருபத்தைந்து வருஷ காலம் சிரத்தையுடனும் பக்தியுடனும் அந்த இணையற்ற எஜமானனுக்கு மாசற்ற தொண்டு புரிந்துவந்தார்.

மஹாத்மாவுக்கு அன்பார்ந்த சிஷ்யராயிருந்து அவர் செய்த ஊழியங்கள் பலவகைப்பட்டவை.

நான் மஹாதேவ தேசாயை நினைக்கும்பொழுது என் கண்முன் பல காட்சிகள் வருகின்றன: 1. சபர்மதி ஆச்ரமத்தில் முக்கியமான ஆச்ரமவாசியாயிருந்தது; இதே விதமாக வர்தா சேவாகிராமம் ஆச்ரமங்களிலும் அவர் விளங்கியது; இவ்விடங்களிலெல்லாம் அவர் சிரித்த முகத்துடனும் விளையாட்டுக் குறும்புக்ளுடனும் எல்லோருடனும் பழகியது. 2. புருவத்தை நெறித்துக் கொண்டு அவர் எழுத்துவேலையில் ஈடுபட்டிருப்பது; தன்னுடையவோ தன்னுடைய குருவினுடையவோ இனிய எண்ணங்களை அழகிய மொழியில் எழுதுவது. 3. சாம்பல் நிறமான சால்வை போர்த்துக்கொண்டு மிகவும் சிக்கலான அரசியல் விஷயத்தைப்பற்றிப் பேச டில்லியில் வைஸ்ராய் மாளிகையின் படிக்கட்டின்மீது ஏறிக்கொண்டிருத்தல். 4. லண்டனில் பக்கிங்ஹாம் அரண்மனையில் மன்னர்பிரானைக் காண மாசற்ற தூய வெள்ளைக் கதர் உடுத்தி அவர் காந்தியடிகளுடன் சென்றது. 5. அன்பும் பொறுமையுமே உருவாக அவர் ஐரோப்பா, அமெரிக்கா, மத்தியக் கீழ் நாடு, கீழ் நாடு முதலான பற்பல தேசங்களினின்று வந்த யாத்திரிகளுக்குத் தன் எஜமானருடைய சிறந்த உபதேசங்களை எடுத்து விளக்குவது; காந்தியடிகளுடைய கருத்தைத் தூய ஸ்படிகத்தைப்போல் பிரதிபிம்பிக்கச் செய்வது. இவைகளெல்லாம் கண்முன் காணப்படுகின்றன.

ஆனால் இவைகளைக் காட்டிலும் மனதை வருந்தச் செய்வது அவர் மரணமடைந்ததினுடையவும் அவர் மரணமடைந்த சில மணி நேரங்கள் வரை நிகழ்ந்த நிகழ்ச்சிகளுடையவுமான நினைவாகும். நாங்கள் ஆகஸ்டுமாதம் 9-ம்தேதி கைது செய்யப்பட்டு

பூனுவிலுள்ள ஆகாகான் மாளிகைக்குக் கொண்டுபோகப் பட்டோம். இதுவே எங்கள் சிறைச்சாலை. நாங்கள் கைது செய்யப்பட்ட முதலே மஹாதேவதேசாய் ஒரு பெருங்கவலை கொண்டார். மஹாத்மா பன்முறை சொல்லிக்கொண்டிருந்த மரணம்வரை உபவாசத்தை சிறைவர்சத்திலேயே ஆரம்பித்து விடுவாரோஎன்ற பயமே இந்தக்கவலைக்குக் காரணம். ஆகஸ்டு மாதம் 14-ம் தேதி இரவு எங்கள் சிறை மாளிகையே அமைதியாயிருந்தது. அவர் என் அறையில் வந்து வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார். அவருடைய பேச்சில் ஏதோ ஒரு அவசரம் காணப்பட்டது. அவருக்குள்ள சமயமே மிகவும் குறைவாயிருப்பதைப்போல் காணப்பட்டது. அவர் பேச்சு சுருக்கமாயும் தெளிவாயும் இருந்தது. தன்னைப்பற்றியும் தனது அன்பார்ந்த மகனைப்பற்றியும் மனைவியைப்பற்றியும் பேசினுர். ஆனுல் அவர் முக்கியமாய்ப் பேசினது தெய்வமே மானிட வடிவாய் எழுந்தருளியிருப்பதாக அவர் கருதிய காந்தி அடிகளைப் பற்றித்தான். அன்று அவர் பேசியபொழுது ஏதோ ஒரு மரண நினைவு கொண்டவர்போலக் காணப்பட்டார். ஆனுல் மறுநாள் காலை அவர் அடைந்த மாறுதல் ஆச்சரியமாயிருந்தது. வெகு குதூகலமாயிருந்தார். காந்தி அடிகளுடன் தோட்டத்தில் உலாவச் சென்ருர். திரும்பி வந்தவுடன் என்னிடத்தில் அவர், "ஏனோ தெரியவில்லை, இன்று நான் அளவற்ற ஆனந்தமடைந்திருக்கிறேன்" என்ருர். சிறிது நேரத்திற்குப் பிறகு அவரைக் காணவந்திருந்த வைத்தியரைக் காணவே வேடிக்கைப் பேச்சுப் பேசிக்கொண்டே என் அறைக்குள் வந்தார். ஒரு நிமிஷத்திற்குள்ளேயே புன்சிரிப்புடன்

"என் தலை சுற்றுகிறது" என்றார். நாங்கள் உணர்வதற்குள்ளேயே உயிர் துறந்தார். "சற்று கண்ணைத்திறவேன் ஒருப்பேச்சுப் பேசேன்" என்று பலர் கதறியது வீணாயிற்று.

மனமுடைந்த குரு தம் அன்பார்ந்த அந்த சிஷ்யருக்குச் செய்த கிரியைகளை எடுத்துரைக்க என் பேனாவுக்குத் திறமையில்லை. நடுங்கிய கைகளுடன் சலவைக்கல்போல் ஜில்லிட்ட உடலை அவர் அன்னியர் உதவியின்றி ஸ்நானம் செய்வித்தார், சந்தனம் இட்டார். இவ்வாறு செய்யும்பொழுது அவர், "மஹாதேவ், இதெல்லாம் நீ எனக்குச் செய்வாய் என்று அல்லவோ நினைத்தேன்! இப்பொழுது நான் உனக்குச் செய்ய நேர்ந்ததே!" என்றார் மெதுவாக. ஆகஸ்டு மாதம் 15-ந்தேதி மத்தியானம் பெரும் வருத்தத்தில் ஆழ்ந்த ஒரு சிறு கூட்டம் மஹாதேவ தேசாயின் சவத்தைத் தொடர்ந்து சென்றது. மாளிகை மைதானத்தின் ஒரு மூலை சுடுகாடாக மாறிற்று. .............. சூரியோதயத்தில் கொழுந்துவிட்டெழுந்த ஒரு தீ சூரியாஸ்தமன சமயத்தில் சாம்பலாய் அவிந்துவிட்டது. அந்தச் சாம்பலும் ஆற்றில் அடங்கி விட்டது.

மஹாதேவ தேசாய் நம் கண்முன் இல்லை. ஆனால் அவர் உண்மையில் இறந்து விட்டாரா? தம் எஜமானுடைய அன்பில் அவர் உயிர் கொண்டில்லையா? பல தியாகங்கள் செய்து, வெற்றிகரமாகப் பல பணிகள் செய்து, தேசத்தினுடைய இதயத்தில் என்றும் அவர் இருக்கிறார்!

---

# கடைசிக் காலம்

(பியாரேலால்)

அன்னை கஸ்தூரிபாய், மகாதேவ தேசாய் இவ்விருவரும் 1942-ம் ஆண்டில் நிகழ்ந்த கொடிய செயல்களின் அறிகுறிகளை முன்னதாகவே உணர்ந்தார்கள். ஆகாகான் மாளிகைகுள் வந்த நாள் முதலே அன்னை கஸ்தூரிபாய் தாம் அங்கிருந்து உயிருடன் வெளிவரப் போவதில்லை என்று கருதிவந்தார்கள். அப்படியே நடந்தது. ஆனால் மகாதேவ தேசாய்க்குத் தம்முடைய காலம் முடிந்ததென்ற எண்ணம் இல்லை. தமது குருவுக்கு அபாயம் நேரிடுமோ என்ற கவலையே அவருக்கு அதிகம். அவருக்கு எப்பொழுதுமே தம் குருவினுடைய நினைவே; அவர் காந்தி மயமாகி அவருக்கெனவே உயிர்வாழ்ந்து வந்தார். தாம் சிறை சென்றால் உபவாஸம் செய்ய நேரிடும் என்று காந்தியடிகள் கூறியது முதல் மகாதேவ தேசாய்க்கு அதே பயம். அவ்வாறு நேரிடாமல் இருக்க வேண்டுமென்று அவர் மிகவும் பாடுபட்டு முயற்சி செய்தார். ஒரு நாள் மாலை அவர் என்னிடம் 'உலாவப் போவோம் வா'' என்றார். “ஏதோ ஒரு கவலை பெரிய பாரமாய் என்னைத் துன்புறுத்துகிறது. அதைக் குறித்துப் பேசலாம்''என்றார். “சரி'' என்றேன் நான். இவ்விதமாக ஒரேவிதமான எண்ணங்களைக்கொண்டு அவைகளைப் பற்றி நாங்கள் இருவரும் கலந்து இதற்கு முன்னும் பேசிக்கொண்டதுண்டு. எங்களுக்குப் பயத்தையளித்த நிகழ்ச்சி நேர்ந்துவிட்டால் அதனால் விளையக்கூடியவை

களைப்பற்றி விவரமாகப் பேசினோம். எங்கள் இருவருடைய அபிப்பிராயமும் ஒத்திருந்தது. "சரி, இந்த விஷயத்தை யெல்லாம் இன்றிரவு காந்தியடிகளுக்கு எடுத்துரைக்கப் போகிறேன். நீயும் அப்படியே செய்" என்றார். இதையொட்டி இரண்டு குறிப்புக்கள் தயார் செய்யப்பட்டு முன்ஏற்பாட்டின்படி காந்தியடிகளிடம் கொடுக்கப்பட்டன.

### முன் எச்சரிக்கை

நாங்கள் திரும்பி வந்துகொண்டிருக்கையில் "நீங்கள் எவ்வளவோ திறமைகொண்டவராயிற்றே! இப்பெருந் துன்பத்தை நீக்க ஒரு வழி தேடக்கூடாதா?" என்றேன் நான். அவர் பெரு மூச்சு விட்டு, " இப்பொழுது நாம் தெய்வசித்தத்தை எதிர்க்கவேண்டும்போல் காணப்படுகிறது" என்றார். நான் மறுபடியும் அவரை முயற்சி செய்யச் சொன்னேன். பழைய விஷயங்களைக் குறித்தெல்லாம் நாங்கள் பேசினோம். அவர் முகத்தில் எப்பொழுதும் தாண்டவமாடும் புன்சிரிப்பு மறைந்தது. திடீரென அவருக்கு மயக்கம் வந்தது. பாதையிலே ஒருபுறம் உட்கார்ந்தார். வந்தது போலவே அந்த மயக்கம் திடீரென மறைந்தது. "ஏனோ திடீரென என் உள்ளமே காலியாய் விட்டது போல் இருந்தது. எதைக் குறித்தும் நினைக்கவே முடியவில்லை" என்றார். வீட்டுக்கு வந்தபிறகு பரீக்ஷித்துப் பார்த்ததில் நாடி பலஹீனப்பட்டு மிக வேகமாய் ஓடிக்கொண்டிருந்தது. ரத்த ஓட்டம் தணிந்திருந்தது. மிக அதிகமான கவலையால் ஏற்பட்ட இருதய நோய் இது என்பதை நாங்கள் உணரவில்லை. இரண்டு மாதங்களுக்குப் பிறகு இதே நோயால் அவர் மரணம் அடைந்தார்.

பிறகு "இந்தியாவை விட்டுப் போ" என்ற போராட்டம் வலுத்தது. "செய் அல்லது இற" என்ற உறுதியுடன் போராட்டம் நடத்தவேண்டியதாயிற்று. இது கட்டாயம் வரும் என்பதை உணர்ந்தார் தேசாய். தம் உடல் நிலையைச் சீர்செய்யத் தீர்மானித்தார். சிறைவாசத்தில் நோய்வாய்ப்படுவது ஸத்தியாக்ரஹிக்கு வெட்ககரமானது என்று அவர் காந்தியடிகளிடம் கற்றவரல்லவா? சுதந்திரத்திற்குக் கடைசியானதும் மிகப் பெரியதுமான போராட்டத்தில் தமது சிறைவாசம் குற்றமற்றதா யிருக்கவேண்டுமென்று அவர் விரும்பினர். அவர் என்னையும் பம்பாய்க்கு வரச் சொன்னர். எனக்குப்போக விருப்பமில்லை. "முக்கியமான ஒரு கடமையை நாம் எப்படி விட்டு விடுவது? இப்போரில் நாம் காந்தியடிகளுடனேயே இருக்க வேண்டும். நாம் அதற்குத் தக்க உடல்நிலையில் இருக்க வேண்டும்" என்ருர். என்னிடம் சொல்லாமலே என்னையும் பரீக்ஷிக்க ஒரு வைத்தியரிடம் அவர் ஏற்பாடு செய்திருந்தார். அவரும் எத்தனையோ பரீக்ஷைகளுக்குட்பட்டார். ஆனல் அந்தோ! அவருடைய ஹிருதயம் மட்டும் பரீக்ஷிக்கப்படவில்லை. மற்றப்பரீக்ஷைகள் எல்லாம் முடிந்த மறுநாள் ஸர்தார் வல்லபாய் படேல் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொள்ள வர்தா சென்ருர். வழியில் பல முக்கியமான விஷயங்களைப்பற்றிப் பேசவேண்டுமென்று அவர் தேசாயை அழைத்துச் சென்ருர். ஹிருதயப் பரீக்ஷை நடவாமலே போயிற்று.

**கடைசி யாத்திரை**

**கா**ந்தியடிகள் பம்பாய்க்கு ஆகஸ்டு மாதம் 5-ம் தேதி புறப்படுவதாக நிச்சயிக்கப்பட்டது. மகாதேவ

தேசாய் ஒரு மகா யாத்திரைக்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்தார். தம் வசமிருந்த காகிதங்களை யெல்லாம் சரிப்படுத்தினர். தேனீயைக்காட்டிலும் அதிக உழைப்புடனும் அன்புடனும் அவர் திரட்டி வைத்த தேனை யொத்த டயரிகள், குறிப்புப் புத்தகங்கள் போன்ற முக்கியமான காகிதங்களையெல்லாம் பாதுகாப்புக்காக வேறு இடங்களுக்கு அனுப்பினர். தம் மகனைத் தம்முடன் பம்பாய்க்கு அழைத்துச் சென்ருர். இம் மகனைக் காலேஜில் சேர்க்கவேண்டுமென்று பல நண் பர்கள் கூறினர்கள். காலம் சென்ற புலாபாய் தேசாயும் சொன்னர். ஆனல் இது மகனுக்கும் பிடிக்கவில்லை. மகனை ஆகஸ்டுப் போராட்டத்தில் ஈடுபடச் செய்வதிலும் சிறந்ததோர் கடமை இல்லை எனக் கருதினர் தந்தை. ஆகஸ்டு மாதம் 4-ம் தேதி ஸேவா கிராமப் புதிய கல்விச் சங்கத்தில் ஒரு கூட்டம் நடந்தது. காந்தியடிகள் அதில் பேசினர். காந்தியடிகளுடைய சொற்பொழிவின் கருத்தை மஹாதேவ தேசாய் தம் மகனைக்கொண்டு ரயிலிலேயே ஹிந்துஸ்தானியில் எழுதச்சொன்னர். அதை நன்ருகச் செய்ததைக் குறித்துத் திருப்தி அடைந்தார். அதை ஜாக்கிரதையாகப் பார்வையிட்டு 100-க்கு 75 மார்க்குக் கொடுத்ததாகச் சொன்னர். இதற்கு அடுத்த மூன்று நாட்கள் ஓயாத அலுவல்கள். ஒரே குழப்பம்.

## ஆகஸ்டு 8-ம் தேதி

**நா**ங்கள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட் டத்தில் இருந்தோம். திடீரென என்னைப் பார்த்து அவர் “இன்றிரவு என்ன நேரிடுமோ தெரியவில்லை. ஜனங்கள் பலவிதமாகப் பேசிக்கொள்கிருர்கள். நேற்று

காந்தியடிகள் முக்கியமான ஒரு சொற்பொழிவாற்றினர். இன்றும் பேசப்போகிருர். இவ்விரண்டையும் பிழையின்றி எழுதிவைத்தல் மிகவும் அவசியமாகும். நேற்றைய விஷயத்தை நீ இப்பொழுது கவனி. இன்றைய விஷயத்தை நான் வீட்டுக்குச் சென்று கவனிக்கிறேன்'' என்ருர்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் 11-மணிக்கு முடிந்தது. பிறகு நான் அவரைக் கண்டபொழுது அவரைச் சூழ்ந்து பலர் இருந்தார்கள். அவருக்கு ஒரு நிமிஷ ஓய்வும் கிட்டவில்லை.

“சரி, இனி என்ன செய்வது ?'' என்றேன்.

“காந்தியடிகள் கைதுசெய்யப்படுவது நிச்சயம். நாம் இருவரும் ஒன்றுகூடி நம்மால் இயன்றதைச் செய்வோம்'' என்ருர்.

இதற்கு அரைமணி நேரம் முன்பு அவருடைய மகன் நாராயணனும், கனு காந்தியும் அவருக்கு ஊக்கமளித்தார்கள். நாராயணன் சிரித்துக்கொண்டே சொன்னன்: “இனி நாங்கள் உங்கள் பேச்சை எல்லாம் கேட்கப் போவதில்லை, அப்பா! காந்தியடிகள்தான் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் இனி அவரவருக்கு அவரவரே தலைவர் என்று சொல்லிவிட்டாரே! இனி நாங்கள் சுதந்திரமாய் விட்டோம்'' என்ருன்.

“காந்தியடிகள் என்ன செய்யப்போகிருர் என்பதை நீ உணர்ந்தாய். நீ என்ன செய்யப்போகிருய் என்பதை நான் உணர்ந்தேன். உன் சுதந்திரத்தை நான் அபகரிக்கப் போவதில்லை'' என்ருர்.

ஒருவரும் உணராத விதத்தில் தகப்பனாரிடமிருந்து சுதந்திரம் பெற்றான் அவன் என்பதை யாரும் உணரவில்லை! அந்தப் பையன், இதை நினைத்தே இருக்க மாட்டான்.

இதற்குப் பிறகு நேர்ந்த நிகழ்ச்சிகளை, அவர் குறித்து வைத்ததை எடுத்துத் தருவதே நலம். அவர் மரணமடைந்த பிறகு இந்தக் குறிப்புக்கள் கிடைத்தன :

"9—8—42. காலை பிரார்த்தனை முடிந்தவுடன் நான் காந்தியடிகளிடம், 'பல விதமான பேச்சுகள் நடக்கின்றன. டெலிபோன் செய்திகளும் வந்துகொண்டிருக்கின்றன. இன்று இரவே கைது செய்யப்படலாம் என்கிறார்கள். கைதிகள் அனைவரும் ஆகாகான் மாளிகையில் வைக்கப்படுவார்கள் என்றும் அதற்கு முட்கம்பிகள் போட்டுவருகிறார்கள் என்றும் ஸ்ரீ அரவிந்த பக்வாஸா செய்தி கொண்டுவந்திருக்கிறார்' என்றேன். நாங்கள் போகும் இடம் மிகவும் அழகானதென்றும் ,தாம் அங்கு இருக்க மிகவும் விரும்புவதாகவும் எப்படியும் நம்மைக் காணவருவதாகச் சொன்னார் என்பதையும் தெரிவித்தேன். இதைக் கேட்டு காந்தி அடிகள் "நான் நேற்று இரவு பேசிய பிறகு அவர்கள் என்னைக் கைது செய்யமாட்டார்கள்" என்றார். ஆனால் என் மனம நிம்மதியடையவில்லை. சர்தார் படேல் எங்கிருக்கிறார் என்று டெலிபோன் மூலமாக அறிய முயற்சி செய்தேன். டெலிபோன் கெட்டுப்போயிருந்தது. அடுத்த பங்களாவிலிருந்து டெலிபோன் செய்து பார்க்க ஸ்வாமி ஆனந்தை அனுப்பினேன். வெளியே சென்ற அவர் உடனே திரும்பிவந்து கைதுசெய்யப் போலீஸ்

கமிஷனர் வந்திருப்பதாகத் தெரிவித்தார். போலீஸ் சூபரிண்டெண்டு வந்து கைதுசெய்தார். எனக்கும் மீராபாய்க்கும் அரெஸ்டு வாரண்டு இருந்தது. அன்னை கஸ்தூரிபாயும் ப்யாரேலாலும் விரும்பினால் காந்தி அடிகளுடன் இருக்கலாம் என்று இருந்தது. ஸ்டேஷனில் ஒரு ஸ்பெஷல் தயாராயிருந்தது. காரியக்கமிட்டி அங்கத்தினரனைவரும், பம்பாய் மாகாணக் கமிட்டி அங்கத்தினர்களும் அதற்குள் முன்னமேயே சேர்க்கப்பட்டிருந்தனர்.

“நாங்கள் சிஞ்சுவாட் என்ற ஸ்டேஷனில் இறக்கப்பட்டோம். முதலாகக் காரியக்கமிட்டி அங்கத்தினர்கள் இறக்கப்பட்டார்கள். மௌலானாவிடத்திலும் ஜவாஹரிடத்திலும் நடந்த பேச்சில் உபவாசத்தைப்பற்றிப் பிரஸ்தாபம் நடந்தது. அது கடைசியாகக் கைக்கொள்ள வேண்டியது எனக் கருதப்பட்டது. அஹிம்சைக்கும் ரகசியத்திற்கும் ஏன் பொருத்தமில்லை என ஜவாஹர்லால் நேரு கேட்டார். “நீ உன்னிஷ்டம்போல் அஹிம்சைக்கு அர்த்தம் செய்து கொள்ளலாம்” என்று காந்தி அடிகள் விடையளித்தார்.

“சிஞ்சுவாட் ஸ்டேஷனிலிருந்து நாங்கள் மோட்டாரில் எடுத்துச் செல்லப்பட்டோம். மற்றவர்கள் லாரியில் ஏற்றிச் செல்லப்பட்டார்கள். காந்தி அடிகள் கொண்டிருந்த துன்பமும் மனவருத்தமும் அவருடைய முகத்தில் நன்கு வெளிப்பட்டன. மேதாவை அவர்கள் நடத்திய முறை இத்துன்பத்தை அதிகரிக்கச் செய்தது. அவருடைய கையையும் காலையும் பிடித்துத் தூக்கி அவர்கள் லாரிக்குச் சென்றார்கள்; அங்கு ஒரு சார்ஜெண்டு அவரை உள்ளே தள்ளினான்.

"மாளிகையை அடைந்தபிறகு நான் காந்தி அடிகளுக்கு 'மாலிஷ்' கொடுத்தேன். எத்தனை வருஷங்களுக்குப் பிறகு நீ இந்த வேலை செய்கிறாய் என்று அவர் என்னைக் கேட்டார். மாலிஷிக்குப் பிறகு ஒன்றரைமணி நேரம் அவர் தூங்கினார். இதற்குப் பிறகு மத்தியானமும் அவர் வைஸ்ராய்க்குக் கடிதம் எழுதத் தொடங்கி எனக்கு இரவு காட்டினார். ஆனால் எனக்குத் தூக்கம் வந்துகொண்டிருந்தது. *9-25* மணிக்கு அவர் மௌனம் தொடங்கினார்.

## ஆகாகான் மாளிகையில் 6-ம் நாள்

"*10—8—42.* வைஸ்ராய் கடிதத்தில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. சார்ஜெண்டு விஷயமாகவும், பத்திரிகை வேண்டுமென்றும் கவர்னர் லும்லேக்கு மற்றொரு கடிதம் எழுதப்பட்டது. அக்கடிதம் மூன்று முறை திருத்தி எழுதப்பட்டது. மேதா விஷயத்தை அதிகமாக வற்புறுத்தக்கூடாது என்று நாங்கள் எல்லோரும் சொன்னோம்.

"சிவில் சர்ஜன் வந்தார், காந்தி அடிகளின் ரத்த ஓட்டம் *142/88*ஆக இருந்தது. எடை *104* பவுண்டு.

"லும்லேயினுடைய கடிதத்தை மறுநாள் அனுப்பலாமென்று தெரிவித்துக்கொண்டேன். வேறொரு கடிதம் யோசனை செய்து அனுப்பப்படவேண்டுமென நிச்சயிக்கப் பட்டது.

"ஆடு சத்தியாக்ரஹம் செய்தது. இந்நிலையில் அந்த ஆட்டின் பாலைக் கறப்பது சரியல்லவென்று காந்தி அடிகள் சொன்னார். மீராபென் மிகவும் சிரமப்பட்டு அவரை மறுத்தார்.

"11-8-42. கடிதத்தைத் திருப்பிப் படித்துக்கொண்டிருக்கையில் அன்னை கஸ்தூரிபாயும் சுசீலாவும் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் பல செய்திகள் அறிவித்தார்கள். நாளெல்லாம் வெளியில் நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். லும்லேயினுடைய கடிதம் மாலையில் அனுப்பப்பட்டது. இரவு காந்தி அடிகள் ஜோன்ஸ், டால்ஜில் முதலியவர்களிடத்தில் தம் அனுபவங்களை எடுத்துரைத்தார். நான் கர்னல் ஷாவிடம் பேசிக்கொண்டிருந்தேன்.

"12—8—42. வைஸ்ராய் கடிதத்தில் பல மாறுதல் செய்து அதை நன்றாக எழுதுவதற்கு சுசீலாவிடம் கொடுத்தேன். அரசாங்கத்தார் எனக்கு 7 வருஷம் கொடுத்தால் நான் எவ்வளவோ செய்யலாம் என்று காந்தி அடிகள் சொன்னார். நான் "இந்தியா சுதந்திரம் பெற்றபிறகுதான் உங்களுடைய உண்மையான வேலைகள் ஆரம்பிக்கும்" என்று சத்தியமூர்த்தி சொன்னதை ஞாபகப்படுத்தினேன்.

"13-8-42. சுசீலா எழுதிய வைஸ்ராய் கடிதத்தில் நான் பல யோசனைகளைக் குறித்துக்கொண்டேன். காந்தி அடிகள் அதை மறுபடியும் படித்துப் பார்த்தார். மீராபாயின் யோசனைப்படி விஷயத்தை நன்கு விளக்குவதற்காக இரண்டு மூன்று வாக்கியங்கள் மாற்றப்பட்டன. டெலியாலஜி (Teleology) என்ற சொல்லின் அர்த்தத்தைப் பற்றி வாதம் நடந்தது. எந்த இடத்தில் எந்தச் சொல் இருக்கவேண்டுமென்பதைப் பற்றியும் வாதம் நடந்தது. இரண்டு கடிதங்களும் எல் (L) என்ற எழுத்தில் ஆரம்பிக்கும் லார்டு லும்லேக்கும், லார்டு லின்லித்கோவுக்கும் அனுப்பப்பட்டன. "இவ்விரு எல்

(L) களுக்கு முன் H. E. சேர்க்கவேண்டியது தான் குறை" என்று ஸ்ரீமதி சரோஜினி நாயுடு கூறினர்*.

"சுசீலா, அன்னை கஸ்தூரிபாய்க்கு மருந்து எழுதிக் கொடுத்தார். அந்த மருந்துச் சீட்டை சூபரிண்டெண்டெண்டு மருந்து ஷாப்புக்கு அனுப்பப்போனார். நான் காந்தி அடிகளிடம், "அன்னையின் பெயரை மேலே கொண்ட இச்சீட்டை இவர் அனுப்புகிறார். இது, அன்னை இங்கிருக்கிறார், நோய்வாய்ப்பட்டிருக்கிறார் என்ற செய்தியை வெளிப்படுத்துவதாகும்" என்றேன். "நீ சூபரிண்டெண்டெண்டிடம் சொல்லி அவர் விரும்பினால் பெயரை அடித்துவிடலாம் என்று சொல்" என்று காந்தி அடிகள் விடையளித்தார். சூபரிண்டெண்டு என் யோசனைக்கு நன்றி பாராட்டினார். பெயர்களை அடித்துவிட்டுச் சீட்டை அனுப்பினார்.

"சில இரும்புக் கம்பிகளைக் கொண்டு நான் ரொட்டி காய்ச்சும் சட்டமொன்று செய்தேன்.

"14-8-42. வைஸ்ராய் கடிதம் அனுப்பப்பட்டது.

"சர்தாரைப் பற்றியும் ப்யாரேலாலைப் பற்றியும் இன்று விசாரித்தோம். சர்தாரைப் பற்றித் தகவலே இல்லையென பதில் அளிக்கப்பட்டது. எனவே, அவர் சௌக்கியமா யிருக்கிறாரென்றே நினைத்துக்கொள்ள வேண்டும். ப்யாரேலால் பூனாவில் இருக்கிறாரா இல்லையா என்று தெரியாதாம்."

* H. E. என்பது கவர்னர், வைஸ்ராய்—இருவரின் பெயர்களின் முன் மரியாதையைக் குறிக்கச் சேர்க்கும் எழுத்துக்கள். H. E. L. L. இந் நான்கு எழுத்துக்களும் கூடி நரகம் என்ற அர்த்தம்கொண்ட Hell ஆகும்.

## முடிவு

இத்துடன் குறிப்புக்கள் அரைகுறையாக நின்று விட்டன. முப்பது வருஷகாலமாக ஓய்வின்றி உழைத்த உழைப்பும் முடிந்தது. உயிராகிய விளக்கு 15-ம் தேதி காலை அணைந்தது இவரைப் போல் தவருமல் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணி நேரமும் நிகழ்ச்சிகளைக் குறித்து வைத்துக்கொண்ட வேறு ஒருவரைத் தான் நான் அறிவேன். அவர் ஜம்னுலால் பஜாஜ். அவர் வர்தாவிலிருந்த தன் மருமகள் வீட்டிற்குச் செல்வதற்குமுன் குறித்துவைத்ததே அவருடைய டைரியினுடைய கடைசிக் குறிப்பாகும்.

மஹாதேவ தேசாய் மரண மடைந்த ஒரு மாதத்திற்குப் பிறகு நான் ஆகாகான் மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அவருடைய காகிதங்களில் மேற்கூறிய குறிப்புக்களைத் தவிர 5-ம் தேதி யன்று புதிய கல்விச் சங்க ஆசிரியர்கள் முகாமில் காந்தி அடிகள் அளித்த கடைசிப் பொதுச் சொற்பொழிவின் குறிப்புகளும் காணப்பட்டன. பம்பாயில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடியபொழுது அவர் இதை முடிக்க முடியவில்லை. ஆகையால் தருணம் வாய்த்தவுடன் ஆகாகான் மாளிகையில் இதை முடித்தார்.

இனி, காந்தி அடிகளின் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தின் சொற்பொழிவுகள். 9-ம் தேதி கைது செய்யப்படுவதற்கு முன் அவர் என்னை 7-ம் தேதியே சொற்பொழிவை முடித்து விட்டாயா என்று கேட்டார். நான் பாதிதான் எழுதியிருக்கிறேன், நீங்கள்?—என்று அவரைக் கேட்டேன். நான் கேட்டது அவர்

எழுதிவிடுவதாகச் சொன்ன மற்ெருரு உபந்நியாசத்தை "நான் இரண்டு மணி வரையில் விழித்துக்கொண்டு டெலிபோனைக் கவனித்துக்கொள்ள வேண்டியிருந்ததால் அதைத் தொடக்கூட முடியவில்லை" என்று தன் குறிப்புப் புத்தகத்தை என்னிடம் கொடுத்து கைதுசெய்ய வந்த போலீஸ் கமிஷனரைக் காண காந்தி அடிகளினுடைய அறையிலிருந்து வெளியே சென்றார். அவர் ஒரு சிறு கடனையும் தீர்க்காவிடில் அமைதிபெருத இயற்கை யுள்ளவ ரல்லவா? காவலில் இருந்த ஆறு நாட்களிலேயே தம் நினைவைக் கொண்டு காந்தி அடிகள் ஆகஸ்டு 7, 8 தேதிகளில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் ஆற்றிய சொற்பொழிவுகளை அழகாய்க் குறித்து வைத்திருந்தார். இதைக் காட்டிலும் அழகான குறிப்புக்களை நான் இதுவரையில் கண்டதில்லை.

அவர் காந்திஜியுடன் இருந்தது தம் வாழ்க்கையைச் சிறப்பிக்கவேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன்தான். காந்தி அடிகள் அறிந்து கூறியபடி அவர் தம் ஆத்மா பக்தி மயமாகிவிடவேண்டும் என்ற ஒரே நோக்கம் கொண் டவர். "இதை நாடியே அவன் என்னை அணுகினன். இது கைகூடவில்லை என்றுணர்ந்து தன்னைப் படைத்தவரை அண்டிப் பார்க்கலாம் என்று என்னை விட்டுப் போய் விட்டான் போலும்!" என்றார் காந்தி அடிகள்.

# விற்பனைக்குத் தயார்

| | | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|
| 1. | சுதந்திரமா, பாகிஸ்தானா? | ... | 2 | 0 | 0 |
| 2. | *Freedom or Pakistan* | ... | 2 | 0 | 0 |
| 3. | செலிமா பேகம் அல்லது மொகல் மன்னரின் அந்தப்புரம் | ... | 2 | 0 | 0 |
| 4. | புரட்சி செய்த பேனா வீரர் | ... | 3 | 0 | 0 |
| 5. | ***Just a peep into the Muslim mind*** | ... | 5 | 0 | 0 |
| 6. | நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் | ... | 4 | 0 | 0 |
| 7. | திவ்யப் பிரபந்த ஸாரம் (மாணவர் பதிப்பு) | ... | 2 | 8 | 0 |
| 8. | ,, (பரிசுப் பதிப்பு) | ... | 5 | 0 | 0 |
| 9. | காந்தீய நவநீதம் (மஷ்ருவாலா) | ... | 5 | 0 | 0 |
| 10. | *Rent Control Act (sold out)* | ... | 1 | 4 | 0 |
| 11. | *Essential Articles Control Act* | ... | 2 | 0 | 0 |
| 12. | கைலாஸம்—மானஸரோவர் | ... | 2 | 0 | 0 |
| 13 | ஸ்வர்ண லதா (வங்க நவீனம்) | ... | 6 | 0 | 0 |
| 14. | இன்பத்துளி (சிறுகதைத் தொகுதி) | ... | 2 | 0 | 0 |
| 15. | தேச ஜோதி (சரித்திரக் கதைகள்) | ... | 2 | 8 | 0 |
| 19. | மகாதேவ தேசாய் (நினைவு மாலை) | ... | 2 | 0 | 0 |
| 17. | சித்திரமும் சொற் சித்திரமும் | ... | 5 | 0 | 0 |
| 18. | *Pictures & Pen-Pictures* | ... | 5 | 0 | 0 |
| 19. | ஜி. யு. போப்பையர் | ... | 1 | 4 | 0 |
| 20. | கம்ப சித்திரம்—பால காண்டம் (சொற்பப் பிரதிகளே உள்ளன) | ... | 5 | 0 | 0 |

**தமிழ்நாடு வெளியீடு**

*33, பிராட்வே, மதராஸ்.*

பிரகதி ஸ்டுடியோவில் தயாராகிறது!



முதல் இந்திய ஹைகோர்ட்டு ஜட்ஜ்

# "சர் டி. முத்துசாமி ஐயர்"

முதல் தர நோக்கங்களைச் சித்திரிக்கும்

:: முதல் தரமான தமிழ்ப் படம் ::

டைரக்ஷன்: V. கோபாலன், B.A.